# வெற்றிமணி

ESTD 1950

Vettimaniy

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர் மலிவு விற்பனை!

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகை மாளிகை



Tel:0231 162377
Königswall 16 (Am HBF)
44137 Dortmund
Germany
Fax:0231 147836

# கனடாவில் "வன்னி வீதி"

ஊரை அடைதல் என்பது
உயிரை அடைதல் போல !

Dr IN

பூக்களைப் பார்த்து
பூரிக்கும் வேர்கள்

தமிழகத்தை
ஆண்டவர்





S.K.Silks & Gold Paraadise

16 Anniversary

Dortmund / Straßenfest der Tamilen முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை!

08.09.2018 சனிக்கிழமை மட்டும்

அனைத்து ஆடைகளும் 50% முதல் 70% வரை

Buy one get one free

மாபெரும் ராஜமுத்திரை

பட்டுச்சேலைகள் ஒன்று வாங்கினால்! ஒன்று இலவசம்!!

Mr.P.Sritharan.Proprietor

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund

U.K
செல்வராஜா
Selvaraja Gold House & Textiles

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288
Germany
Page.12

Gopara Gnanam GMBH
Tel:0231 5450028 Mob:0171 330 6542
Rheinische str.81 - 44137 Dortmund
Page.08

StaR-Impex
Kipper Str.03
44147 Dortmund/ Germany
Tel:0231 860 26 96
S.39




# கரு ஒளிக் கமெரா

**சிந்தனை: சி.சிவவினோபன்**

இதோ இன்னும் ஒருசில வருடங்களில் எம்மை ஆச்சரியத்திற்கு உட்படுத்த உள்ள ஒரு அதிசய பொருள் தான் இந்த கரு ஒளிக் கமெரா. கமெரா எப்படி எம்மை ஆச்சரியப் படுத்தும் என்றால், இற்றைக்கு பத்து ஆண்டுகள் முன் கமெரா எப்படி இருந்தது இப்போது எப்படி இருக்கின்றது என்று பார்ப்பதன் மூலமாகவே, அந்த ஆச்சரியத்தை உணரமுடியும். அத்தகைய மாற்றங் களைக் கண்டுள்ளது இந்த சிறு ஒளிப்பதிவுக் கருவி. மனிதனுக்கு கண் எவ்வளவு முக்கியமோ அதே அளவு இப்போதைய புதிய தலைமுறைக்கு கமெராவும் முக்கியமாகிவிட்டது.

**மனிதனுக்கு மறதி என்ற நோயே அதிகமானது இந்தக் கமெராவால்?**




அப்படிப்பட்ட கமெரா எப்படி உருவானது தெரியுமா? மனிதன் கண்ணைப் பார்த்து கமெராவை உருவாக் கினான் என்று சொல்வார்கள். ஆனால் அந்தக் கமெராவை உருவாக்கிய பின் தான் மனிதனுக்கு மறதி என்ற நோயே அதிகமானது என்றால் நம்பு வீர்களா? ஆம் இதோ அதற்கான ஆதாரங்கள். கமெரா கண்டுபிடிக்கும் முன் உங்களுடைய மூளையின் செயற்பாட்டுத் திறன் மற்றும் ஞாபகசக்தி பல மடங்கு அதிகமாக இருந்துள்ளது.


அதற்கான உதாரணம் ஒரு கிராமத்தில் வாழ்ந்த இலத்தீன் கதைக்கும் இனத்தவர்களின் ஞாபகசக்தியைக் கொண்டு கணிக்கப்பட்டுள்ளது. அது ஒரு பெரிய கதை அதன் சுருக்கம் என்னவென்றால், முப்பது வருடம் கழித்தும் ஒருவருடைய குரலை மட்டும் வைத்து யார் அவர் என்று அடையாளம் காணும் அளவு திறமை வாய்ந்தவர்கள் வாழும் கிராமம் அது. இதை போன்று எம் தமிழர்களின் கதை பல இருக்கின்றது. இருந்தாலும், அந்த ஆய்வின் விளைவாக, புகைப்படம் எடுக்காத இலத்திறனியல்ச் சாதனங்களை பயன்படுத்தாத பௌதிகாவியல் சாதனங்களை மட்டும் பயன்படுத்தும் மக்கள் அதிக ஞாபகசக்தியுடன் உள்ளார்கள் என்று கருத்துக் கணிப்புக்கு கூறுகின்றது.



இருந்தாலும் பாட்டணின் பெயர் தெரியாது, வரலாறு தெரியாது, பூஜை அறையில் அவர் புகைப்படம் மட்டும் வேண்டும் என்று நினைக்கும் சமுதாயத்திற்கு இந்தப் புகைப்படக் கருவி ஒரு இன்றியமையாத சாதனமாகிவிட்டது.

அப்படிப்பட்ட புகைப்படக் கருவியில் உள்ள மிகப்பெரிய குறை இரவில் புகைப்படம் எடுத்தால் தெளிவில்லாமல் இருப்பது. அதற்கு ஒரு தீர்வாக வந்தது தான் இந்த செறிந்த ஒளித் தெறிப்பான் (Flash Light). இருப்பினும் மிகச் சிறந்த வர்ணங்களை தெளிவாகத் தென்படுத்தும் ஒளிப் பதிவுச் சாதனங்கள் இன்றும் இல்லாமல் இருப்பது ஒரு குறையே.

அது ஒரு குறை என்று சொன்னால், உடனடியாக நம்மில்ப் பலர் கூறுவார்கள், இதென்ன குறை? இன்னும் ஒரு இரு வருடத்திப் பாருங்கள் இரவில் கூட இலகுவாக பகலைப் போல படம் எடுக்கலாம் என்று சொல்வார்கள். ஆனால் அதை யாரோ கண்டு பிடிப்பார்கள் என்று காத்திருப்பார்கள். ஒரு பிரச்சினை உள்ளது என்றால் அதற்கான தீர்வு காண்பவன் தான் கண்டுபிடிப்பாளர். இதோ உலகின் முதலாவது இரவைப் பகலாக்கி புகைப்படம் எடுக்கும் கருவி எப்படி உருவாக்கலாம் என்ற ஆராச்சிக் கட்டுரை. இந்த ஒளிப்பதிவுக் கருவியில் செறிந்த ஒளித் தெறிப்பான் (Flash Light) இருக்காது வெளிச்சமே இல்லாத இருள் இடத்தில் கூட, வெளிச்சத்தையே ஏற்படுத்தாமல் துல்லியமான புகைப்படத்தைக் கொடுக்கும் ஆற்றல் இருக்கும்.





அது எப்படிச் சாத்தியம் என்றால்? உலகின் முதலாவது கமெரா எப்படி இயங்கியது என்றால், ஒரு பொருளில் பட்ட ஒளி தெறித்து வந்து கண்வில்லையிப் பட, அதை எம் கண்கள் விம்பமாக விழித்திரையில் வீழ்த்த, அவற்றை உணரிகள் மூலமாக மூளை உணர்ந்து கொள்வது போன்று. கமெராவின் வில்லையில் விழும் ஒளிக்கதிர்கள் கமெராவின் கருந்திரையில் விழ, அது ஏற்படுத்தும் ஒளிச் செறிவிற்கு ஏற்ப விம்பத்தின் உருவம் பதியப்பட்டது. இன்று அனைத்தும் இலத்திரனியல் ஆக்கப்பட்டுள்ளது. எடுத்த புகைப்படத்தை கணனியில் வைத்து விரும்பினாற்போல் மாற்றிக்கொள்ளும் திறனும் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஆனால் நான் கூறும் இந்தக் கமெராவில் ஒளிக்கதிர்கள் மட்டும் விழப்போவதில்லை. காமெராவே கண்ணிற்குத் தெரியாத IR கதிர்களை வெளிப்படுத்தும் இவை எதிரில் உள்ள பொருட்களில் பட்டுத் தெறித்து காமெராவிற்கு வரும் போது அதை இன்னுமோர் உணரி உள்வாங்கிப் பதிந்து வைத்துக் கொள்ளும். இப்போது இருளில் எடுக்கப்பட்ட புகைப்படத்தையும் IR கதிர் மூலம் பதியப்பட்ட உருவத்தையும் கொண்டு அடுத்த நொடியே அந்தக் கமெரா சுற்றுப்புறச் சூழலை கற்பனை வடிவமாக வரைந்துகொள்ளும். இவற்றுக்கெல்லாம் துணையாக காமெராவினுள்ளேயே ஒரு கணணியும் பொருத்தப்படும். அந்தக் கணனி அந்தக் கற்பனை வடிவத்தையும் வில்லையில்ப் பதியப்பட்ட இருள்ப் புகைப்படத்தையும் சேர்த்து உண்மை யான சூழலை உருவாக்கி அதை இணையத்துடன் இணைத்து சரிசெய்து அடுத்த நொடியே இரவில் எடுத்த அந்தப் புகைப்படத்தை ஒளியோடு பகலில் எடுத்தாற்ப் போல் மாற்றிக் காட்டும். அப்படி அந்த அறிவியல் விந்தை கண்கூடு ஆகும் போது அதைக் கண்டுபிடித்தவர் ஒரு தமிழர் அது உங்கள் அன்புக்குரிய சி.சிவவினோபன் என்று இல்லாவிட்டாலும், அது தான் உண்மை என்பதற்கு இந்த ஆக்கம் ஒரு சான்று.






வெற்றிமணி
தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க
ஓசை 265


ஆரம்பம்:1950
ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம் )

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
0163 199 2 333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி"
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Sanje:07824 61 83 83

Vettimaniy Ltd
Company No: 8876276


# மூன்று வருடங்களில் சாதித்தது என்ன?

**இலங்கையிலிருந்து பாரதி**

இலங்கையில் "நல்லாட்சி" என்ற பெயரில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கூட்டு அரசாங்கம் பதவிக்கு வந்து மூன்று வருடங்கள் பூர்த்தியாகியுள்ளது. ஆகஸ்ட் மாதம் இந்த மூன்று வருடங்கள் முடிவடைந்திருந்தாலும், ஆட்சியின் பங்காளிகளாகவுள்ள இரு தரப்பினரும் இணைந்து இதனை நினைவுகூரக் கூடிய நிலை இருக்கவில்லை.

மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் செயற்பாடுகள்தான், புதிய அரசாங்கம் "நல்லாட்சி" என்ற பெயரை தனக்குச் சூடிக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்தது. சர்வாதிகாரப் போக்கு, குடும்ப ஆதிக்கம், ஊழல் மோசடிகள், இன நெருக்கடிக்குத் தீர்வைக்காண்பதில் அக்கறையற்ற நிலைமை என்பதுதான் மகிந்த ஆட்சி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள். அந்த நிலைமைகளை மாற்றுவதாகக் கூறியே இந்த அரசு பதவிக்கு வந்தது. அதனால்தான், "நல்லாட்சி" என்ற மகுடம் அதற்குப் பொருத்தமானதாக அப்போது கருதப்பட்டது. 2015 ஜனவரியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரத்தைக் கைப்பற்றினார். அதனைத் தொடர்ந்து 2015 ஆகஸ்ட்டில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் ஐ.தே.க. - ஸ்ரீ.ல.சு.க. கூட்டு அரசாங்கம் பதவிக்கு வந்தது. இலங்கை வரலாற்றில் இரு பிரதான கட்சிகளும் இணைந்து ஆட்சியை அமைத்தது அதுதான் முதல் முறை. தேசியப் பிரச்சினை உட்பட அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இந்த அரசாங்கம் தீர்வைக் கொண்டுவரும் என்ற எதிர்பார்ப்பு மக்களிடம் ஏற்படவும் அதுதான் காரணம். தேசிய அரசாங்கம் பதவியேற்று இன்று 3 வருடங்கள் கடந்துள்ளது. இந்த 3 வருடங்களில் என்ன நடைபெற்றது என்ன நடைபெறவில்லை என்பதையிட்டு கணக்குப் போடுவது அவசியமாகும்.

"மக்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்காக முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகளின் அனுகூலங்களை மக்கள் அனுபவிக்கிறார்கள். சர்வதேச சமூகம் இலங்கை மீது நம்பிக்கையுடன் செயற்படுகின்றமை மற்றொரு வெற்றியாகும். ஐரோப்பிய ஒன்றியம் மீன் ஏற்றுமதி தடையை நீக்கியது. இலங்கைக்கு மீண்டும் ஜிஎஸ்பி வரிச்சலுகை கிடைத்தது" என அரசாங்கத்தின் தகவல் திணைக்களம் கூட்டு அரசின் 3 வருட பூர்த்தியை முன்னிட்டு வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அரசாங்கத்தின் பிரதான பங்காளிகள் வெளியிட்டுள்ள கருத்துக்களும் இதனைப் பிரதிபலிப்பதாகவே இருக்கின்றது. விடுதலைப் புலிகளுடனான போரின் போது இடம்பெற்ற போர்க் குற்றங்கள் போன்றவற்றால் சர்வதேச சமூகத்தின் முன்பாக இலங்கை எதிர்கொண்ட நெருக்கடிகள் - அழுத்தங்கள் என்பன இந்த அரசாங்கத்தில் பெருமளவுக்கு குறைந்திருக்கின்றது. மேற்கு நாடுகள் இந்த கூட்டு அரசாங்கத்துக்கு சார்பானதாக இருப்பதும் அதற்குப் பிரதான காரணம். ஜி.எஸ்.பி. பிளஸ் போன்ற சலுகைகளை இலங்கை மீளப் பெற்றுக் கொண்டிருக்கின்றது. இவற்றைத் தமது சாதனைகளாக அரசாங்கம் காட்டிக்கொள்வது சிங்கள தேசியவாத வாக்குகளை வெல்வதற்காகவே. இதனைவிட, மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் காணப்பட்ட பெருமளவு கெடுபிடிகள் குறைந்திருக்கின்றன என்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
இவ்வாறு சில விடயங்களைச் சொல்லிக்கொண்டாலும், ஆட்சி மாற்றத்தின்போது தெரிவிக்கப்பட்ட பல



வாக்குறுதிகள் இன்னும் நடந்தேறவில்லை. முன்னைய ஆட்சியில் இடம்பெற்ற முறைகேடுகள் குறித்த விசாரணைகள் போதிய வேகத்தில் செல்லவில்லை. இப்போதுதான் சில விசாரணைகள் சூடுபிடித்திருக்கின்றது. இதனைவிட, முன்னைய அரசியல் இடம்பெற்ற ஊழல் மோசடிகளைக் காட்டி அதிகாரத்துக்கு வந்த இந்த அரசாங்கத்தில், அதனைவிட மோசமான சம்பங்கள் இடம்பெற்றிருப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் எழுந்திருக்கின்றன. இதுபோன்ற காரணங்கள் மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு இருக்கக்கூடிய நம்பிக்கையைப் பெருமளவுக்குப் பாதித்திருக்கின்றது. கூட்டரசாங்கத்தின் 3 வருட நிறைவைக் கொண்டாடும் நிலையில் அரசாங்கம் இருக்காததன் பின்னணியும் இதுதான்.

தேசிய அரசாங்கம் இனநெருக்கடிக்கு அனைவரும் ஏற்ககக்கூடிய தீர்வு ஒன்றைக்கொண்டுவரும் என்ற நம்பிக்கை ஆரம்பத்திலேயே கொடுக்கப்பட்டிருந்தது. பாராளுமன்றம் அரசியலமைப்புப் பேரவையாக மாற்றப்பட்டதும், வழிநடத்தல் குழு உட்பட 6 குழுக்கள் அமைக்கப்பட்டதும் இந்த நம்பிக்கையை அதிகரித்திருந்தது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கூட புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும் என்பதில் முழு அளவில் நம்பிக்கை வைத்திருந்தார்.

19 ஆவது திருத்தத்தின்படி பாராளுமன்றத்தின் நான்கரை ஆண்டுகள் முடிவடையும்போது அதனைக் கலைப்பதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான உறவுகள் இன்று எப்படியுள்ளன என்பது பகிரங்கமானது. அதன் அடிப்படையில் பார்க்கும் போது பாராளுமன்றத்துக்கு இன்னும் ஒன்றரை வருடங்கள்தான் "உறுதியான ஆயுள்" இருக்கின்றது எனக் கூறலாம். மாகாண சபைகளுக்கான தேர்தல் அடுத்த வருட ஜனவரியில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 2020 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற வேண்டும். சில சமயம் அது முன்கூட்டியே வரலாம்.
பாராளுமன்றத்துக்குள்ளும் வெளியிலும் மகிந்த ராஜபக்ஷ பலமடைந்துவருவதையும் அவதானிக்க முடிகின்றது. அரசுக்கு எதிரான போராட்டம் ஒன்றையும் அவர் தலைமையிலான கூட்டு எதிரணி ஆரம்பித்திருக்கின்றது. தேர்தலை இலக்காகக் கொண்டே அவர்கள் காய்களை நகர்த்தத் தொடங்கியுள்ளார்கள். இந்தப் பின்னணியில் இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வு போன்ற சர்ச்சைக்குரிய விடயங்களை முன்னெடுக்க அரசாங்கத்தினால் முடியாதிருக்கும். அதாவது, கடந்த 3 வருடங்களில் நடைபெறாத எதுவும், அடுத்து வரப்போகும் மாதங்களில் நடைபெறும் என எதிர்பார்க்க முடியாது.




## யேர்மனி சுவெற்றா கனகதுர்க்கா 29.07.2018 தேர்த்திருவிழாவின் காட்சிகள்




படங்கள்: Konessfotos and Mathan.Siva





### புதிதாக இராஜகோபுரத்துடன் அமைய இருக்கும் சுவெற்றா ஸ்ரீ கனகதுர்க்காஅம்பாள் ஆலயத்திற்கு 12.08.2018 அன்று வெகுசிறப்பாக நடைபெற்ற அடிக்கல் நாட்டுவிழா





படங்கள்:ஆன்மீகத்தென்றல் புவனேந்திரன்.
மலரும் மாலைகள்(என்.வி.சிவநேசன்)








Bochum
Lucky Fly Reisebüro
Luckyfly
Luckyfly
Gulf Air
GULF AIR
GRAND PRIX 2010
Mob:No: 0179 1484 892
என்றும் சிறப்பு விலையில்
தரமான சேவைகள்......
SMILE PRICE!
Graphic Design Vettimaniy Ltd
e.mail:siva 0108 @hotmail.com
QATAR
Emirates
طيران الخليج
Essener Str.26
44793 Bochum
Tel: 0234-2399032
Fax 0234-79457171
www.Lucky-fly.de


5வது ஆண்டில் கால்பதிக்கும் எமது நிறுவனம்
150 யூரோவிற்கு மேல் கொள்வனவு செய்யும் வாடிக்கையாளருக்கு
குலுக்கல் முறையிலான பரிசுகள்
ஆஹா ஓஹோ ஒரு நாள் திருவிழா
06.10.2018
சனிக்கிழமை
TKS BEST FOODS
மலிவும் தரமும் என்றால்
TKS தானே
மளிகை உலகின்
BIG BOSS
TKS
ஆச்சர்யமூட்டும் விலைகள்
வியப்பூட்டும் பரிசில்கள்
ONE DAY SALE
Awesome Prices - Awesome Gifts
TKS BEST
0049 231 950 468 83
0049 231 950 468 82
tks-bestfoods@web.de
www.tks-bestfoods.de
tksbestfoods
Rheinische Str.79, 44137, Dortmund Germany

# கனடாவில் "வன்னி வீதி"







நம் பெருமைவாய்ந்த மூதாதையர் பெயர்கள் இம்மண்ணில் தினம் பேசப்பட அவர்களது பெயரை எமது பிள்ளைகளுக்கும், கல்வி நிறுவனங்களுக்கும் சூட்டி வருவது தமிழர் மரபாகவே உள்ளது. அந்த வகையில் நம் தாய்மண்ணின் அடையாளமாக திகழும் பிரதேசங்களின் பெயரையும் புலம்பெயர்ந்து நாம் வாழும் நாடுகளில் சூட்டி மகிழ்வதில் கனடா முன்னுதாரணமாக மட்டுமல்ல முன்னணியிலும் திகழ்கின்றது.



கனடா மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டாரத்தின் முன்னாள் உறுப்பினர் லோகன் கணபதியின் முயற்சியாடட மார்க்கம் நகரின் 7ம் வட்டாரத்திடட 'வன்னி வீதி' என்று ஒரு தெருவுக்குப் பெயர் சூட்டப்படவிருப்பதாக மார்க்கம் நகர முதல்வர் பிராங்க் ஸ்கார்பிற்றியும் திரு.லோகன் கணபதியும் இணைந்து 2013 மே மாதத்தில் அறிவித்திருந்தனர். ஐந்தாண்டுகளின் பின்னர் அந்த வன்னி வீதி, கடந்த மாதம் (ஜலை) 14ம் நாள் சனிக்கிழமை மதியம் அதிகாரபூர்வமாக, பெருந்திரளான பல்லின சமூக மக்கள் முன்னிலையிர் திறந்துவைக்கப்பட்டது. நகர முதல்வர் தமதுரையில், நகரசபை உறுப்பினராக இருந்து பல்லின சமூக மக்களுக்கும் ஆற்றிய அயராத சேவைக்காக திரு. லோகன் கணபதி அவர்களுக்குத் தன் நன்றியைத் தெரிவித்ததோடு ஒன்ராறியோ சட்டமன்ற உறுப்பினராகத் தெரிவானமைக்காக வாழ்த்துகளையும் பகிர்ந்து கொண்டார். "நீங்கள் மார்க்கம் நகரசபையில் இருந்தாலும் சரி, ஒன்ராறியோ சட்டமன்றத்தில் இருந்தாலும் சரி, மார்க்கம் குடும்பத்தில் ஒருவராகவே எப்போதும் இருப்பீர்கள்" என்றும் திரு. லோகன் கணபதி அவர்களுக்கு நகரமுதல்வர் கூறினார்.

"இன்று ஓர் அற்புதமான கொண்டாட்டத்துக்குரிய நாள். வன்னி வீதியை இன்று திறந்து வைப்பதற்காகக் கூடியிருக்கிறோம். ஒரு சனசமூக நிலையத்தையும் நூலகத்தையும் திறந்து வைக்கவிருக்கிறோம். சனசமூக நிலையமும்

## மார்க்கத்துக்கும், வன்னிக்குமிடையே உள்ள ஒற்றுமை

நூலகமும் வன்னி வீதியும், அமைவதற்காக ஆதரவளித்த முன்னாள், இந்நாள் நகரசபை உறுப்பினர்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். ஏனெனில் 'வன்னி வீதி'யின் மூலம் மார்க்கம் நகரின் வளர்ச்சியில் தமிழ்ச் சமூகத்தின் பங்களிப்பை மதித்து அங்கீகரிப்பதற்கான ஒரு வாய்ப்பு இது" என்று தனதுரையைத் தொடர்ந்த நகரமுதல்வர், "ஈழத்தின் வடமாகாணத்தின் வளம் கொழிக்கும் வன்னிப் பிராந்தியமும் மார்க்கம் நகரைப் போலவே கடின உழைப்பாளிகளைக் கொண்ட விவசாயப் பாரம்பரியம் கொண்டது. இதுவே மார்க்கத்துக்கும், வன்னிக்குமிடையேயான ஒற்றுமை. இந்த வன்னி வீதியைத் திறந்துவைப்பதன் மூலம் 30,000 முகவரிகளில் மார்க்கத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு நன்றி கூறுகிறோம்" என்றும் கூறினார்.

உரைகளைத் தொடர்ந்து, நகர முதல்வர் பிராங்க் ஸ்கார்பிற்றியும் முன்னர் 7ம் வட்டாரத்தின் நகரசபை உறுப்பினராகவிருந்து 'வன்னிவீதி'யைச் சாத்தியப்படுத்தியவருமான திரு. லோகன் கணபதியும் இணைந்து நாடா வெட்டி வன்னி வீதியைத் திறந்துவைத்தனர்.




**30,000 முகவரிகளில் மார்க்கத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு நன்றி**

இந்நிகழ்வின்போது வன்னி வீதி தொடங்கும் இடம் சிவப்பு, மஞ்சள் வண்ணங்களால் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது. கவனத்தை ஈர்த்தது பாராட்டுக்குரிய விடயம் இன்னொன்றுண்டு. வன்னி வீதித் திறப்பு விழாக் கலைநிகழ்ச்சிகளும் உரைகளும் நடைபெற்ற தற்காலிக அரங்கின் பின்னணியில் பண்டாரவன்னியனதும் வன்னிப் பிராந்தியத்தின் வரைபடமும் நிகழ்வுக்கு மிகப்பொருத்தமாக அமைந்து அணிசேர்த்தன.

தொகுப்பு: கந்தசாமி கங்காதரன்: நன்றி தமிழர் தகவல்




Gopara Gnanam
Rheinische Strabe
ஒரு நாள் திருவிழா
ஆறு 10
சனிக்கிழமை
கலக்கப்போவது
யாரு
Rheinische Str. 81, 44137 Dortmund
Tel : 0231 5450 028, 0171 3306 542, 0176 246 54 009
Gopara Gnanam 6.10.2018
மாபெரும் தள்ளுபடி விலையில்
அதி நவீனப் பட்டுப் புடவைகள் அனைத்தும் ஒன்று வாங்கினால் ஒன்று இலவசம்!
முதலில் வாங்கும் 10 வாடிக்கையாளர்கட்கு 150€ பெறுமதியான பட்டுச் சேலை
வெறும் 10€ மட்டுமே! (200€ விற்கு மேல் கொள்வனவு செய்திருத்தல் வேண்டும்)
7 LINING துணி 10€ மட்டுமே!
2 பாவாடை, 1 சாறம் 10€ மட்டுமே!
ஒட்டிக்கோ கட்டிக்கோ பட்டு வேட்டி (இரட்டைப்பட்டுன் Pocket ம்)
25 YEARS OF SERVICE EXCELLENCE
அதிஷ்டசாலியா நீங்கள்?
இவ் அதிஷ்டம் 50€
மேற்பட்ட கொள்வனவு
செய்தவர்களுக்கு மட்டும்
மாலை 7.30 மணிக்கு குலுக்கல் முறையில் தெரிவு செய்யும்
10 அதிஷ்டசாலிகளும் மிகச்சிறந்த புடவைகளையும், பலசரக்குப்
பொருட்களையும் பரிசுப் பொருட்களாய் பெற்றுச் செல்லுங்கள்!...
1ம் பரிசு 150€ பெறுமதியான காஞ்சிபுரம் சேலை
2ம் பரிசு 75€ பெறுமதியான சேலை
3ம் பரிசு பட்டு வேட்டி
4ம், 5ம், 6ம் பரிசு 10 Kg Amma குத்தரிசி
7ம், 8ம், 9ம் பரிசு 6 x 2 Kg மைசூர் பருப்பு
10ம் பரிசு 2 x 900g Kings மிளகாய்த் தூள்
6.10.2018




# தாயகம் நோக்கிய பயணங்கள் தாயை நோக்கிய பயணங்கள் !

ஊரடைதல் என்பது மீட்படைதல் போல !
அன்னையை விட்டு முதன் முதலாய் பள்ளிக்கூடம் செல்லும் குழந்தைகளைக் கவனித்திருக்கிறீர்களா ? அவர்கள் முகத்தில் தெரியும் பயத்தையும், பதட்டத்தையும் புறந்தள்ள முடியுமா ?
வேடனின் வலையில் சிக்குண்ட புறாவின் சிறகுகளைப் போல குழந்தையின் இதயம் படபடக்கும்.
தாயின் முந்தானையைப் பற்றிக் கொண்டு கதறித் தவிக்கும். ஏன் அம்மாவுக்கு என்மேல் இத்தனை கோபம் ? என்னை எதற்காக இந்த அன்னிய இடத்தில் அடித்து விரட்டுகிறார்கள் என குழம்பித் தவிக்கும். அன்னையைப் பிரிகின்ற அந்த தற்காலிகப் பிரிவு கூட குழந்தைக்கு உயிரைப் பிரிகின்ற வலியைத் தரும் !
மாலையில் மீண்டும் அன்னையைக் காணும்போது தான் குழந்தையின் மகிழ்ச்சி அழுகையாகவும், அன்னையின் மகிழ்ச்சி அரவணைப்பாகவும் மாறும்.ஊரை விட்டுப் பிரிந்து, வேலைக்காக வெளியூர் செல்லும் இளைஞர்களைக் கவனித்திருக்கிறீர்களா ? நினைவுகளை ஊரின் தாழ்வாரங்களில் அலைய விட்டு விட்டு வாய்ப்புகளின் வால்பிடித்து வாழ்ந்து கொண்டிருப்பார்கள். வாழ்க்கை நிரப்பந்தங்கள் அவர்களின் சிறகுகளை வலுக்கட்டாயமாய்ப் பிடுங்கி வெள்ளையடிக்கும். அவர்களுடைய வேலை நாட்களெல்லாம் விடுமுறையை முன்வைத்தே முன்னேறிக் கொண்டிருக்கும்.

விடுமுறையில் ஊரில் கால்வைக்கும் போது,அன்னிய பூமியை விட்டு புண்ணிய பூமியில் கால்வைக்கும் பரவசம் அவனுடைய மனதைப் புல்லரிக்க வைக்கும்.
திருமணமாகி புது வீடு செல்கின்ற மணப்பெண்ணின் கண்களைக் கவனித்திருக்கிறீர்களா ? இளவரசியாய் வலம் வந்த கிரீடக் கிளியை அடிமை சாசனம் எழுதி அனுப்பி வைப்பது போன்ற கலக்கம் கண்களில் வழியும். காலத்தின் பிடரியில் தொங்கி அலைக்கழிக்கப்படும் அவஸ்தை அவள் மனதுக்குள் அணிவகுக்கும்.
அம்மா வீட்டுக்கு விருந்துக்கு வரும் பெண்ணின் கண்களில் வழிகின்ற பரவசம் விவரிக்க முடியாத உறவின் விஸ்வரூபம். தற்காலிகப் பிரிவுகளே இப்படியெனில், நிரந்தரப் பிரிவு எப்படி இருக்கும். உயிரைப் பிடுங்கி வேறோர் இடத்தில் ஊன்றி வைப்பது போல் இருக்காதா ? தாய்மண்ணின் பிராணவாயுவை எந்த தேசமேனும் தர இயலுமா ? எத்தனை வசதிகள் வந்தாலும் தாய் மண் தரும் வறுமையின் வாசனைக்கு ஈடாகுமா ?

## ஊரை அடைதல் என்பது உயிரை அடைதல் போல !

கிராமத்தை விட்டு நகரத்துக்கு இடம்பெயரும் மக்களே கூட ஒட்ட முடியாமல் தவிப்பார்கள். கிராமத்தின் பனையோலை ஓசை கேட்காமல் அவர்களால் படுத்துறங்க முடிவதில்லை. வேப்பங்காற்று சொல்கின்ற வயலோரக் கதைகளைக் கேட்காமல் குருதி அழுத்தம் குறைவதில்லை. சலசலவென ஓடும் ஓடையின் தொடர்கதையைக் கேட்காமல் இதயத்தின் ஈரம் நிலைப்பதில்லை. என்ன செய்வார்கள் அவர்கள் ? அவர்கள் இடத்தை விட்டு நகர்ந்தவர்கள் அல்ல, இதயத்தை விட்டு நகர்ந்தவர்கள்.
அவர்களின் பரம்பரை மூச்சுக்காற்று விட்டு வந்த பூமியின் மீதல்லவா படுத்துறங்குகிறது. அவர்களுடைய பால்யச் சொற்களெல்லாம் அந்த கூரை வீடுகளிலல்லவா குவிந்து கிடக்கின்றன. அவர்களுடைய சிரிப்பும், களிப்பும் அந்தக் காற்றில் அல்லவா கரைந்து கிடக்கிறது. இடம் மாறுதல் என்பது தடுமாறுதல் அல்லவா ?
எனில், தன் நிலத்தை விட்டே விரட்டப்பட்டவர்களின் நிலை என்ன ? அன்னையின் மண்ணை விட்டு அன்னிய மண்ணுக்கு துரத்தப்பட்டவர்களின் துயரநிலை என்ன ? அவர்களின் ஒப்பாரிகளை எந்த மொழி தான் மொழிபெயர்ப்பு செய்ய முடியும் ? வேற்றிடத்தில் இருந்தாலும், இதயத்தின் வெற்றிடத்தை எப்படி நிரப்ப முடியும் ? அது கொடியை விட்டு வெட்டப்பட்ட கிளையின் அவஸ்தை. அது மேகம் விட்டு நழுவி விழுந்த துளியின் அவஸ்தை. அதை வெறும் எழுத்துக்களால் பதிவு செய்ய முடியாது. உணர்வுகளால் மட்டுமே பதியம் போட முடியும்.

எந்த நிலத்தில் இருந்தாலும் சொந்த நிலத்தை மனதுக்குள் பூஜிக்கும் மனிதர்களுக்கு, மீண்டும் தாயகம் திரும்புதல் என்பது தாயைத் திரும்புதல் போல. அவர்கள் புலம் பெயர்ந்தவர்கள் அல்ல, புலன் பெயர்ந்தவர்கள். தாயகம் திரும்புதல் என்பது அவர்களுக்கு புலன்களைப் பெறுதல் போல ! கண்ணீர்க் கணவாய்களின் வழியாக கடந்து சென்றவர்கள் மீண்டும் கண்ணீர்க் கணவாய்கள் வழியாக மீண்டு வரும் நிகழ்வு அது. ஒன்று ஆனந்தக் கண்ணீர் என்பது மட்டுமே ஆனந்தமான செய்தி.
வறண்ட காவிரியில் தண்ணீர் வரும்போது விவசாயிகள் எல்லாம் துண்டை எடுத்து இடுப்பில் கட்டிக்கொண்டு, வேட்டியை கீழே இறக்கி விட்டுக் கொண்டு அந்த தண்ணீரின் முதல் துளியை சாஷ்டாங்கமாய் விழுந்து வணங்குவார்கள். அழுக்கை அள்ளி வரும் அந்தத் தண்ணீரை அள்ளிக் குடிப்பார்கள். தண்ணீர் அவர்களுக்கு வாழ்க்கை. தண்ணீர் அவர்களுடைய தெய்வம். தண்ணீர் அவர்களுடைய தலைமுறையின் காவலன்.

தாயகம் திரும்பும் இதயங்களும் அப்படியே. இருந்த போது கவனிக்காத நிலம் இப்போது புண்ணிய பூமியாய் புரள வைக்கும். நாசிக்காற்றில் நுழைகின்ற நிலத்தின் வாசனை நிஜத்தின் வாசனையாய் அவர்களை புளகாங்கிதம் அடைய வைக்கும். எதுவும் இல்லாத நிலமானாலும், எல்லாம் இருக்கின்ற உணர்வைத் தரும். தாயகம் திரும்புதல் என்பது தாயை அடைதல் போல.


ஒரு தாயின் அன்பைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில், கொஞ்ச நாள் அவள் அருகாமை இல்லாத இடத்தில் வாழ்ந்தால் போதும். தாயகத்தின் அருமையைப் புரிந்து கொள்ள வேண்டுமெனில் விரட்டப்பட்ட நிலையில் எங்கோ சில காலம் வாழ்ந்தால் போதும். இருக்கும் வரையில் அருமை புரியாத இரண்டு விஷயங்கள் தாயும், தாயகமும் தான். விலகும் போது தான் சகலமும் விலகிய அவஸ்தை புரியும்.

தாயகம் நோக்கிய பயணங்கள்! தாயை நோக்கிய பயணங்கள் !!
அது...... தனியே அலைந்த உடல் ஒன்று
உயிரை அடைகின்ற கணம் போன்றது !




## 5 வினாடிகளுக்குப் பூமியில் பிராணவாயு இல்லாமல் போனால் என்ன நடக்கும்?






Dr.நிரோஷனின் அதிசய உலகம்

காற்று மண்டலத்தில் பிராணவாயு அதாவது Oxygen பெரும்பான்மையான பகுதியை நிரப்பாவிட்டாலும், உலகில் உயிரினங்கள் தொடர்ந்து உயிர் வாழவும், பூமிசரியான முறையில் இயங்கவும் இது அத்தியாவசியத் தேவையாக அமைகின்றது. இது உங்களுக்கு நன்றாகவே தெரிந்து இருக்கும். சரி, இனி நான் உங்களிடம்ஒரு கேள்வியைக் கேட்கிறேன். இப்படி மிக மிக முக்கியமான இந்தப் பிராணவாயு, வெறும் ஐந்தே ஐந்து வினாடிகள் மட்டுமே நமது பூமியில் இல்லாமல்போனால் என்ன நடக்கும்? என்ன புரியவில்லையா? 1… 2… 3… 4… 5… இவ்வளவு நேரத்திற்குப் பிராணவாயு முற்றிலும் காணாமல் போனால், என்ன நடக்கும்? அட, இப்படிக் குறுகிய நேரத்தில் ஒன்றுமே நடக்காது என்று நீங்கள் நினைத்தால் கண்டிப்பாகத் தொடர்ந்து படியுங்கள்.

சரி, ஐந்தே ஐந்து வினாடிகளுக்கு மட்டுமே பூமியில் Oxygen இல்லாமல் போனால் என்ன நடக்கும் என்பதைப் பார்ப்போம்.
முதலாவதாகப் பூமியில் வாழும் உயிரினங்கள் அதிகளவிலான சூரிய கதிர்களின் தாக்கத்திற்கு ஆளாகி விடுகின்றன. இது வெறும் 5 வினாடிகள் என்றாலும்கூட, இதனால் பல நோய்களை, அதிலும் குறிப்பாக தோல் புற்று நோயை ஏற்பட வாய்ப்புகள் அதிகளவில் உள்ளது. இரண்டாவதாக என்ன நடக்கும் தெரியுமா? நீங்கள் மேலே பார்க்கும் அந்த வானம் இருக்குதே, அதனது நீல நிறம் மங்கி, கருப்பாகி விடும். பகலாக இருந்தாலும் அது ஒரு கருமை நிறத்தில் தான் தெரியும். மூன்றாவதாக அந்த நேரத்தில் ஒருவருமே விமானத்தில் இருக்கவே கூடாது, அது ஏன் தெரியுமா? வானை நோக்கி ஓடு பாதையிலிருந்து புறப்படும் அனைத்துவிமானங்களும் உடனடியாகக் கீழே விழுந்து நொறுங்கி விடும். நான்காவதாக உங்கள் உடலின் அழுத்தம் அந்த ஐந்து வினாடிகளில் மட்டுமே அதிகரித்துவிடும். இதன் விளைவாக என்ன நடக்கும் தெரியுமா? நமது அகச்செவி உடனடியாக வெடித்து விடும்!

அட உயிரினங்களுக்கு மட்டும் தான் ஆபத்து என்று நினைத்தால், இல்லவே இல்லை! கட்டடங்களும் குறிப்பாக கான்கிரிட்டைக் கொண்டு கட்டப்பட்ட கட்டடங்கள் அனைத்துமே தூசியாக மாறி விடும். ஆறாவதாக என்ன நடக்கும் தெரியுமா? புவியில் வாழும் உயிரினங்களின் உயிரணுக்களில் ஹைட்ரஜனின் அளவு அதிகரித்து விடும். இதன் விளைவு பயங்கரம் நண்பர்களே, ஏனென்றால் அப்படி ஹைட்ரஜனின் அளவு அதிகரித்தால், அந்த உயிரணுக்கள் ஒருகட்டத்துக்கு பிறகு வெடித்துச் சிதறும். அதே வேளையில் ஏழாவதாகக் கடல் நீரைக் கூட விட்டு வைக்காது. ஏனென்றால், அந்த 5 வினாடிகளில் கடல் நீர் வற்றிவிடும்! அட, இது எல்லாமே போதாது என்று எட்டாவதாக நமது பூமி அதன் மேற்பரப்பில் எதையும் தாங்கி வைப்பதற்கான சக்தியையும் இழந்துவிடும்.
நண்பர்களே, பார்த்தீர்களா! பிராணவாயு, அதாவது oxygen வெறும் 5 வினாடிகள் மட்டும் இல்லாமல் இருந்தாலே இவ்வளவு விளைவுகளும் ஏற்படுகின்றதே, அப்படி என்றால் இந்த வாயு நாம் உயிர் வாழ எவ்வளவு அத்தியாவசியமானது என்பது உங்களுக்கு இப்போது நன்றாகவே புரிந்து இருக்கும், இல்லையா?

## ஏன் பிறர் கொட்டாவி விடும் போது நாங்களும் கொட்டாவி விடுகின்றோம்?



நண்பர்களே, நீங்கள் அனைவரும் இந்த விஷயத்தை அவதானித்துப் பார்த்திருக்கின்றீர்களா? அது என்ன விஷயம் என்றால், நீங்கள் உங்கள் நண்பர்களுடன்சேர்ந்து ஒரு அறைக்குள் இருக்கின்றீர்கள் என்று எடுத்துக் கொள்வோம். அப்படி இருக்கும் போது, திடீரென்று பார்த்தால் உங்கள் நண்பர்களில் ஒருவர்கொட்டாவி விடுகின்றார். அப்படிச் செய்யும் போது என்ன நடக்கும்…? அவர் மட்டும் கொட்டாவி விட மாட்டார், அவரைப் பார்த்து விட்டு உங்கள் நண்பர்களில்சிலர் மட்டும் இல்லாமல், ஏன் நீங்களும் கூட கொட்டாவி விடுவீர்கள். ஆனால் அது ஏன் என்று உங்களுக்குத் தெரியுமா?

சரி இந்தக் கேள்விக்கு பதில் தெரிய முன்பு, முதலில் கொட்டாவி என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். பொதுவாக நமது வாயைப் பெரிதாகத் திறந்து, வாய்மற்றும் மூக்கு வழியாகக் காற்றை சுவாசிப்பதைக் கொட்டாவி என்கிறோம். இந்தக் கொட்டாவி சோர்வு, சலிப்பு, அதிக வேலைப்பளு, மன அழுத்தம் மற்றும்ஆர்வமின்மை போன்ற காரணங்களுடன் தொடர்பில் உள்ளது. ஆனால் ஏன் கொட்டாவி விடுகின்றோம் என்று தெரியுமா? ஆராய்ச்சியாளர்களின் கருத்துப் படி, கொட்டாவி பொதுவாகக் குழுவாக சேர்ந்திருக்கும் விலங்குகளை ஏதாவது ஒரு விஷயத்துக்கு ஆயத்தப்படுத்த உதவுகின்றது என்பதைக்கண்டறிந்துள்ளார்கள். கொட்டாவி விடுவதால் மூளைக்குச் செல்லும் பிராண வாயுவை அதிகரித்து, அந்த விலங்குகள் பல நடவடிக்கைகளுக்குத் தயாராகஉதவுகிறது என சில ஆய்வுகள் கூறுகின்றன. மற்ற சில ஆய்வுகளோ கொட்டாவி விடுவதால் மூளை சாந்தப் படுத்தப்படுகின்றது எனத் சொல்கின்றன.
சரி இது ஒரு பக்கம் இருக்கட்டும், ஆனால் ஏன் ஒருவர் கொட்டாவி விடும் போது அது ஒரு தொற்றுச் செயல் போல் சுற்றி இருக்கும் மற்றவர்களையும் கொட்டாவி விடத் தூண்டுகிறது? இதற்கான காரணத்தை இன்னும் முழுமையாகப் புரிந்துகொள்ளவில்லை என்றாலும், விஞ்ஞானிகளின் கணிப்புப் படிஇதற்குக் காரணம் ஆடி நரம்பணுக்கள், அதாவது mirror neurons தான். இந்த நரம்பணுக்கள் நமது மூளையின் முற்பகுதியில், அதாவது frontal cortex இல்அமைந்துள்ளது. இந்த ஆடி நரம்பணுக்கள் பெரும்பாலும் அதே இனத்தைச் சேர்ந்த பிற விலங்குகளிடமிருந்து பெறும் குறிப்புகளை வைத்து தமது மூளையிலும்அதே பகுதிகளைத் தூண்டிவிடும் தன்மையைக் கொண்டவை.

எனவே பக்கத்தில் இருப்பவர் ஒருவர், கொட்டாவி விடும் போது, இந்த ஆடி நரம்பணுக்களின் காரணத்தால், நாங்களும் அதே போல் கொட்டாவிவிடு கின்றோம். இதில் உள்ள ஆச்சரியம் என்ன தெரியுமா? இந்தத் தொற்றுச் செயலை மனிதர்களிடையே மட்டும் அவதானிக்கவில்லை, குரங்கு மற்றும் நாய்களுக்கும் கூட கொட்டாவி தொற்றுச் செயலாக உண்டாவது என்பதைக் கண்டு பிடித்துள்ளார்கள். சரி நண்பர்களே இனி நீங்கள் கூறுங்கள். எனது கட்டுரையைப் படிக்கும் போது நீங்கள் எத்தனைத் தடவை கொட்டாவி விட்டீர்கள்? இதற்குரிய பதிலைமட்டுமில்லை, எனது சிறு கட்டுரை பற்றிய அபிப்பிராயத்தையும் எனக்குக் கண்டிப்பாக எனது முகநூல் பக்கத்தில் (www.facebook. com/scinirosh) அறியத்தாருங்கள்!



# ஆழ்துயரத்தில் இருந்து மீண்டெழுதல்



Dr IN
டாக்டர் எம்.கே.முருகானந்தன்
MBBS (Cey),DFM (Col),FCGP (Col)
குடும்பவைத்தியர்




வாழ்க்கை என்பது என்றென்றும் தெளிந்த நீரோடைபோல சலசலப்பின்றி ஓடுவதல்ல. சங்கடங்களும், துயரங்களும், ஏமாற்றங்களும் வெறுங்காலில் சுள்ளெனக் குத்தும் நெருமுட்கள்போல திடீரென மனதைத் தைத்து சோர வைக்கும். வாழ்க்கைத் துணையின் மறைவு, பாசத்தைக் கொட்டி வளர்த்த பிள்ளைகளின் பிரிவு, தொழில் இழப்பு, உயிருக்கு உயிராகக் காதலித்தவரின் கைவிரிப்பு, தொழிலில் பெருநட்டம், பெருநோயின் எதிர்பாராத் தாக்கம்,

இப்படி எத்தனை எத்தனை ஆழ்துயர்கள் மனித வாழ்வில் சோர்வூட்டுகின்றன?

இவ்வாறு ஆகும்போது உடுக்கை இழந்தவன் கைபோல மனம் சோரும்,ஆற்றாமை மூழ்கடிக்கும், மனப் பதற்றம் ஏற்படும். எதுவுமே இயலாமற்போனது போன்ற உணர்வு ஏற்படும். இத்தகைய உணர்வுகள் எல்லாமேஒரே நேரத்தில் ஏற்படும் என்றில்லை. அவற்றில் ஒரு சிலவே மனதைத்துயரில் ஆழ்த்தி வாழ்வில் பற்றின்மையை ஏற்படுத்திவிடலாம்.

**அதிலிருந்து மீள என்ன செய்ய வேண்டும்? எவை ஆகாது?**

முக்கியமானது மது, போதைப் பொருள் போன்றவற்றை நாடக்கூடாது. தற்காலிகமாக மறக்க வைத்து உங்கள் வாழ்வையே அழித்துவிடும்.

தனிமையை நாடாதீர்கள். தனிமையும் உள்ளுக்குள் மனங்குமைதலும் கூடாது. நண்பர்களுடனும் நெருங்கிய உறவினர்களுடனும் பொழுதுகளைச் செலவழியுங்கள்.

உணவைத் தவிர்க்காதீர்கள். நேரத்திற்கு நேரம் போசாக்கான உணவை உண்ணுங்கள். மனம் வேண்டாம் என்று சொன்னாலும் உணவை மறுக்காதீர்கள்.

காலாற நடவுங்கள் அல்லது உடற் பயிற்சி செய்யுங்கள். போதியளவு தூங்குங்கள்.

யோகாசனம், சாந்தியாசனம் போன்ற பயிற்சிகள் நல்லது. அல்லது உடலைத் தளரச் செய்யும் பயிற்சிகளை அதற்கான வழிகாட்டலுடன் செய்யுங்கள்.

வேலைக்குப் போதல், கடைத்தெருவுக்குச் செல்லல், வணக்கத் தலங்களில் வழிபடுதல், கூட்டங்களில் பங்குபற்றல், நண்பர்களைச் சந்தித்தல் போன்ற உங்களது வழமையான செயற்பாடுகள் எதையும் தவிர்க்க வேண்டாம்.

வேலை எதுவும் இல்லையென்றால் சமூகசேவைகளில் இறங்குங்கள்.

நெருங்கிய உறவினர்கள், நண்பர்களின் ஆலோசனைகளைப் பெறத்தயங் காதீர்கள். அவர்களுடன் மனம் விட்டுப் பேசுங்கள்.



அவசியமானால் மருத்துவரைக் கலந்து ஆலோசியுங்கள். அல்லது உங்கள் ஆன்மீக வழிகாட்டியுடன் பேசுங்கள். நம்பிக்கையைக் கைவிடாதீர்கள். மீண்டும் வசந்தங்கள் வீசும்.

நன்றி:தமிழர் தகவல் -கனடா

CENTURY TRAVELS GmbH
CENTURY TRAVELS
Fon: 0231 5574 319 // Fon: 0231 5896 557
Fax: 0231 5844665
*Niederlassung.*
Rheinische Strasse 29
44137 Dortmund
*Hauptsitz.*
Steeler Strasse 150
45139 Essen.
உங்கள் விடுமுறையை சிறப்புடன்களிக்க நம்பிக்கையான விமான சேவைகளை பெற்றுத் தருகிறோம்.
Mob:0176 21 68 2149 Nishanthan
Email:info@centurytravels.de

# யாழ் மண்ணில் பனை எழுச்சி வாரம்

பவதாரணி ரவீந்திரன் (யாழ்ப்பாணம்)




வடக்கின் வளாகம் எங்கும் தனது வேர்களை ஊன்றி கருகருவென ஓங்கி வளர்ந்து தழைத்து நிற்கும் பனை மரம் நம் பண்டைய தமிழரின் தால மரம்-பனை மரம் பனையின் அனைத்து விதமான பயன்களையும் ஒரு சேர நம்மவர்க்கு எடுத்துக்காட்டும் எடுத்து வழங்கும் நிகழ்வாக ஆடிமாதம் 22ஆம் திகதி தொடக்கம் 28ஆம் திகதி வரை வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சு, கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம், பனை தென்னை அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள், பனைசார் உற்பத்தி நிறுவனங்கள், இணைந்து நல்லூர் கிட்டுப்பூங்காவில் நடாத்திய பனை எழுச்சி வார கண்காட்சி நிகழ்ந்தது.

அந் நிகழ்வில் ஒவ்வொரு மாவட்ட பனை மாண்மியங்களும் தத்தம் வாசல்களில் வண்ண வண்ண வர்ணத்தில் பனையோலைகளால் ஆக்கப்பட்ட வரவேற்பு பாதாதைகளைத் தாங்கியபடி அமைந்திருந்தன. அவை அனைத்துமே பனையின் முழுப்பயனையும் வழங்கும் வண்ணம் பல்வேறு விதமான பொருட்களையும் கொண்டிருந்தன. நமது முன்னோரின் சுகவாழ்வுக்கு உறுதுணையாக அமைந்த உடலிற்கு உரமேற்றும் உணவுகளான புழுக்கொடியல், கருப்பட்டி, நுங்கு, பனங்கற்கண்டு, பனங்களி, பனஞ்சீனி மேலும் தற்கால சிறுவர்கள் விரும்பி உண்ணும் வகையில் பனங்களியால் ஆன கேக், ஜாம், பணிஸ், யோகட், குளிர்களி, பாண், பணியாரம் போன்றனவும் நீராகாரமான பதநீர், கருப்ப நீர், பனம்பானம் என்பனவும் அழகிய வேலைப்பாடுகள் கொண்ட விசிறிகள், சுளகுகள், கடகங்கள், நீத்துப் பெட்டிகள், கைப்பைகள், கூடைகள், தொப்பிகள், காணப்பெற்றன. அதுபோல் வீட்டினை அழகுபடுத்தும் கலைப்பொருட்களாக பூக்கள், யானை, மயில், சுவர் அலங்காரங்கள், தேர், பறவை போன்ற உருவங்களையும் காணக்கூடியதாக இருந்தது. உணவு தயாரித்து வழங்க உதவும் பொருட்களான அகப்பைகள், கரண்டிகள், சிறு கோப்பைகள், இடியப்ப தட்டுக்கள், இடியப்ப உரல்கள், தட்டுக்கள் என்பனவும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் சிறார்களின் கூட்டுறவு பற்றிய ஓவியங்கள் எம்மவர்க்கு நல்லிணக்கத்தையும் ஒற்றுமையின் தார்பரியத்தையும் விளக்கும் வகையில் காணப்பட்டது.

பனையின் பயன்களைச் சற்று விரிவாக நோக்க இயன்றளவும் ஈழத்தில் நிலைத்து நிற்கும் பனை மரத்தின் பெயருடைய கிராமங்களே சாட்சி. அவற்றில் சில பன்ன மூலை, வடலி அடைப்பு, பன்னங்கண்டி, பன்னசிட்டி, உடலின் உஷ்ணத்தை நீக்கி குளிரவைக்க உதவும் பதநீரில் அடங்கியுள்ள கனிமங்கள் எலும்புகளையும் உடலையும் உறுதிப்படுத்துகின்றன. இதிலிருந்து தயாரிக்கப்படும் பனங்கற்கண்டு, பனஞ்சீனி, கருப்பட்டி போன்றனவும் மருத்துவ குணங்களில் சளைத்ததவையல்ல. பனங்கிழங்கினை அவித்து, சுட்டு அல்லது மாவாக்கி கருப்பட்டி சேர்த்து உண்ண உடலின் மந்த தன்மை நீங்கி வலுபெறும். கிழங்கை உலர்த்தி புளுக்கொடியலாக்கி நீண்ட காலம் பழுதடையாமல் வைத்து உண்ணலாம். நெருப்பில் சுட்டு சமைக்கப்பட்ட பனம் பூக்கள் காய்ச்சல், நெஞ்சரிவு, பித்த கோளாரு, வாய்வு பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமைகிறது. ஆயுர் வேதத்தில் போதியளவு நிறையற்று பலவீனமானவர்களுக்கு பனங்கள்ளைக் குடித்து சத்தான உணவினை உட்கொண்டால் உடல் பலம்பெறும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சங்ககால இலக்கியங்களிலும் அதற்கு பின் தோன்றிய கால இலக்கியங்களிலும் சித்த மருத்துவத்திலும் தனக்கென தனித்தன்மை கொண்ட தருவான பனை நம் பெண்களுக்கு தாலி வழங்கியது மட்டுமன்றி சீரும் கொடுத்தது. பனையின் பயன்களைப் பற்றி பெரிதும் அலட்டிக்கொள்ளாத இன்றைய காலகட்டத்தில் பனை மாண்மியத்தின் பனை எழுச்சி வாரம் ஒரு சிறந்த பயன்மிக்க வாரமாக விழிப்புணர்வூட்டும் வாரமாக அமைந்தது.










பழந்தமிழரின்பனங்காட்டு பண்பாடுகள் மீளத் தழைப்பதன் மூலம் ஆரோக்கியமான சந்ததி உருவாக்கப்படுவதோடு மட்டுமன்றி கிராம மக்களின் வாழ்வாதாரம் விருத்தி பெறும் இதற்கு இது போன்ற விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள், பன்னாட்டு நிறுவனங்களும் அரச சார்பற்ற நிறுவனங்களும் முன்வருதல் உள்நாட்டு உற்பத்தியை அதிகரிக்க செய்து ஏழை மக்களின் வாழ்வில் ஒரு விடியலை ஏற்படுத்தும்.







25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# WAR MUSEUM SIEM REAP CAMBODIA









## பூக்கள் கனிகள் எனப்பாராது அடியோடு அழித்த கம்போடியா யுத்தம்!

## See you again ???

கம்போடியா என்றும் பின்னர் கம்பூச்சியா என்றும் பெயர் மாற்றம் செய்யப்பட்ட இந்தச் சிறிய நாடு கிழக்காசியக் கண்டத்தில் தாய்லாந்து, லாவோஸ், வியட்நாம் ஆகிய நாடுகள் சூழ்ந்த சின்னஞ்சிறிய நாடு. தமிழ் நாடு அளவுதான் இருக்கும். இதன் தலைநகரம் நாம்பென் எனும் ஊர். மலேசிய தீபகர்பத்தின் வடக்கில் தாய்லாந்து வளைகுடாவின் கரையில் அமைந்தது. 93 லட்சம் ஜனத்தொகை கொண்டது. இந்த நாடு மன்னராட்சியின் கீழ் இருந்தது. நரோத்தம் சிகானோக் என்பது மன்னரின் பெயர். இங்கு 1975-ஆம் ஆண்டில் போல் பாட் எனும் ராணுவத் தளபதி தன்னுடைய கேமர் ரூஜ் எனும் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியை கம்போடியாவில் தொடங்கினான். நாட்டின் பெயரை கம்பூச்சியா என்று மாற்றினான்.

1975-இல் தொடங்கி இந்த போல் பாட்டின் ஆட்சியினர் சுமார் இருபது லட்சம் கம்போடிய மக்களைக் கொன்று குவித்தனர். கிட்டத்தட்ட ஜனத்தொகையின் நாலில் ஒரு பங்கு துடைத்தெறியப்பட்டது. இதெல்லாம் அரசியல் சார்ந்த படுகொலைகள் மூலமும் பட்டினி போட்டும் கட்டாயப் படுத்திய உடல் உழைப்பின் காரணமாகவும் கொன்று போட்டார்கள். குறுகிய காலத்தில் இருபது லட்சம் பேர் கொலை என்றால் அது சமுதாயக் கொலையாகக் (genocide) கருதப்பட வேண்டும். அந்த காலகட்டத்தில் அதாவது சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்பு இந்தச் செய்திகளெல்லாம் கம்போடியன் பேரழிவு (Cambodian Holocaust) என்றும் கம்போடியன் மக்கள் படுகொலை (Cambodian Genbocide) என்றும் விரிவாகப் பேசப்பட்டது. இந்த படுகொலைகளெல்லாம் ஒரு முடிவுக்கு வரக் காரணமாக அமைந்தது அந்த நாட்டின் மீது அண்டை நாடான வியட்நாமின் படையெடுப்பு. அதன் பிறகு சுமார் பத்தாண்டுகள் அங்கு வியட்நாமியர் ஆட்சி நிலவியது. வியட்நாம் ஆட்சியிலும் பாலியல் வன்முறை சித்திரவதை கொலை கொள்ளை என யாவும் நடந்துகொண்டே இருந்தது.
பலரது கைகளில் சிக்கித்தவித்த நாட்டின் யுத்தகாலக் காட்சியகம் எப்படி இருக்கும் என்று சொல்லத் தேவை இல்லை.

எங்கிருந்தாலும் பிள்ளைகள் தாய்தந்தையரை நினைப்பது போலவும். தாய்தந்தையர் பிள்ளைகளை நினைப்பது போலவும். நாம் எந்த நாட்டுக்கு சென்றாலும் சில காட்சிகள் எம்தாயகத்தை நினைக்கத் தூண்டியவண்ணமே இருக்கும்.
ஒரு மாந்தோப்புக்குள் யுத்தகால காட்சியகம் அமைத்துள்ளார்கள். மாம்பழங்கள் பழுத்து அங்கு வைக்கப்பட் இராணுவ பன்சர்கள் மேல் வீழ்ந்துள்ளது. Temple Tree பூக்கள் அதுமாதிரியே பன்சர்களின் மேலும் இராணுவ வாகங்கள் மீதும் வீழ்ந்து இருக்கின்ன.
இவற்றைப் பாரக்கும்போது இன்று யாழ்ப்பாணத்தில் முற்றாக இராணுவம் வெளியேறாது நமது செம்மண்பரப்பில் நமது முற்றங்களில் அமர்ந்திருந்து மாம்பழங்களை சூப்புவது ஞாபகம் வருகிறது. அங்கு வைக்கப்பட்டிருக்கும் பல வகையான கண்ணிவெடிகள் நமது தாகத்தில் பாவிக்கப்பட்டவையே. ஆயுதங்களை அள்ளி வழங்கிய நாடுகளது பெயரில் இரசியா முன்னணியில் உள்ளது.




மடித்து வைக்ககூடிய மண்வெட்டி ஒன்று இருந்தது. அது ஒரு இராணுவ வீரன் இறந்தால்.உடன் மண்ணுக்குள் தோண்டி புதைத்துவிடவேண்டும். காரணம் மற்று ஒரு வீரனுக்கு அந்த இறப்பின் வலி போராட்டத்தின் வலிமையை குறைத்துவிடும் என்பதற்காகவே இந்த உடனுக்குடன் அடக்கம் செய்யும் பழக்கம். அதற்கே இந்த மடிப்பு மண்வெட்டி.
கம்போடியா நாட்டிற்கு தேசியக் கொடி எது. அங்கோவாட் கோவிலை தன்னக்தே பதித்தது. அந்நாட்டின் தேசியக் கொடி. ஆனால் அந்த நாட்டை பிடித்து சிப்பிலி ஆட்டியவர்கள் அந்த அந்தக் காலத்திற்குரியவர்களது விருப்பே கொடியாக வெறுப்புடன் பறந்துள்ளது.
ஒரு சுற்றுலா நகரத்தை பார்த்துவிட்டு திரும்பும் போது அங்கு மீண்டும் வருக நன்றி என நகர எல்லையில் ஒரு வளைவாக போடப்பட்டிருக்கும். இதனை நாம் யாழ்ப்பாண எல்லையில் கூட அன்றும் இன்றும் காணலாம். ஆனால் யுத்தகால காட்சியகம் அங்கு நாம் பார்த்து முடித்து வெளியேறும் போது மீண்டும் வருக அல்லது மீண்டும் சந்திப்போம் என அங்கு எழுதப்பட்டிருப்பது வழமை. ஆனால் இங்கும் மீண்டும் சந்திப்போம் என எழுதப்பட்டிருந்தது. அதுதான் தூக்கிவாரிப் போட்டது.
அது எழுதப்பட்டிருந்தது ஒரு செல் மீது என்பதே ஆச்சரியம். உலகெங்கும் தமிழின் இருப்பை பார்க்கும்போதும் மொழி அழிவைகளை பண்பாட்டு சீரழிவுகளைக் காணும்போதும் தாயகத்தில் விடுதலையை நேசித்தவர்கள் நேசிக்காதவர்கள் என்ற வேறுபாடு மறந்து ஒரு உண்மையை உணர்வார்கள். நமக்கு ஒரு அரசு ஏற்பட்டிருந்தால் தாயகத்தில் மட்டுமல்ல உலகெங்கும் தமிழ் பாதுகாக்கப்பட்டிருக்கும். எங்கள் மாவீரனை நாம் நேசிக்கின்றோமோ இல்லையே இன்று அவர் எதிரிகளும் அவரை நேசிப்பது தெரிகிறது.
தாயகத்தில் அன்று இருந்த கைத்தொழில் விவசாயம் பல காணாமல் போய்க்கொண்டு இருக்கின்றன.கோழிவளர்க்கப் பயம், வாழை நட பயம், பப்பாசி நட பயம். சுயமாக ஒரு தொழில் செய்யப் பயம். எங்கும் திருடர்கள். திருட்டை அங்கு ஒளித்தால் பாதி விடிவை நாமே நமக்குள் ஏற்படுத்திக் கொள்ளலாம்.
எங்கு சென்றாலும் நாம் சுற்றி சுற்றி நம்நாட்டு கதை பேசுகிறோம் என எண்ணலாம். உண்மைதான் நாம் எங்கு சுற்றினாலும் எங்கு இருந்து புறப்பட்டோமோ அந்த இடம் போய்ச் சேரவில்லையே!

ஸ்ரீ வெங்கடேஸ்வரப் பெருமாள் திருக்கோவில் - ஹம்

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா ஆரம்பம்
02.09.2018 ஞாயிறு
காலை 9.00 மணி அபிஷேக பூசை, அதனைத் தொடர்ந்து அன்னதானம்
மாலை 4.00 மணிக்கு வசந்த மண்டப பூசை,வீதியுலா,
உறியடி உற்சவ நிகழ்வுகள் இடம் பெறும்.

ஆலய தரிசன நேரம்:
காலை 9.00 மணிமுதல் 13.00 மணிவரை
மாலை 17.00 முதல் 20.00 வரை
பூஜை நேரம்: தினமும்:
காலை 10.00 மணி மாலை 18.00 மணி

Tel:02381 42 66 420
+49(09176 80 56 96 09

Sri Venkateswara perumal Temple.e.V
Nassauerstraße 20
59065 Hamm-Mitte/Germany





அடியவர் குறைதீர்க்கும் வெங்கடேஸ்வரப் பெருமானை வணங்கி உங்கள் குறைதீருங்கள்

# பூக்களைப் பார்த்து பூரிக்கும் வேர்கள்!

## கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களின் புதல்வியும், பரதக்கலை வித்தகியுமான கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன்



ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன்



குரு கோபிநாதத்



செல்வி அபிரா தயாபரன்

தமிழகத்தில் பரதக் கலை மறுமலர்ச்சி ஏற்பட்ட காலத்தில் அதன் தாக்கம் யாழ்ப்பாணத்திலும் விரைவில் எதிரொலிக்கத் தொடங்கிய காலப்பகுதியான 1935 ஆம் ஆண்டளவில் இணுவில் ஏரம்பு அண்ணாவியார் அவர்களும் தனது மகன் சுப்பையாவுக்கு நாட்டியப் பயிற்சி அளித்து வந்தார். சுப்பையா அவர்கள் பல கலை நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் ஆற்றுகை செய்து வந்த வேளையில் தான் நடனக் கலையில் யாழ்ப் பாணத்தில் ஒரு மறுமலர்ச்சி தோன்றியது எனலாம். இவர் இந்தியா சென்று பரதநாட்டி யத்தையும் கதகளியையும் நன்கு கற்று வந்து யாழ்ப்பாணம் நெடுந்தீவு மத்திய மகா வித்தியாலயத்தில் நடன ஆசிரியராகக் கடமையாற்றியதுடன் பல பாடசாலைகளில் நடன நிகழ்வுகளைப் பழக்கி மேடையேற்றியும் புகழ்பேற்றார் அத்தோடு 1960 இல் கொக்குவில் மேற்கில் “கலாபவனம்! எனும் நாட்டிய நிறுவனத்தை ஸ்தாபித்து பல மாணவர்களுக்கு நடனக் கலையைப் பயிற்றுவித்து வந்தார். இந்த நிறுவனம் ஸ்தாபிக்பபட்டு 48 வருடங்கள் பூர்த்தியடைந்த விட்டன. இன்று இந் நிறுவனத்தை அவரது மகள் ஸ்ரீமதிசாந்தினி சிவனேசன்அவர்களும் பேர்த்தி தேவந்தி அவர்களும்நடத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் பரதக்கலையின் தந்தை எனப் போற்றப்படும் கலைச் செல்வன் ஏரம்பு சுப்பையா அவர்களிடம் பரதத்தையும், கல்வியை யா/கொக்குவில் இந்து கல்லூரியிலும், உயர் கல்வியை வேம்படி மகளிர் கல்லூரியிலும் கற்று வந்தததுடன் சிறுவயது முதலே தனது தந்தையாரிடம் நடனக் கலையையும் பயின்று வந்தார். தனது ஆறாவது வயது முதல் பல நாட்டிய நிகழ்வுகளில் பங்கேற்றதாகவும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி நிகழ்வுகளில் தான் சிறுவயதில் பல நிகழ்ச்சிகளைச் செய்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

இவர் பரதக் கலையை மேலும் கற்றுக் கொள்வதற்காக இந்தியா சென்று பத்ம ஸ்ரீ அடையார் லக்சுமணனிடம் கற்றுத் தேர்ச்சி பெற்றார். அத்தோடு கதகளியைக் கற்றுத் தேர்ச்சி பெற்றார். அத்தோடு கதகளியை 1969 இல் தனது தந்தையின் குருநாதரான குரு கோபிநாதத் அவர்களிடம் திருவனந் தபுரம் விஸ்வ கலாகேந்திரத்தில் 2 வருடங்கள் பயின்று வந்தார்.

பரதக் கலையிலும், கதகளியிலும் நன்கு புலமை பெற்ற ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன் அவர்கள். யா/ இராமநாதன் கல்லூரியில் நடன ஆசிரியராக நியமனம் பெற்று பின் 2 ஆண்டுகள் ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய மாணவராக பரதக் கலையில் பயிற்சி பெற்று மீண்டும் இராமநாதன் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றி 1985 காலப்பகுதியில் இராமநாதன் நுண்கலைத் துறையின் வருகை தரு விரிவுரையாளராகப் பணியாற்ற இணைந்து இன்று வரை பணியாற்றி வருகின்றார். 1991இல் இருந்து 2002 ஆம் ஆண்டு வரை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடனக் கலை விரிவுரையாளராகக் கடமையாற்றி வந்தார்.

எதிர்வரும் 15.09.2018 ஆடற்கலாலய மாணவி. செல்வி அபிரா தயாபரன் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றத்தில் பிரதமவிருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். அத்துடன் அரங்கேற்றம் சிறப்புற செல்வியையும் அவரது குரு நாட்டியக் கலாஜோதி நிமலன் சத்தியகுமார் அவர்களையும் தாயகத்தின் பரதக்கலை வேர்களான ஸ்ரீமதி சாந்தினி சிவநேசன் அவர்கள் வாழ்துவதில் பூரிப்பு அடைகிறார்.

**தாயகத்திலிருந்து: திருமதி. வலன்ரீனா இளங்கோவன்** (வெற்றிமணி ஆசிரியை-யாழ்ப்பாணம்)





# சொல்வாக்கும் செல்வாக்கும்



கௌசி

அறிவும் சொல்லும் ஆற்றலும் உள்ள ஒருவருக்கு அதை வெளியே கொண்டுவர ஏதோ ஒரு உதவி தேவைப்படுகிறது. தனித்து வாழவோ தனியோ ஒரு உற்பத்தியை வெளியிடவோ முடியாது என்னும் போது ஒரு ஊடகத்தின் அவசியம் தேவைப்படுகின்றது. உலகப்படைப்பும் அப்படியேதான் அமைந்திருக்கின்றது. அண்டவெளியிலே சுற்றிவரும் கிரகங்கள் ஒன்றையொன்று சார்ந்தே வாழுகின்றன. எமது உடல், மண், நீர், நெருப்பு, ஆகாசம், காற்று, மனது, ஆகியவை ஒன்றோடு ஒன்று சேர்ந்துதான் உற்பத்தியாகின்றன என்று புத்தர் கூறியுள்ளார். தனித்து நிற்கும் மரம் கூட வளர்வதற்கு நீரை வேண்டி நிற்கின்றது. தற்போது ஐரோப்பிய ஒன்றியமும் அப்படித்தான். "பாடம் படிக்காத மேதைகளும் பாரினில் உண்டு" என்று கண்ணதாசன் சொன்னாலும் வாசிக்கப் புத்தகம் கொடுத்த எழுத்தாளன் அம்மேதைக்கு உதவியுள்ளான்.

ஒரு தனிமனிதனாகப் பிறக்கும் போது தாயின் இரத்தத்தைப் பாலாகக் குடித்தே வளருகின்றான். வளரும்வரை பெற்றோரின் துணையுடனேயே வளருகின்றான். அதன்பின் தன்னுயை வளர்ச்சிக்குரிய ஒரு உதவியை நாடுகின்றான். எனவே ஒருவர் வாழ்வில் பிரகாசித்து நிற்கின்றார் என்றால், அங்கு யாரோ சிலர் பின்னின்று வெளிச்சமிட்டிருக்கின்றார்கள் என்பதை மறுக்கமுடியாது. அதேவேளை அந்த வெளிச்சத்தைக் காண்பதற்கே செல்வாக்கு தேவைப்படுகின்றது என்பது ஒரு வருந்தத்தக்க உண்மையாகும்.

தன்னை வெளிப்படுத்துவதற்கும் தனது திறமையை விளம்பரப்படுத்து வதற்கும் முனைந்து நிற்கும் மனிதர்கள் எப்படியாவது தமது நிறைவான திறமையையோ, சிறிதளவான திறமையையோ பெரிதாகப் பிரமாண்டமாகக் காட்டப் பிற உதவியை நாடி நிற்கின்றார்கள். அது மனிதனாகவும் இருக்கலாம், இலத்திரனியலாகவும் இருக்கலாம். இதன் மூலம் செல்வாக்கு பெருகுகின்றது. ஆனால், செல்வாக்கு நிறைந்த பிரபலங்கள் தங்கள் சொல்வாக்கை இழக்கும் போதுதான் தமது பெருமையை இழக்கின்றார்கள். சொல்வாக்கு நேர்மையாகவும், சுத்தமாகவும் இருந்தாலேயே செல்வாக்குப் பெருகுகின்றது. செல்வாக்குப் பெருக வேண்டும் என்பதற்காகவும் தமது புகழை மேலே இழுக்க வேண்டும் என்பதற்காகவும் தம் சொல்லில் செயலில் இழுக்கு ஏற்படும் படியாக நடந்து கொள்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

செல்வாக்கு பணச்செல்வாக்கு, அரசியல் செல்வாக்கு, இலக்கியச் செல்வாக்கு, சமயச்செல்வாக்கு, சொற்களின் செல்வாக்கு என்பதுபோல் செல்வாக்குகளை வகைப்படுத்தலாம். இதில் சொற்களின் செல்வாக்கே சொல்வாக்காக அமைகின்றது. இவையெல்லாம் மக்கள் செல்வாக்குகளே. எச்செல்வாக்காக இருந்தாலும் சொல் சுத்தமாக இருக்க வேண்டியது அவசியமாகின்றது. அரசியல்வாதி சொல்வதைச் செய்ய வெண்டும். இலக்கியவாதி எழுதியவாறு நடக்க வேண்டும். பணம் படைத்தவன் நடத்தையில் சொல்லில் சுத்தம் வைத்திருக்க வேண்டும்.

இச்சுத்தத்திலிருந்து தவறுகின்ற போது தன் செல்வாக்கை இழக்கின்றான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாகின்றது.

நாம் சொல்லுகின்ற சொற்களில் சில செல்வாக்குப் பெறுகின்றன. அல்லது பெற வைக்கின்றோம் உதாரணமாக நான் கூறிய சொல்லும் செயலும் ஒன்றானால் இவ்வுலகம் சொல்லும் உன் செயல் என்னும் என் வார்த்தைகளின் வழியே நான் நடப்பேனேயானால், அச்சொற்கள் எனக்குச் செல்வாக்கை ஏற்படுத்தும்.

அன்பும் இரக்கமுமே வாழ்க்கையின் அடிப்படை. உண்மையைச் சொல். அது உன் வார்த்தைகளைப் பாதுகாக்கும் என்று வள்ளலார் கூறிய சொல்வாக்கும், புத்தர் கூறிய பல வாக்குகளும் அவருக்குச் செல்வாக்காக அமைகின்றன. நாளும் பலர் மனங்களின் தூய்மைக்குத் துணையாக நிற்கின்றன.

அறிஞர்கள் கூறுகின்ற வாக்குகளை நாம் தாரகமந்திரமாக ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில் அவ்வாக்குகள், நாம் தவறுகின்ற போது எம்மனதைத் தட்டித் திருத்தும். உதாரணமாகத் திருக்குறள் கற்று வளர்ந்த எமக்கு "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு" என்னும் வள்ளுவர் சொல்வாக்கு எம்மை தட்டி வழிநடத்துகின்றது அல்லவா! "யார் சொன்னார் எவர் சொன்னார் என்றிருக்க வேண்டாம். எவர் சொன்ன சொல்லையும் உனது சொந்த அறிவால் எண்ணிப் பார்" என்று சாக்ரடீஸ் சொல்வாக்கு எம்மைச் சிந்திக்க வைக்கிறது அல்லவா! எமக்கென்று தரமான ஒரு வாக்கை நாம் கொண்டிருக்கும் போது அவ்வாக்கை மீறுகின்ற மனப்பக்குவம் எமக்கு ஏற்படாது என்று நான் நினைக்கின்றேன்.

ஆனால், நம்மைத் தேடிவரும் செல்வாக்கைக் காத்திருக்காது மனிதன் செல்வாக்கைத் தேடிப் போகின்ற போதுதான் வாழ்க்கையில் தன் நெறி பிறழ்வை அவன் காட்ட வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. அவனுடைய விசுவாசம் சற்று தள்ளிநிற்கின்றது. இலக்கியச்செல்வாக்கை எடுத்துப் நோக்கும்போது ஒரு இலக்கியவாதி எத்தனை திறமை இருந்தும் செல்வாக்கிற்குக் கைகட்டி அவன் சேவகம் பார்க்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. சரியான ஒரு இடத்தைப் பிடிப்பதற்கு அந்த ஊடகத்தின் அல்லது செல்வாக்குள்ள ஒரு மனிதனைத் தேடவேண்டிய அவசியம் தேவைப்படுகின்றது. உதாரணமாக சிறந்த ஒரு கவிஞன் தன் கவிதைகளை எத்தனையோ பத்திரிகைகளுக்கு அனுப்பியும் அவனது கவிதை நிராகரிக்கப்பட்டது. கவலையுற்ற அவ் இளைஞன், கண்ணதாசனிடம் தனது கவிதை ஒன்றைக் கொடுக்க அக்கவிதையை மேடையில் கண்ணதாசன் தனது கவிதை என்னும் பாங்கில் வாசித்தபோது அனைவரும் கைதட்டி ஆரவாரித்தார்களாம். அப்போது கண்ணதாசன் "இக்கவிதையை நான் எழுதவில்லை. இந்த இளைஞனே எழுதினான்" என்று அவ் இளைஞனை அடையாளம் காட்டினாராம். நல்ல ஒரு படைப்பாளி தன் திறமையைக் காட்ட செல்வாக்குள்ளோரை நாட வேண்டியுள்ளது. அப்படி அந்தச் செல்வாக்கைப் பெற்றுவிட்டால் தன் சொல்வாக்கில் அவன் கவனம் செலுத்த வேண்டிய அவசியம் இருக்கின்றது. எதிர்காலம் எங்கள் கையில் அதனால், சொல்வாக்கைச் சுத்தமாக்குவோம் செல்வாக்கு எம்மைத் தேடிவரும்.






Frankfurt நகரில்....

புதுப்பொலிவுடன்
மீண்டும் உங்கள்
அபிமான ஸ்தாபனம்

Jaffna Bazar



# Jaffna Bazar

உங்கள் இல்லத்திற்கு தேவையான அனைத்து
மளிகைப்பொருட்களும் பசுமையான மரக்கறி
மற்றும் கடல் உணவு வகைகளும்
நம்மிடம் கிடைக்கும்




வாருங்கள் தாயகத்தில் நிற்கும் உணர்வை
நீங்கள் பெறுவீர்கள்



Kaiser Straße.49 69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 e.mail:jbspiece2018@yahoo.com

0049 69 25626353
0049 179 4792961
0049 151 71520425




# புகழ் இழந்தால் என்ன நடக்கும் ?

தன்னுடைய வெண்கலச் சிலைக்கு முன் உறங்கிய புகழ்பெற்ற ஹாலிவுட் ஹீரோ (Arnold Schwarzenegger)அர்னால்டின் பரிதாப நிலை
நடிப்பில் படிப்படியாக உயர்ந்து கலிபோர்னியாவின் கவர்னர் என்ற புகழின் உச்சத்தில் இருக்கும் பொழுது தன்னுடைய வெண்கலச் சிலை முகப்பில் நிறுவப்பட்ட வகையில் ஒரு ஆடம்பர ஹோட்டலை திறந்து வைத்தார்.

ஹோட்டலின் திறப்பு விழாவின் பொழுது அந்த ஆடம்பர ஹோட்டலின் உரிமையாளர் "அர்னால்டு எப்பொழுது வேண்டுமானாலும் இந்த ஹோட்டலுக்கு வந்து முன் பதிவு ஏதும் இன்றி இலவசமாக தங்கிக் கொள்ளலாம், அவருக்கு எப்பொழுதுமே ஒரு அறை இருக்கும்" என்று அறிவித்தார்
நாட்கள் நகர்ந்தன ...
பதவி போனது ..
புகழ் போனது ..
சமீபத்தில் சாதாரண மனிதனாக அந்த ஹோட்டலுக்கு சென்ற அர்னால்டுக்கு அதிர்ச்சி காத்திருந்தது.
ஹோட்டலில் எல்லா அறைகளும் புக்கிங் ஆகிவிட்டது தற்பொழுது அறைகள் ஏதும் இல்லை என்று ஹோட்டல் நிர்வாகம் கூறவே அதிர்ச்சியில் உறைந்து போனார் ஹாலிவுட் முன்னாள் ஹீரொ, கலிபோர்னியா முன்னாள் கவர்னர், அந்த ஹோட்டலை திறந்து வைத்த முன்னாள் வி.ஐ.பி "அர்னால்டு ஸ்குவாஸ"னேக்கர்"
மனமுடைந்த அர்னால்ட்,
தான் வைத்திருந்த போர்வையை எடுத்துக்கொண்டு அந்த ஹோட்டலின் முகப்பில் தன்னால் திறந்து வைக்கப்பட்ட, வெறும் அலங்கார பொருளாக நின்றுக்கொண்டிருந்த தன்னுடைய வெண்கலச் சிலைக்கு முன்னர் செய்வதறியாது படுத்து விட்டார்.



இந்த சம்பவத்தால் துவண்டு போன அர்னால்ட் அந்த காட்சியை புகைப்படம் எடுத்து வலைதளத்தில் பதிவிட்டு உலகத்திற்கு ஓர் செய்தியை சொல்கின்றார்
"நாம் பதவியில் இருக்கும் பொழுது மெச்சப்படுவோம், புகழப்படுவோம், நமக்கு உச்சபட்ச மரியாதை தரப்படும்"
"எப்பொழுது நாம் பதவியையும், புகழையும் இழக்கின்றோமோ அடுத்த நொடியே நாம் ஒதுக்கப்படுவோம், நமக்கு தந்த சத்தியங்கள் காற்றில் பறக்கவிடப்படும்"
"எந்த சத்தியங்களும், வாக்குறுதிகளும் உங்களுக்காக கொடுக்கப்பட்டது அல்ல அது உங்களை அலங்கரித்த பதவிக்கு கொடுக்கப்பட்டது"
"உங்கள் புகழை,உங்கள் பதவியை, உங்கள் அதிகாரத்தை ஒரு போதும் நம்பாதீர்கள்" **"இது எதுவுமே நிரந்தரம் கிடையாது"**

படித்ததில் பிடித்தது: மாலி




# கலாநிதி சுகன்யா அரவிந்தன்

## நேர்காணல்




**"யாழ் பல்கலைக்கழக இசைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளரும், கர்நாடக இசைத்துறையிலே மூன்று தசாப்த காலமாக சிறப்பான முறையிலே இசைக்கச்சேரிகளை இலங்கையிலும் பிற நாடுகளிலும் நிகழ்த்தி வருபவரும், பாரம்பரியம்மிக்க இசைக் குடும்பத்தின் வழி வந்தவருமாகிய கலாநிதி சுகன்யா அரவிந்தன் அவர்களுடனான ஓர் அனுபவப்பகிர்வு."**

வலன்றினா: வணக்கம்! பல துறைகளிலே திறமை பெற்றிருக்கும் தாங்கள், தங்கள் கலைத்துறைப் பிரவேசம் பற்றிக் கூறுவீர்களா?

சுகன்யா: வணக்கம். வெற்றிமணி இதழுக்கு என்னுடைய சில அனுபவங்களைப் பகிரக்கிடைத்த வாய்ப்பிற்கு முதலிலே நன்றிகளையும் மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொண்டு, என்னுடைய கலைத்துறை சார் பிரவேசம் என்பது என்னுடைய பிறப்புடன் தொடருகின்ற ஒன்று. என்னுடைய தாயார் திருமதி சந்திரமதி சிவானந்தன் அவர்கள் சிறந்த வாய்ப்பாட்டுக் கலைஞரும் இசைஆசிரியருமாவார். என்னுடைய தந்தையார் திரு சிவாநந்தன் அவர்கள் மிகச்சிறந்த கலைரசிகனும், விமர்சகருமாவார். இவர்களது ஆக்கமும் ஊக்கமும் என்னை இந்த கலைத்துறையினுள் நுழையவும், கால்பதிக்கவும் களம் சமைத்துத் தந்தது என்றால் மிகையாகாது.

இசைக்கலை எனக்கு எனது தாயார் தந்த வரம். இதனை மேலும் மெருகுபடுத்த தாயாரின் குருவும், ஈழத்தின் தலைசிறந்த இசை விற்பன்னருமாகிய அமரர் சங்கீதபூஷணம் லயனல் திலகநாயகம் போல அவர்களிடம் இசைக்கலையினைக் கற்றுக்கொண்டேன்.

அடுத்து ஆரம்பத்திலிருந்தே வாய்ப்பாட்டு கற்கும்போது ஒரு வாத்தியமும் இணைந்து கற்பது மிகநன்று என்று என்னுடைய தாயாரின் வழிப்படுத்தலிலே வயலின் வாத்தியத்தினையும் தாயாரிடமே கற்று, பின் ஈழத்தின் தலைசிறந்த வயலின்வித்வான் அமரர் திரு ஆர். எஸ் கேசவமூர்த்தி அவர்களிடம் சிறப்புத் தேர்ச்சி பெற்றேன்.

தொடர்ந்து கலையின் மீதிருந்த ஆர்வம் காரணமாக பரதக்கலையினையும் கலாகீர்த்தி சாந்தினி சிவநேசன் அவர்களிடம் கற்றுத்தேர்ந்தேன்.

இம்மூன்று துறைகளிலும் இலங்கையிலே கலைசார் தரத்தினை நிர்ணயம் செய்வதற்காகப் பல ஆண்டுகாலமாக வருடாவருடம் பரீட்சைகளை நடாத்தி வருகின்ற வட இலங்கை சங்கீத சபைப் பரீட்சையிலே ஆசிரியர் தரத்திலே சிறப்பாகச் சித்திபெற்று 'கலாவித்தகர்' என்கின்ற பட்டத்தினையும் பெற்றிருக்கின்றேன்.

இது மாத்திரமல்லாமல் மூன்று துறைகளிலும் சிறுவயதிலிருந்தே மேடைக் கச்சேரிகளை சிறப்பாக நிகழ்த்தியும் வருகின்றேன். இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட இசைக்கச்சேரிகளை இலங்கையின் பலபாகங்களிலும், தமிழகம், கனடா, சுவிஸ்லாந்து, மற்றும் லண்டன் ஆகிய நாடுகளிலும் நிகழ்த்தியிருக் கின்றேன். எனக்கு வாய்த்த குருமாரின் ஆசியும் வழிப்படுத்தலுமே இத்துணைதூரம் இக்கலை உலகிலே சிறக்கவும் நிலைக்கவும் காரணமாக அமைந்திருக்கின்றது என்பது உண்மை.

வலன்றினா: இத்தனைதூரம் மேடைக்கச்சேரிகளிலே சிறந்து விளங்கிய நீங்கள் எவ்வாறு கல்விப்புலத்திலே பயணித்தீர்கள் என்பது பற்றி எடுத்துக்கூறுவீர்களா?

சுகன்யா: யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியின் பழையமாணவியாகிய நான் எமது தேசத்தின் அசாதாரண சூழல்களையெல்லாம் கடந்து பல்கலைக் கழகத்தினுள் நுழையும் வாய்ப்பினைப்பெற்றேன். யாழ் பல்கலைகழகத்தின் கலைத்துறையிலே மாணவியாக நுழைந்த நான் சமூகவியலை சிறப்புப்பாடமாகத் தெரிவுசெய்து சிறப்புக்கலைப்பட்டதாரியாக வெளியேறி னேன். எனினும் பிறப்போடுதொடரும் பந்தம் போல இசையின் மீதிருந்த ஆர்வமும் தந்தையாரின் வழிப்படுத்தலாலும் இசைத்துறையிலும் பல்கலைக் கழகப் பட்டத்தினைப் பெறும் பொருட்டு யாழ் பல்கலைக் கழகத்திலேயே இசைத்துறைக்கான சிறப்புக்கலைப் பட்டத்தினையும் சிறப்பாகப்பூர்த்தி செய்தேன். இதன் பயனாக இன்று யாழ் பல்கலைக் கழகத்தின் இசைத் துறையிலே விரிவுரையாளராகப் பணியாற்றி வருகின்றேன்.

வலன்றினா: தாங்கள் நடனத்துறையிலும் பல்கலைக்கழக அனுபவத்தினைப் பெற்றிருப்பதாக அறிந்தேன். அது பற்றி எடுத்துரைப்பீர்களா?

சுகன்யா: ஆம். பரதக்கலையினை ஆரம்பத்திலே திருமதி சாந்தினி சிவநேசன் அவர்களிடம் கற்றதன்பின், பரதக் கலைக்கான முதுமாணிக்கற்கை நெறி யினை திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்திலே தொடர்ந்து சிறப்பாகச் சித்திபெற்றிருக்கின்றேன்.


நேர்கண்டவர் : வலன்றீனா இளங்கோவன் MA

வலன்றினா: தற்பொழுது தாங்கள் இசைத்துறையிலே கலாநிதி பட்டத்தினைப் பெற்றிருக்கின்றீர்கள். வாழ்த்துக்கள். இந்தக்கற்கைநெறியின் தொடர்ச்சி, அனுபவம் பற்றி எம்முடன் சிறிது பகிர்ந்து கொள்கிறீர்களா?

சுகன்யா : எந்தத்துறையினையும் ஆழத்தெரிந்து கொள்வதற்கு ஆய்வுகள் துணைபுரிகின்றன. அதேநேரம் நாங்களும் எம்முடைய திறமையினையும் ஆர்வத்தினையும் பூர்த்தி செய்துகொள்ள இந்த ஆய்வுத் தேடல்கள் துணைபுரிகின்றன. அந்த வகையிலே இசைத்துறையிலே கலாநிதிப்பட்ட ஆய்வினைப்பூர்த்தி செய்வதற்காக சென்னைப்பல்கலைக்கழகத்திற்கு இந்திய அரசின் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தெரிவுசெய்யப்பட்டு இணைந்து கொண்டேன். நூற்றாண்டு காலப்பழமை வாய்ந்த பல்கலைக்கழகத்திலே பயிலுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சியும் பெருமையும் கொள்கின்றேன். இது மாத்திரமல்லாமல் இலங்கையிலிருந்து சென்னைப்பல் கலைக்கழகத்திலே இசைத்துறை சார்ந்து கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வினைப் பூர்த்திசெய்த முதலாவது ஆய்வாளர் என்கின்ற பெருமைக்கும் உரியவளாகின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கின்றது. இவ்வாய்ப்புகள் எல்லாம் இறை அளித்தவரம்.

எனது ஆய்விற்கான வழிகாட்டியாக தமிழகத்தின் தலைசிறந்த சங்கீத வித்வானும், இசை ஆராய்ச்சியாளரும், அவ்வேளையிலே இசைத்துறைத் தலைவராக இருந்தவரும், தற்போது இந்திய கவின்கலைப்பல் கலை கழகத்தின் துணைவேந்தருமாக விளங்குகின்ற பேராசிரியர் முனைவர் திருமதி பிரமிலா குருமூர்த்தி அவர்களின் வழிப்படுத்தலிலே என்னுடைய ஆய்வினை சிறப்பாகப் பூர்த்திசெய்து தாயகம் மீண்டேன்.

வலன்றினா: இசைக்கலை சார்ந்து ஆற்றுகை நிலை, ஆய்வு நிலை இவ்விரண்டு தளங்கள் பற்றி விவரிக்கமுடியுமா?

சுகன்யா: இசை மாத்திரமல்ல கலைகள் யாவுமே ஆற்றுகை சார்ந்தவை. ஆற்றுகை என்கின்ற போது பார்வையாளர் ஆற்றுகையாளர் இருவருக்குள்ளும் நடைபெறுகின்ற பரிமாற்ற நிலையேயாகும். இந்தப்பரிமாற்றத்தின் வெற்றி தோல்வியே ஆற்றுகையின் வெற்றி, தோல்விக்குக் காரண மானவையா கின்றன.ஆனால் ஆய்வுநிலை என்கின்ற போது இது கல்விப்புலத்தோடு நெருங்கிய தொடர்பினைக் கொண்டது. அதுமாத்திர மல்லாமல் ஆற்றுகை நிலையிலிருந்து ஒருபடி மேல்நிலையில் இருப்பது. இது உண்மையின் தேடலாக அமைகின்றது. இந்தத் தேடல் ஆற்றுகை சார்ந்தோ அல்லது சாஸ்த்திரிய விடயங்கள் சார்ந்ததாகவோ இருக்கலாம். இங்கு ஆய்வாளன் உண்மையை தேடித் தெளிந்து உலகிற்கு சமர்ப்பிக்கின்றான். தேடல்கள் சரியானவையாக, முறையானவையாக இருக்குமானால் முடிவுகளும் தெளிவானவையாக இருக்கும். ஒரு கலையின் வெற்றிக்கும் அதன் செழுமைக்கும் இந்தத் தேடலானது மிகவும் முக்கியமான தாகின்றது. தேடல்கள் தொடருகின்றபோது கலை செழுமை பெறும்.

தொடர்ச்சி 19ம் பக்கம்

**Nandy's Catering & Partyservice**

உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
**பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!**

ஒரே குடையின் கீழ்
எங்கள் சேவை!

உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ
அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள்
விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம்
மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும்
நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ
ஆயத்தமாக உள்ளோம்

NANDY'S
CURRY S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf

Mobil 0173-7424955
Tel:0211 76 91 974

www.Nandys.de
e.mail:info@nandys.de

## கலாநிதி சுகன்யா அரவிந்தன்

18 ம் பக்கத் தொடர்ச்சி



வலன்ரினா: ஒரு அரங்கக் கலைஞன் எவ்வாறான விடயங்களைக் கைடப்பிடிக்கவேண்டியவனாகின்றான்?

சுகன்யா: முதலிலே தான் கற்ற கலையினை மதித்துப் போற்றத் தெரியவேண்டும். தெளிவுறக்கற்றல் அவசியம். சாஸ்த்திரிய சம்பிரதாயங்களை நுணுக்கமாகக் கற்கவேண்டும். மரபுசார் விடயங்களில் தெளிவு பெற்றிருக்கவேண்டும். இவை தவிர அரங்க இசை நிகழ்ச்சி என்ற வகையிலே நோக்கும்போது நிகழ்வு நடைபெறப்போகும் இடம், ரசிகர்களின் தரம் போன்றவை பற்றித் தெரிந்திருத்தல் அவசியம். யாருக்காகப் பாடப்போகின்றோம், சபையோரின் எதிர்பார்ப்புக்கள் என்ன என்பது பற்றியெல்லாம் அறிந்திருத்தல் ஒரு வெற்றிகரமான நிகழ்ச்சிக்குப் பலம்சேர்க்கும் காரணிகளாக அமைகின்றன.. ஆலயக்கச்சேரியிலே சாஸ்த்திரிய சம்பந்தமான விந்நியாசங்களைப் பாடிக்கொண்டிருத்தல் நிகழ்வின் வெற்றிக்கு வழிகோலாது.

இது மாத்திரமல்லாமல் பக்கவாத்தியக்கலைஞர்களை மதிக்கவும் நிகழ்வின் வெற்றியில் அவர்களது பங்களிப்பும் மிக முக்கியம் பெறுகின்றது என்கின்ற எண்ணம் மனதிலே இருத்தலவசியம். இசைக்கச்சேரி என்பது பாடகன் மாத்திரமல்லாமல் அது ஒரு கூட்டுப்படைப்பு என்கின்ற எண்ணம் இருத்தலவசியம்.

வலன்ரினா: இன்றைய மாணவர்களுக்கு நீங்கள் சொல்லவிரும்புவது?

சுகன்யா: மாணவர்களுக்கு எப்போதுமே தேடல் அவசியம். கலையினை பட்டப்படிப்புகளுக்காக மாத்திரமல்லாமல் கலைக்காகவே கற்றல் வேண்டும். இசைத்துறையினருக்குப் பயிற்சி மிகவும் முக்கியம். 'பாடப் பாட ராகம் மூட மூட ரோகம்' என்பார்கள் சான்றோர்கள். கலையானது இறைவரம். இது எல்லோர்க்கும் கிட்டுவதில்லை. பாடக்கூடியவர்கள் இறையருள் பெற்றவர்களாகின்றார்கள். எனவே கிடைத்த வரத்தினை போற்றிக் காத்தலவசியம். மிகவேகமாக ஓடிக்கொண்டிருக்கின்ற இந்த சமகால உலகிலே மாணவர்களுக்கு சில விழுமியங்களைக் கற்றுக்கொடுக்கவேண்டிய கடமை ஆசிரியர்களுக்கு இருக்கின்றது. ஆசிரியர்கள் நிறைவாகவும், ஆத்மார்த்தமாகவும் கலையினைக் கற்பிக்கவும், அதேநேரம் மாணவர்கள் குருவை இறை தூதனான மனதிலே வரித்து மாணவர்கள் கற்கப்புகின் கலை வாழும். கலைத்துறையினைப் பொறுத்தவரையிலே குருபக்தி மிகவும் முக்கியமான ஒன்று. 'குருவில்லா வித்தை பாழ்' என்பது ஆன்றோரின் அனுபவ மொழி. இறைவனின் அருட்கடாட்சமும் குருவருளுமே கலையிலே சிறக்க முக்கியமான அம்சங்களாகின்றன.

வலன்ரினா: இதுவரை நேரமும் உங்களது கலைசார் அனுபவங்களை எம்முடன் பகிர்ந்து கொண்டமைக்கு நன்றிகள். மேலும் நீங்கள் கலைத்துறையிலே சிறக்க வெற்றிமணி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றது.

சுகன்யா: நன்றி! இன்று என்னுடைய கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு இவ்வரிய வாய்ப்பினை வழங்கிய வெற்றிமணி இதழ் குழுவினருக்கும் தங்களுக்கும் என்னுடைய நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி. வணக்கம். நேர்கண்டவர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் (யாழ் வெற்றிமணி பிரதம ஆசிரியர்).






## பிரபஞ்சம் செல்லும் பாதை?



–கல்லாறு சதீஷ் –

நீயும் நானும்
இந்தப் பூமியில்
நாளை ஒரு நாளில்
இருக்க மாட்டோம்.

சூரியனும் பூமியும்,
நிறைந்துள்ள கிரகங்களும்
மேலதிக சூரியக் குடும்பங்களும்
நாளை ஒரு நாளில்
அறவே அறவே அற்றே போகலாம்.

உனது முழுமையான தேட்டங்களும்
அனைத்து நம்பிக்கைகளும்
அழிந்தே போகலாம்-ஆனால்
பிரபஞ்சம் மட்டும்
அழியாதிருக்கும்.

நிலைத்திருக்கும் பிரபஞ்சம் போல்
நிறைந்திருக்கும் வாழ்வு
வேண்டுமா?
மரணப் பயணத்திலும்
மலர்ந்திருக்கும் மகிழ்ச்சி
வேண்டுமா?
போ மனிதா போ.......
உனது கடைக் கண் பார்வைக்காக
காத்திருக்கும் மனிதர்களையும்
கரைக்கு அழைத்து வா-அப்போது
மனிதனாயிருந்த நீ
கடவுளாவாய்.
பூமியில் வாழ்ந்த நீ
பிரபஞ்சத்தில் பிரவேசிப்பாய்.
நீயும் கூடப் பிரபஞ்சமாவாய்.




வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
HK Hammacher
Fahrschule- hk- hammacher.de
எமது இணையத்தளத்தை பார்க்கவும்
ஆங்கிலம்,யோ்மன்,பிரஞ்,துருக்கி மொழிகளில்
வகுப்புக்கள் உண்டு.பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள், கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும் சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU ASF FES
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!

Chilli Mixx Catering
உங்கள் மங்கலகர வைபவங்கள்
சுவைபெற எம்மை அழையுங்கள்!
திருமண விழாக்கள்
பூப்புனித நீராட்டு வைபவங்கள்
பிறந்த நாள் கொண்டாட்டங்கள்
ஒன்றுகூடல்கள் எதுவானாலும்
அறுசுவை படைக்க அழையுங்கள்



+49 176 41842298
+49 176 21303158







ஹோலோபோர்டேஷன்
Holoportation





# யேர்மனியில் இருந்தபடி மகன், வன்னியில் தாயுடன்
# ஒரே திண்ணையில் இருந்தபடி பேசலாம்!



“அமெரிக்காவில கனடாவில யேர்மனியில லண்டனில சுவிஸ்ல இப்படி வெளிநாடுகளில் வேலை வேலை என்று இருக்கிற மகன்களை எப்போ தான் பாக்கிறது?” என்பது தொலைதூரத்தில் இருக்கும் இலங்கைப் பெற்றோரின் புலம்பலாய் இருக்கிறது. தினமும் காலையில் அவர்கள் கனடாவிலே அல்லது யேர்மனியிலலோ மகனிடம் வீட்டு வரவேற்பறையில் கொஞ்ச நேரம் அமர்ந்து பேசிவிட்டு வந்தால் எப்படி இருக்கும் ? அல்லது யேர்மனியில் உள்ள மகன் இங்கே வந்து பெற்றோருடன் டைனிங் டேபிளில் அமர்ந்து கொஞ்ச நேரம் பேசிவிட்டுப் போனால் எபடி இருக்கும் ?  ஒரு அறிவியல் புனை கதை போல இருக்கிறது இல்லையா ?

இப்படி ஒரு விஷயம் நடந்தால் ஒன்று அது மேஜிக்காக இருக்க வேண்டும், அல்லது பேய் பிசாசாக இருக்க வேண்டும் என்று தானே நினைக்கிறீர்கள். அது  ஹோலோபோர்டேஷன் நுட்பமாகவும் இருக்கலாம் என்பது தான் புதிய வியப்பூட்டு செய்தி.
தொழில்நுட்பம் நமக்கு முன்னால் நீட்டும் விஷயங்கள் நம்மை தினந்தோறும் வியப்புக்குள் அழைத்துச் சென்று கொண்டிருக்கின்றன. புறாவின் காலில் கடிதம் கட்டி அனுப்பிய செய்தி வரலாறுகளில் உண்டு. திரும்ப அந்த புறா கொண்டு வரும் பதில் செய்தி தான் முதல் கடிதம் சென்று சேர்ந்ததற்கான அத்தாட்சி ! அதற்கு பல மாதங்கள் ஆகும் என்பது தோராயக் கணக்கு.

அதன் பின் கடிதப் பயன்பாடுகள் வந்தன. இன்லண்ட் லெட்டரிலோ, போஸ்ட் கார்டிலோ மூச்சு முட்ட எழுத்துகளை நிரப்பி அனுப்பிய கதை கடந்த தலைமுறையினருடையது. இன்லண்ட் லெட்டரின் ஓரங்களிலும், போஸ்ட்கார்டின் விலாசப் பகுதியிலும் கூட சிற்றெறும்பு ஊர்வது போல சிறுக சிறுக எழுதப்பட்டிருக்கும் கடிதங்கள் சென்று சேர சில நாட்கள் முதல், சில வாரங்கள் வரை தேவைப்பட்டன.

அதன் பின் மொபைல் போன் வந்தது. குறுஞ்செய்திக்கு பேஜரும், அதற்குப் பிறகு எஸ்.எம்.எஸ் சும், மின்னஞ்சல்களும் மாபெரும் புரட்சியையே ஏற்படுத்தி விட்டன. எழுதும் வழக்கம் ஒழிந்து போக டிஜிடலுக்குள் நுழையும் பழக்கம் வந்தது. அதன் பின் வீடியோ உரையாடல் வந்து டைப் பண்ணுவதையும் குறைக்க ஆரம்பித்தது.

தொலை தூரத்தில் இருக்கின்ற நண்பர்களோ, உறவினர்களோ அவர்களை வீடியோவில் பார்த்துப் பேசுவது அடுத்த கட்ட வளர்ச்சியானது. என்ன தான் இது அன்னியோன்யமாக இருந்தாலும் ஒரு டிஜிடல் கட்டத்துக்குள் 2டி நுட்பத்தில் தானே இந்த உரையாடல் நடக்கிறது. இது அப்படியே 3டி நுட்பத்தில், நமக்கு முன்னால் நடந்தால் எப்படி இருக்கும் என மைக்ரோசா.ஃ.ப்ட் நினைத்ததன் விளைவு தான் இந்த புதுமையின் வரவு.

இதன் மூலம் வன்னியில் இருக்கும் பெற்றோர், கொழும்பில் இருக்கும் பிள்ளைகளை நேரடியாக பார்த்து பேச முடியும். பக்கத்தில் அமர்ந்து அவர்களுடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ள முடியும். மன்னாரில் இருக்கும் ஒருவரும், லண்டனில் இருக்கும் ஒருவரும் நேரடியாக பார்த்து பேசிக்கொள்ள முடியும். யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒரு அரசியல் தலைவர் கொழும்பில் இருக்கும் ஒரு தலைவரோடு பேச, கார்பிடிக்கத் தேவையில்லை. தொழில்நுட்பத்தைப் பிடித்தாலே போதும்

இது சொல்கின்ற நுட்பம் எளிதானது. ஒரு அறையில் மைக்ரோசா.ஃ.ப்ட் தயாரிப்பான 3டி கேப்சரிங் கருவிகளான கேமராக்களைப் பொருத்த வேண்டும். குறைந்த பட்சம் இரண்டு கேமராக்கள் தேவைப்படும். அதிகம் கேமராக்கள் இருந்தால்  படம் தெளிவானவும் படு யதார்த்தமாகவும் இருக்கும்.  அந்த காட்சிகளை செய்து கணினி தொடர்ச்சியாய்ப் பதிவு செய்து முப்பரிமாண மாடலாக்கி, தகவல்களை கம்ப்ரஸ் செய்து எங்கே வேண்டுமோ அங்கே அனுப்புகிறது.  இவையெல்லாம் ஒரு சில வினாடிகளில் நடக்கின்றன. சராசரியாக 50 எம்பிபிஎஸ் இணைய வேகம் இதற்கு அவசியம். ஆகுமெண்டர் ரியாலிடி எனும் நுட்பத்தின் அடிப்படையில் இது இயங்குகிறது.

தொடர்ச்சி 21 ம் பக்கம்



# யேர்மனியில் இருந்தபடி .......



காதலியை அமரவைத்து பேசிக்கொண்டே போக முடியும்

எங்கே இந்த காட்சிகள் விரிக்கப்பட வேண்டுமோ அங்கே தலையில் மாட்டும் கண்ணாடி போன்ற ஹோலோலென்ஸ் ஒன்றைப் பயன்படுத்த வேண்டும். இங்கே 3டி கேமராவில் பிடிக்கப்படும் காட்சிகள் தொலைதூரத்தில் இருக்கும் நபர் பயன்படுத்தும் ஹோலோ லென்ஸ் வழியாக யதார்த்தம் சிதையாமல் முன்னால் வந்து நிற்கும். இந்த காட்சிகளையெல்லாம் அப்படியே பதிவு செய்யலாம் என்பதால், ஒருமுறை உரையாடிய உரையாடலை மீண்டும் நமது அறைக்குக் கொண்டு வந்து என்ன நடந்தது என்பதை மீண்டும் நேரடியாகப் பார்க்கவும் முடியும் என்பது சுவாரஸ்யம்.

நாசாவில் பணிபுரியும் ஒரு நபரை மேடையில் நூற்றுக்கணக்கான பார்வையாளருக்கு முன்னால் வரவழைத்து அவருடன் பேசி இந்த தொழில்நுட்பத்தை விளக்கினார்கள். பார்வையாளர்கள் பரவசமடைந்தார்கள். இந்தத் தொழில்நுட்பத்தை நாசாவில் பயன்படுத்தத் துவங்கியிருப்பதாகவும், இதன் மூலம் கோள்களைக் குறித்து மிக துல்லியமான தகவல்களைப் பெற முடியும் என அவர் தெரிவித்தார்.
ஒரு இரு பரிமாண வெளிச்சத் திரையில் இருந்த தகவல் பரிமாற்றத்தை, நமக்கு முன்னால் இயல்பாக, உயிரோட்டமாக உலவும் காட்சிகளாக இந்த தொழில்நுட்பம் மாற்றியிருக்கிறது. வெளிநாட்டிலும், இந்தியாவிலும் உள்ள மக்கள் இணைந்து நடத்தும் அலுவலக கான்பரன்ஸ் விஷயங்கள் எதிர்காலத்தில் இந்த தொழில்நுட்பத்தின் மூலம் ஒரே அறையில் நடக்கும்.

ஒருவருக்கொருவர் பார்த்துக் கொள்ள முடியும், பேசிக்கொள்ள முடியும், 'ஏண்டா டல்லா இருக்கே' என கேட்டு அவரை ஆறுதல் படுத்த முடியும் என இது தருகின்ற சாத்தியங்கள் மிக அதிகம். தொலைவுகளை அருகாக்குவது மட்டுல்ல, தொலைவுகளே இல்லாமலாக்கும் முயற்சியே இது ! வருகின்ற காட்சிகளை மினியேச்சராக மாற்றி டைனிங் டேபிளுக்கு மேல் அமரவைக்கவும் முடியும் ! இவையெல்லாம் தொழில்நுட்பம் தரும் எக்ஸ்ட்ரா வசதிகள்.

அறிவியல் ஆராய்ச்சித் தளத்தில் இந்தத் தொழில்நுட்பம் மிகப்பெரிய அளவில் கைகொடுக்கப் போகிறது. புதிய செயற்கைக் கோள்களை வடிவமைப்பது முதல் வானில் இருக்கும் விண்வெளி ஆராய்ச்சியாளர் களுடன் நேரடியாகப் பேசுவது வரை இது பயன்படும். இந்த தொழில் நுட்பத்தின் மூலம் யார்வேண்டுமானாலும் நிலவில் கால்வைக்கலாம். நிலவின் நிலத்தை அருகில் இருந்து பார்க்கலாம் ! காலால் மிதிக்கலாம் !

இந்த தொழில்நுட்பத்தின் வரவு டைப் பண்ணி மக்களுக்கு மெசேஜ் அனுப்பும் முறையை விரைவிலேயே ஒழித்து விடும். வீடியோ சேட்டிங் போன்றவையும் வலுவிழந்து போகும். இதன் அடுத்த கட்டமாக, ஓடும் காரில் இந்த கேமராக்களை அமைத்து வெற்றிகரமாக வெள்ளோட்டம் விட்டிருக்கிறார்கள்.




காரின் பின் சீட்டில் உங்களுக்கு அருகில் உங்கள் ஆஸ்திரேலிய நண்பரையே காதலியையோ அமரவைத்து பேசிக்கொண்டே போக முடியும் ! மாய உலகத்தில் !

சுருக்கமாகச் சொல்லவேண்டுமெனில் ஒரு நிஜ சம்பவத்துக்குள், ஒரு மாயக் காட்சியை யதார்த்தம் போல நுழைக்க இந்த தொழில்நுட்பம் உதவும்.

அறிவியல் புனை கதைகளும், ஹாலிவுட் திரைப்படங்களும் 'டெலிபொட்டேஷன்' எனும் சிந்தனையை பல ஆண்டுகளாக சொல்லி வருகின்றன. ஒரு இடத்திலிருக்கும் நபரை இன்னொரு இடத்துக்கு அப்படியே வினாடி நேரத்தில் அனுப்பி வைப்பது தான் இந்த சிந்தனை.

அதாவது யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒரு நபர், ஒரு கருவியில் நுழைந்தால் அமெரிக்காவிலிருந்து வெளியே வரலாம் என்பது போல வைத்துக் கொள்ளுங்கள்.

அந்த சிந்தனையின் முதல் நிலையாக இப்போது காட்சிகளை அனுப்பும் இந்த ஹோலோபோர்டேஷனை வைத்துக் கொள்ளலாம். இது வெற்றியடைந்திருக்கிறது.

ஹோலோபோர்டேஷன் மூலம் அனுப்பப்படுகின்ற காட்சிகளை இப்போது பார்க்க மட்டும் தான் முடியும். இதன் அடுத்த கட்டமாக காட்சிகளை தொட்டு உணரவும், வாசனை அறியவும், தட்ப வெப்பநிலைகளை இடம் விட்டு இடம் கடத்தவும் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

அவை எதிர்காலத்தில் சாத்தியமாகும் என்பதில் சந்தேகமேயில்லை. அப்படி நடக்கும் போது உலகம் நிஜமாகவே ஒற்றைப் புள்ளியில் வந்து சங்கமிக்கும்.



விநாயகா ஜோதிட நிலையம்

இந்தியாவிலிருந்து பாங்காக், சிங்கப்பூர், மலேசியா, அவுஸ்திரேலியா, கனடா, அமெரிக்கா போன்ற பல நாடுகள் சென்று இம்முறை ஜேர்மன் வந்திருக்கும் பிரபல பரம்பரை சோதிடர் சர்வதேச பிரபல்யம் வாய்ந்த

பண்டித் துர்க்கா பிரசாத்

குடும்ப, காதல் விடயங்கள், மனை விவகாரங்கள், குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு, திருமண யோகம், தொழில், மனை, அபிவிருத்தி, லட்சுமிகடாட்சம் வாகனம், விசாப் பிரச்சினைகள், நீதிமன்ற வழக்குகள், ஆரோக்கியம், பாக்கியம், வியாழ முன்னேற்றம் செய்வினை கோளாறுகள், பேய், பிசாசு தொந்தரவுகள், கண்திருஷ்டி, நாக தோஷம் மற்றும் உங்களது அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
உடனடித் தீர்வுகளுக்கு எமது சாஸ்திரியை நாடுங்கள் வெற்றி நிச்சயம்....!

பேசும் மொழி - ஆங்கிலம், ஹிந்தி, ஜேர்மன் மற்றும் தமிழ்
பார்வை நேரம் - வாரத்தின் 7 நாட்களும்
காலை 08.00 மணி முதல் மாலை 09.00 மணி வரை

Tel: +49 1512 95 88 372 +49 1521 33 58 655

PRABA SUPERMARKT
Hindenburgstraße 212, 41061 Mönchengladbach

நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா ?

உங்கள் விருப்பம் எங்கள் சேவை

Nabil PARTY FOODS & CATERINGS

உதாரணமாக பிறந்தநாள் விழா, திருமணவிழா, பூப்புனித நீராட்டு விழா போன்றவைகளை ? அப்படியானால் நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்திய உணவு வகைகள் அந்த நாட்டு முறைப்படி தயாரித்து வழங்குகிறோம்.

MENU
•Vegetable Biriyani, •Beef Biriyani, •Chicken Biriyani, •Many Different rice dishes, •Vegetable, Chicken, Mutton & Beef Kottu Rotty, •Varieties of Noodles,• Special Fish Dishes and Rosted Fish, •Short Eats ( Rolls, Samosa, Pattis & Many More), •Cake (Birthday & Other Celebrations)

Mr. M. Nazeer
015770773416
0245172578
nabilpartyservice@gmail.com
Nabil Party Foods

# அகத்தின் அழகு முகத்தில் தெரியும்!




இப் பழமொழி எனக்கு மிகவும் பிடித்தது. அகத்தில் உள்ளது முகத்தினூடாக வெளிப்படுவது நாங்கள் அறிந்ததே! நடிக்கத் தெரியாதவர்களுக்குக் கடினமல்லவா?!

உள்ளத்தில் மகிழ்ச்சி உண்டானால் முகமும் அழகாக இருக்கும். கவலை ஏதும் இருக்காது மற்றும் தெரியாது. இதே உள்ளம் சினங்கொண்டால் அம் முகத்தைப் பார்ப்பதற்கே பயமாக இருக்கும். குண்டு வெடிப்பது போல இருக்கும். கவலை மனதில் தோன்றினால் முகத்தில் உள்ளசோகத்தைக் கண்டுபிடிப்பர். அடுத்த கணமே கேட்பர் என்னவென்று. எங்களுக்கு அறியாமலே நாங்கள் எங்கள் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றோம். ஏன் நாம் மகிழ்ச்சியாகஇருக்கக் கூடாது?






றஜினா தருமராஜா

சிலர் நினைக்கின்றனர் அழகிய உடை அணிந்து முகத்துக்கு அலங்காரம் செய்தால் அழகு என்று. அது இல்லை உண்மையான அழகு. அழகு என்பது வேறு! மனதில் ஒரு தீய எண்ணம் இல்லாதவர்களே இவ்வுலகில் அழகானவர்கள்.

சிலர் பொறாமை கொள்பவர். அழகாய் இருந்தாலும் அழகில்லை என்பர். அவர்கள் எண்ணம் அழகற்றது.

அழகில்லாதவர்கள் கூட அவர்களின் உள்ளம் அழகாய் இருப்பதால் அவர்கள் அழகாய் தெரிகிறார்கள். நல்ல உள்ளம் படைத்தவர்கள் எப்பொழுதும் அழகு!

அழகு என்பது நம் தோல்களின் நிறத்திலோ நாம் உடுக்கும் உடையிலோ போடும் நகையிலோ செய்யும் வேலையிலோ இல்லை. நம் நடத்தையில் உள்ளது!
ஒருவரின் நற்குணங்களை நேசித்துப்பாருங்கள். அவர்களை விட அழகானவர்கள் இவ்வுலகில் வேறு ஒருவரும் இல்லை.

முதுமையிலும் அழகாக அன்னைதெரேசா இருக்கவில்லையா. அவருக்கு அழகுகொடுத்தது அன்பும் கனிவும்தான்.

ஏன்
உங்கள் அன்னையைவிட, தந்தையைவிட
யாரும் உலகில் அழகானவர்கள் உண்டா?
அதன் அடிப்படைக்காரணம் அவர்கள் எம்மீது
செலுத்தும் தன்னலமற்றே அன்பே.

குழந்தைகள் யாவரும் அழகாகத் தெரிவார்கள். ஏன் தெரியுமா நண்பர்களே? அவர்களின் உள்ளம் நல்லதையே நினைப்பதனால். தீய எண்ணங்கள் அற்றவர்கள். மனதை நாம் சுத்தமாக வைத்திருந்தால் நல்லதே நமக்கு நடக்கும்.
நாமும் மிகமிக அழகாகத் தெரிவோம்.
முகம் ஒரு கண்ணாடியல்லவா? உடனே காட்டிவிடும்.

காதல், அன்பு, பிரிவு, துன்பம், கருணை, வீரம், கோபம், பொறாமை ஆகிய பல உணர்வுகளையும் உடனடியாக காட்டிக்கொடுப்பது முகமே.
திருவள்ளுவர் கூறியது போல்: அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம் கடுத்தது காட்டும் முகம்!
எங்கு சென்றாலும் மனசுத்தத்துடன் செல்லுங்கள். உங்களுக்கு நல்லதே நடக்கும். நல்லதே செய்யுங்கள். நல்லதே பேசுங்கள்!



# ஜீவநதி!

## தோள்களே மலைகள் அதன் பயனாய் செழித்தது யாழ்ப்பாணம்.



**தனசேகர் பிரபாகரன்**

மலையிலே பிறந்து, காடுகளினூடே கடந்து வந்து, அணைகளில் தேங்கி வயல்களை செழிக்க வைத்து, கடல் சேரும் ஆறு ! ஆறில்லா ஊருக்கு அழகு பாழ் என்பது முதுமொழி, ஆற்றைக் கண்டால் யாருக்குத்தான் பிடிக்காமல் போகும் ? வெளிநாடுகளில் பலவிடங்களில் ஆறுகள் ஓடினாலும் அவை வெறும் ஆறுகள் மட்டுமே, நம் நாட்டிலோ ஆறுகள் வெறும் ஆறுகள் மட்டுமல்ல வாழவைக்கும் தாய் போன்ற தன்மையது, அதனால் தன் என்னவோ ஆறுகளை பெண்ணாக பார்க்கும் பண்பாட்டை நாம் கொண்டிருக்கிறோம்.

என்னதான் ஆறுகளை தெய்வமாக, தாயாக பார்த்தாலும் அவற்றை எப்படி பேணுகிறோம் என்று கேட்டால் தலை குனியும் நிலை தான் ! அதே நிலைமை தான் பெண்களுக்கும் !

அலைகடலை கூட அப்புறம் தள்ளி, நிலம் வாங்கி நகரங்கள் அமைத்த நாட்டின் ஆரவார தலைநகரம் ஆம்ஸ்டர்டாம்.

இஞ்சி சூழ் தஞ்சையென்றும், ஆனை கட்டி போரடிக்கும் சீமையென்றும் புகழப்பெறும் தஞ்சையில் பிறந்து வளர்ந்தவள் கயல்விழி, பணி நிமித்தமாய் ஆம்ஸ்டர்டாம் வந்து மாதங்கள் ஆறு ஆகின்றன, விவசாய குடும்பத்தின் முதல் பட்டதாரி, மெட்ரோவிலும் ட்ராமிலும் ஏறி இறங்கி இயந்திரமாய் அலுவலகம் ஓடும் திங்கட்கிழமை காலை மனிதர்களில் இவளுடைய தலையும் ஒன்று, அலுவலகத்தில் சொந்த நாட்டு நண்பர்கள் பலர் இருந்தாலும் ஆங்கிலம் மட்டுமே பேசமுடியும் ஏனெனில் பலர் வடவிந்தியர்கள், அவளுடன் நாவினிக்க தமிழ் பேசி மகிழ்வது ஒரே தோழி டென்சி.

டென்சியின் சொந்த ஊர் தொண்டைமானாறு, யாழ்ப்பாணம், ஒல்லாந்து வந்து குடியேறிய ஈழக்குடும்பங்களுள் ஒன்று டென்சியினுடையது, நல்ல தமிழார்வம். டென்சியின் தமிழைக் கேட்டுக்கொண்டே நேரம் போவது தெரியாமல் உட்கார்ந்திருப்பது கயல்விழிக்கு வாடிக்கை.

அன்றைய தினம் ஆடிமாதம் பதினெட்டாம் நாள், பொங்கி வரும் காவிரியை தமிழ்மக்கள் மலரிட்டும், படையலிட்டும் வரவேற்று மகிழும் நாள், கயல்விழி வழக்கம் போல அலுவலகம் முடிந்து டென்சியுடன் மெட்ரோவில் ஒரு ஜன்னலோரம் அமர்ந்து பேச ஆரம்பித்தாள், அவளுக்கு வாட்சப்பில் அவளது தந்தை அனுப்பி இருந்த படங்களை காட்டிக்கொண்டிருந்தாள், தஞ்சை பெரிய கோயில் அருகே ஓடும் புது ஆற்றில் ஆடிப்பெருக்கு விழாவின் படங்கள் அவை.

டென்சி கேட்கலானாள் ”கயல்விழி ஆறென்றால் தண்ணீர் ஓடத்தானே செய்யும் இதிலென்ன புதுமை ?” என்று, ஆமாம் ஆனால் காவேரில அஞ்சு வருசத்துக்கு அப்பறம் தண்ணி வந்திருக்கு, வழக்கமா கர்நாடகத்தில ஆடில நல்ல மழைபெய்யும் ஆடி பதினெட்டுக்கு புது வெள்ளம் பொங்கி வரும், அந்த தண்ணி வச்சு தான் மூணு போகம் நெல் விளையும், ஆனா இப்போல்லாம் அப்படி இல்ல நல்ல மழை இல்ல, தண்ணி பங்கீடு பிரச்னை, ஆற்று மணல் அள்ளும் பிரச்சனைன்னு பல பிரச்சனைகள், அந்த ஒரு ஆற நம்பி தன் பாதி தமிழ்நாடே இருக்கு. எங்க நிலமெல்லாம் தண்ணியில்லாம ஒரு போகம் தான் விளைஞ்சது”.

இந்த வருஷம் நல்ல மழை அதனால அணைகள் நிரம்பி குடகு முதல் பூம்புகார் வர காவேரி சிரிச்சுட்டே போறா, அதன் எங்க அப்பாவும் அம்மாவும் காவேரிக்கு பூஜை பண்ண போயிருக்காங்க இன்னைக்கு என்று முடித்தாள்.
மேலும் அதிகமாக பகிரப்பட்ட படம் ஒன்றையும் காட்டினாள், வரும் ஆற்றுநீரை கீழே விழுந்து கண்ணீருடன் வரவேற்கும் தமிழ்ப் பெண்கள், டென்சி அதனைப் பார்த்து மெய்சிலிர்த்துப் போனாள். இப்படியே எல்லா வருசமும் மழை பெய்யட்டும் ஆறு நிரம்பி ஓடட்டும் என்றாள்.

கயல்விழி டென்சியை பார்த்து ”உங்க ஊருல இப்படி பெரிய ஆறெல்லாம் இல்லையா?” என்று கேட்டாள். அதற்கு சிரித்துக்கொண்டே டென்சி பதில் அளித்தாள். இருக்கே...என்று அந்த கவிதையை சொல்லினாள்.

**“ஆறு பிறந்து திரிந்து வயல்கள் அடைந்து**
**பயிர்கள் விளைந்திட**
**ஏறி உயர்ந்த மலைகள் இல்லையாயினும் என்ன**
**இருந்தன தோள்கள் என்று**
**கூறி உழைத்துப் பின் ஆறிக் கலைகளில்**
**ஊறிச் சிறந்தது யாழ்ப்பாணம்.”**

தோள்களே மலைகள் அதன் பயனாய் செழித்தது யாழ்ப்பாணம்.

ஆறு உருவாகி, வயல்களினூடே ஓடி பயிர்களை செழிக்க வைக்க மலைகள் எதுவும் யாழ்ப்பாணத்தில் இல்லைதான், ஆனால் எங்கள் மக்கள் உழைப்பின் மீது நம்பிக்கை கொண்டவர்கள் அதனால், அவர்களின் உயர்ந்த தோள்களே மலைகள் அதன் பயனாய் செழித்தது யாழ்ப்பாணம். பெரிய மலைகள் இல்லை அதனால் அதில் தோன்றும் ஆறுகளும் யாழ்ப்பாணத்தில் இல்லை என்று முடித்தாள்.
கவிதையை மிகவும் ரசித்தவளாய், நீ எழுதின கவிதையா ரொம்ப அருமையா இருக்கு என்றாள் கயல்விழி. இது என்ட கவிதை இல்லை மஹாகவினு ஒரு பெரிய புலவர் எழுதினது என்றாள் டென்சி. இந்த ஆறுகள் பற்றிய பேச்சால் அன்றைய நாள் இருவருக்கும் கழிந்தது. பெண்கள் கூட நதிகள் போலத்தான், ஓரிடத்தில் பிறந்து ஓரிடத்தில் புகுந்து காலமெல்லாம் ஓடியே வீட்டையும் நாட்டையும் வாழவைப்பவர்கள் அன்றோ ?

மண்ணை பொன்னாக நினைத்து, விவசாயிகளை போற்றி மற்றவர்கள் வயிறு நிறைந்தால் தம் வயிறு நிறைந்தது போல உணரும் ஆயிரமாயிரம் தமிழ்ப் பெண்களின் பிரதி இந்த கயல்விழி !

எத்துணை கஷ்டங்களை சந்தித்த போதும், உழைப்பாலும் மன உறுதியோடும் தம்மையும் தம் சமூகத்தையும் தூக்கி பிடிக்கும் ஆயிரமாயிரம் ஈழப் பெண்களின் பிரதி இந்த டென்சி !

இவர்களைப் போன்ற பெண்களே ஒரு சமூகத்தின் ஜீவநதி !



## இது விளம்பரம் அல்ல! இது உங்கள் நல்வாழ்வுக்கு நாம் தரும் ஆதாரம்!

Pflegedienst Bergstraße

# மனதுக்கு நிறைவான தொழில்!
# கைநிறைய காசு!!
# இதற்குமேல் மனசு வேண்டுவது என்ன!!!

பெற்றோரே, பிள்ளைகளே சிந்தியுங்கள். எமது பெற்றோரை ஒரு போலந்து நாட்டவரோ, ருமேனியன் நாட்டவரோ பார்ப்பதைவிட நாமே பார்ப்பது எத்தனை சிறப்பு.

எம்மில் பல பெற்றோர்களுக்கு இன்னாட்டு மொழியும், உணவும் பெரும் பிரச்சனையாக, இருக்கிறது. இதனை தவிர்க்க உங்களால் தான் முடியும்.
தற்போது நமது பிள்ளைகளில் பலபேர் வாழ்நாளில் அதிக காலம் பல்கலைக்கழகம்,போய்கொண்டு இருக்கின்றார்கள். மாற்றி மாற்றி எதோ படித்துக்கொண்டு (பெற்றோரில், 75% பேருக்கு தெரியாது என்ன நடக்கிறது என்று, ஏன் அவர்களுக்குக் கூட தெரியாது பலநேரம் என்ன நடக்கிறது என்று).

பிள்ளைகளே, பெற்றோர்களே 10ம் வகுப்பு முடித்தவுடன் தாதிதொழில் படித்தால், யேர்மனி முழுவதும் எண்ணற்ற நிறுவனங்கள் சிவப்பு கம்பளம் விரித்து 3000 €, சம்பளம் தந்து வேலை தர காத்துக் கொண்டு இருக்கின்றன.

ஏன் நாம் முன்வந்து இந்த புனிதமான தொழிலை கற்று பணியாற்றி எம்மவரை பாதுகாக்க, முன்வரக்கூடாது?,
சிந்தியுங்கள்!, உங்கள் கரங்களைப் பற்றிக்கொள்ள விரும்புகிறேன்.



ஆர்வமுள்ள 10 பேருக்கு எனது ஸ்தாபனத்தில் இணைந்து தொழில் செய்ய சந்தர்ப்பம், அளிக்க விரும்புகிறேன். இங்கு பத்தாம் வகுப்பினை நிறைவு செய்து விட்டு, மேற்கொண்டு என்ன செய்தால், நல்ல வேலை வாய்ப்பு கிட்டும் என எண்ணும் இளையோர் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்.
வாகன ஓட்டுனர் அனுமதி பத்திரம் தேவை.

படிக்க விரும்பும் பிள்ளைகளுக்கு
நாம் தங்கும் இடவசதி, உணவு, தொழிலில், பயிற்சி
**(Ausbildungsplatz)**
தந்து வேலையும் தருகின்றோம்.

உங்கள் அழைப்பு எனது நம்பிக்கை
வதனி செல்வநாதன்

**Frau K.Wadeni Selvanathan**
**Mainstr 16**
**68642 Bürstadt**

info@pflege-bergstrasse.de
www.pflege-bergstrasse.de



**Telefon: (0 62 06) 937 857 Telefax:( 0 62 06) 937 858**

# புலம்பெயர் மண்ணில் முதியோர் பராமரிப்பு கல்வியின் முக்கியத்துவம்



**வதனி செல்வநாதன்**

வெற்றிமணி தமிழ் வாசகர்களுக்கு எனது முதற்கண் வணக்கம். புலம்பெயர் மண்ணில் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் அதனால் நான் அடைந்த, உயர்வினையும் உங்களுடன் பகிர்ந்து கொள்வதை பெரும் கடைமையாக எண்ணுகின்றேன்.
நான் வதனி செல்வநாதன், தாயகத்தில் பணிபுரிந்து விட்டு, போர்ச்சூழல் காரணமாக, நானும் எனது கணவரும் யேர்மனிக்கு எனது 9 வயது மகளுடனும், 6 வயது மகனுடனும் வந்தேன். இங்கு வாழ்க்கை தொடங்கும் போது எம்மிடம் எதுவும் இல்லை.
ஆனால் இங்கு நான் வந்த 26 வருடங்களும் பணிபுரிந்துள்ளேன். எப்படியென்றால்: வேலையுடன் சேர்த்து யேர்மன் மொழியையும் கற்றேன்.

1992-1995 (Pflegehelferin) முதியோர் இல்லத்தில் பணிபுரிந்தேன் 1996-1998 (Altenpflege Ausbildung) முதியோர் பராமரிப்பு கல்வியை கற்றேன், 1999-2001( examinierte Pflegekraft) பயிற்றுவிக்கப்பட்ட முதியோர் தாதியானேன்

2002-2003 (Stationsleiterin/Pflegedienstleiterin) தலைமைத்தாதியாக கல்வி, கற்றேன்,2004- 31.03.2005 (Stationsleiterin)முதியோர் இல்லத்தில் பொறுப்பதிகாரியாக பணியாற்றினேன்.

01.04.2005 ( Pflegedienst Bergstraße) இல் நான் சொந்தமாக முதியோர் பராமரிப்பு, தொழிலை ஆரம்பித்தேன்.

ஒரு பணியாளுடனும் 2 வயோதிபருடனும் ஆரம்பித்தேன்., இன்று நூற்றுக்கு மேற்பட்ட பணியாளர்களுடன் இருநூற்றுக்கு,மேற்பட்ட வயோதிபர்களை பராமரித்து வருகின்றேன்.

14.04.2014 (Tagespflege Bergstraße) வயோதிபர் நாளாந்த பராமரிப்பு இல்லத்தை, ஆரம்பித்தேன்.இந்த இல்லத்துடன் சேர்த்து 8 தனியார் பராமரிப்பு வீடுகளும் உள்ளன. (Betreutes, Wohnung)
மேலும் இவ் வருடம் 5 தனியார் பராமரிப்பு இல்லங்களை (Betreutes Wohnung) கட்ட உள்ளோம். இன்னும் 1 1/2 வருடத்தில் இது கட்டி முடிக்கப்பட்டு விடும். இவ் இல்லங்களை எமது சேவை தேவைப்படும் நமது மக்களுக்கு கொடுக்க உள்ளோம்.
அதைவிட முதியோர் பராமரிப்பு, அதுபற்றிய தெரிதல், அவற்றிற்க்கு எப்படி உதவி கிடைக்கும் என்ற விபரம் பற்றிய ஒரு கூட்டம் ஒழுங்கு செய்ய எண்ணி உள்ளோம். எனது தனிப்பட்ட கருத்தாக சிலவற்றை முன்வைக்க விரும்புகிறேன்.
எமது சமுதாயத்தில் பல பெற்றோர்களும் பிள்ளைகளும் வைத்தியர், பொறியியலாளர் என்றால் தான் பெருமையென நினைக்கிறோம்.
அதே நேரம் எமது அடுத்த தலைமுறை வேறு வேறு தொழிலில்களைத் தெரிந்து கொள்வதும் , அவற்றை தெரிந்தெடுப்பதும் மிக மிக முக்கியம்.

இன்றைய காலகட்டத்தைப் பார்ப்போம் என்றால் எம் மண்ணை விட்டு வந்த எமது மக்களில், பெரும் தொகையினர் வயோதிபர்களாகவும் நோயாளிகளாகவும் மாறிக்கொண்டு, இருக்கின்றனர். இந்த நிலையில் எம் பெற்றோரைப் பாதுகாப்பது எப்படி என்ற, கேள்வி எல்லோருக்கும் தோன்றும்.
அதற்கு எம் பிள்ளைகள் முன்வந்து, எம் முதியோரை பாதுகாக்கும் இந்தப் புனிதமான, தொழிலை கற்க வேண்டும் என்பது எனது ஆசை என்றாலும், காலத்தின் தேவையும் அது தான்.

இக் கல்வி 100% வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தரக்கூடியதாகும்., தாதி தொழிலை எம்மிற் பலர் இழிவான தொழிலாக கருதுகின்றனர். இது தவிர்க்கப்பட வேண்டியது.

புளோறண்ஸ் நயிற்றிங்கேல் (Florence Nightingale), ஒரு சிறந்த தாதி. இன்றுவரை அவரது புகழ் மங்கவில்லை. அன்னை தெரசாவை எடுத்தால், கைவிடப்பட்டோரை பாதுகாத்த ஒரு தாதியாவர். அவர் இன்று ஒரு புனிதையாகமிளிருகின்றார்.

பெற்றோரே, பிள்ளைகளே சிந்தியுங்கள். எமது பெற்றோரை ஒரு போலந்து நாட்டவரோ, ருமேனியன் நாட்டவரோ பார்பதைவிட நாமே பார்பது எத்தனை சிறப்பு.
எம்மில் பல பெற்றோர்களுக்கு இன்னாட்டு மொழியும், உணவும் பெரும் பிரச்சனையாக, இருக்கிறது. இதனை தவிர்க்க உங்களால் தான் முடியும்.

தற்போது நமது பிள்ளைகளில் பலபேர் வாழ்நாளில் அதிக காலம் பல்கலைக்கழகம்,போய்கொண்டு இருக்கின்றார்கள். மாற்றி மாற்றி எதோ படித்துக்கொண்டு (பெற்றோரில், 75% பேருக்கு தெரியாது என்ன நடக்கிறது என்று, ஏன் அவர்களுக்குக் கூட தெரியாது பலநேரம் என்ன நடக்கிறது என்று).

**பிள்ளைகளே, பெற்றோர்களே 10ம் வகுப்பு முடித்தவுடன் தாதிதொழில் படித்தால், , யேர்மனி முழுவதும் எண்ணற்ற நிறுவனங்கள் சிவப்பு கம்பளம் விரித்து 3000€ சம்பளம் தந்து வேலை தர காத்துக் கொண்டு இருக்கின்றன.**
**ஏன் நாம் முன்வந்து இந்த புனிதமான தொழிலை கற்று பணியாற்றி எம்மவரை பாதுகாக்க, முன்வரக்கூடாது?, சிந்தியுங்கள்!, உங்கள் கரங்களைப் பற்றிக்கொள்ள விரும்புகிறேன்.**

ஆர்வமுள்ள 10 பேருக்கு எனது ஸ்தாபனத்தில் இணைந்து தொழில் செய்ய சந்தர்ப்பம், அளிக்க விரும்புகிறேன். இங்கு பத்தாம் வகுப்பினை நிறைவு செய்து விட்டு, மேற்கொண்டு என்ன செய்தால், நல்ல வேலை வாய்ப்பு கிட்டும் என எண்ணும் இளையோர் என்னுடன் தொடர்பு கொள்ளலாம்., வாகன ஓட்டுனர் அனுமதி பத்திரம் தேவை.
படிக்க விரும்பும் பிள்ளைகளுக்கு நாம் தங்கும் இடவசதி, உணவு, தொழிலில், பயிற்சி (Ausbildungsplatz) தந்து வேலையும் தருகின்றோம்.

என்னிடம் நம்மவர்கள் பலர் வேலை செய்து வருகின்றார்கள். எனது வளர்ச்சிக்கு எனது, கணவரின் பங்கு மிகப் பெரிதாகும்., எனது உதவி பொறுப்பாளர் நிலோஜினி இரவீந்திரனின் பங்கும் பெரிதாகும். இவர்கள், எல்லோரும் எனது ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கு பெரும் உதவியாக உள்ளனர்.

## வயோதிபம் குழந்தைப்பருவம்!

இதனை உங்கள் சிந்தனையில் எடுத்து செயற் படுவீர்கள் என நம்புகிறேன்.
வயோதிபம் குழந்தைப்பருவம்!
நீங்கள் அவர்களுக்குப் பெற்றோராகி உங்கள் பிள்ளைகளுக்கு முன்னுதாரணம், ஆகுங்கள். இது ஒரு தலைமுறைக் கடமை. இது இப்போது உங்கள் கையில்.

உங்கள் அழைப்பு எனது நம்பிக்கை
, **வதனி செல்வநாதன்**


APIRAAMI ENTERPRISE




Pferdemarkt 9 45127 ESSEN Tel.: 0201/236925

மொழிபெயர்ப்புச் சேவை!
V.Ramakrishnan
உங்கள் சகல பத்திரங்களையும் தமிழ்,ஆங்கிலம் பிரஞ் மற்றும் உலகமொழிகளில் இருந்து யேர்மன் மொழிக்கு மொழிபெயர்பதற்கும் யேர்மன் மொழியில் இருந்து நீங்கள் விரும்பும் மொழிக்கு மொழிபெயர்ப்பதற்கும் நீதிமன்றத்தில் சத்தியபிரமாணம்
( allgemein Vereidigte) மற்றும் நீதிமன்றத்தால் அங்கீகாரம்
(Ermächtigte)அளிக்கப்பட்ட மொழி பெயர்ப்பாளர்களால் குறைந்த செலவில்
A.to.Z Dolmetscher - und Übersetzungsdienst
Für alle weltsprachen
Tel:0201 977 4957
Mobile 0176 28 44 85 89
0152 11 98 9603
Fax:0201 24 82 888
Lise-Meitner-Str.20
45144 Essen


Lyca TV
உலகின் மிகப் பிரமாண்டமான
தொலைக்காட்சி நிலையம்
நீங்கள் IPTV BOX பாவனையாளரா ?
ஒருவருட இணைப்புச் சந்தா
£/€ 49
மட்டுமே
உங்களிடமுள்ள பழைய BOX களை
எங்களிடம் கையளித்து
விசேட விலைச் சலுகையில்
LYCATV ஐ பெற்றுக் கொள்ளுங்கள்
50க்கும் அதிகமான தமிழ்த் தொலைக்காட்சிகள்
விஜய்
ZEE தமிழ்
KTV
HD
ஆதவன் HD
TENT KOTTA
+
SUN NXT
1000க்கும் அதிகமான தமிழ்த் திரைப்படங்கள்
4K / HD / 5 .1 DOLBY தரத்தில் திரைப்படங்கள்
4000 + திரைப்படங்கள்
புத்தம்புதிய திரைப்பாடல்கள்
நகைச்சுவை காட்சிகள்
மோகினி
டிக் டிக் டிக்
UNITED KINGDOM
0207 132 2727
GERMANY
069 1200 7102
www.lycatv.tv

# சுவிஸ் நாட்டவர்கள் அமைத்த முருகன் ஆலயம்!

-குகா



1825 மீற்றர் உயரத்தில் மலை உச்சியில் அமைந்துள்ள சோமஸ்கந்தர் ஆலயத்துக்கு சென்றோம். சுவிஸ் நாட்டில் கிறவ்புண்டன் மாநிலத்தில் டாவோஸ் மலைப்பகுதியில் இவ்வாலயம் அமைந்துள்ளது. உலகத் தலைவர்கள் பங்குபற்றும் பொருளாதார, அரசியல் முக்கிய விடயங்கள் கையாளப்படும் சர்வதேச மாநாடுகள் இடம்பெறும் டாவோஸ் மலைத் தொடரில் அமைந்துள்ள இந்த ஆலயத்துக்கு கடந்த 15-7-2018 சென்றோம்.
என்னுடன் செங்காளன் சென்மார்க்கிறேத்தன் கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தின் தலைவர் வேலுப்பிள்ளை கணேசகுமார், பொருளாளர் சதாசிவம் அற்புதராசா, எனது துணைவியார் மற்றும் ரவீந்தரன் தினேசன் ஆகியோர் பயணம் மேற்கொண்டிருந்தனர். செங்காளன் கதிர்வேலாயுதசுவாமி ஆலயத்தில் இருந்து முற்பகல் 10 மணிக்கு புறப்பட்ட நாம் திகில் நிறைந்த பயணம் ஊடாக நண்பகல் 12 மணிக்கு ஆலயத்தை அடைந்தோம்.

ஆலய நுழைவாயிலில் வைத்து ஆலய குருவான சுவிஸ் நாட்டவரான சுவாமி பிரேமநடராஜ் இன்முகத்துடன் வரவேற்றார். அங்கு பணிபுரியும் பெண் குரு எமக்கு தேநீர் தந்து உபசரித்தார். அதன்பின் ஆலயத்தை சுற்றிப்பார்த்தோம்.
ஆலய மூலஸ்தானத்துக்கு முன்பாக 5 அடி உயரத்தில் பிள்ளையார் காட்சிதந்தார். கணேஷ் கடவுள் என எமக்கு அறிமுகப்படுத்தினார்கள். அதற்கு முன்பாக 6 அடி உயரத்தில் 10 அடி அகலத்தில் நந்தி கம்பீரமாகக் காட்சியளித்தார். கருங்கல்லினால் செதுக்கப்பட்ட நந்தி பீடத்தைப் பார்த்து அதிர்சியடைந்தேன். அந்த அளவு உயரமான நந்தியை மேற்குலகில் ஓர் ஆலயத்தில் கண்டதே எனது அதிர்ச்சிக்கு காரணம். அதற்கு அருகே மலைச்சாரலில் இருந்து வரும் சுத்தமான சுகாதாரமான நீர் தீர்த்தக்கிணறாக அமைக்கப்பட்டிருந்தது. தண்ணீரின் சுவை தெவிட்டாததாக இருந்தது.

அதைத் தொடந்து பலகையால் அமைக்கப்பட்டுள்ள ஆலய கட்டடத்தின் மேல் மாடியில் மூலஸ்தானம் அமைந்திருந்தது. 10 அடி உயரத்தில் சிவலிங்கப் பெருமான். சிவபெருமானை சுற்றி படம் எடுப்பது போன்று காட்சி தரும் நாகபாம்பின் தலையில் ஒரு பக்கத்தில் சிவனும் மறுபக்கத்தில் உமாதேவியாரும் நடுவில் முருகனும் வீற்றிருந்து காட்சி தந்தனர். சோமாஸ்கந்தர் மூர்த்தம் என இதை அழைப்பர். மூன்று குருமார் பூசைகளை செய்தனர். இரு ஆண் குருமாரும் ஒரு பெண் குருவும் பூசைகளை பக்திமயமாக நடத்தினர். சிவாயநமவே என்று உரத்த குரலில் குருமார் கூற பக்தர்களும் சேர்ந்து பஜனை செய்வது போல் பாடியமை சிறப்பு அம்சமாக இருந்தது. கடவுளின் காந்தசக்திக்குள் பக்தர்களை இழுக்கும் வகையில் அந்த பூசைகள் ஒரு மணி நேரம் நடைபெற்றன. விபூதிபிரசாதம் வழங்கிய பின்னர் மகா போசன பூசை இடம்பெற்றது. சுவிஸ் நாட்டவர்களால் சமைக்கப்பட்ட சுத்தமான சைவ போசனம் சகலருக்கும் வழங்கப்பட்டது.

**ஆலயத்தின் தோற்றமும் வரலாறும்**

இலங்கையில் கதிர்காமத்தில் இருந்து லண்டனுக்கு வந்து வேல்ஸ் முருகன் ஆலயத்தை ஸ்தாபித்த சிங்களவரான குருஜி சிறி சுப்பிரமணியம்தான் இந்த ஆலயத்தின் ஸ்தாபகராவார். 1995 ஆம் ஆண்டு குருஜி சிறிசுப்பிரமணியம் ஓர் அலுவலாக இந்த மலைப்பகுதிக்கு வந்துள்ளார். அங்கு ஒரு ஹோட்டல் ஒன்றை அமைக்கும் நோக்குடன் வந்த அவர் அந்த மலைப்பகுதியில் கடவுளின் காந்தசக்தி இருப்பதை தமது திருஷ்டியால் உணர்ந்து அந்தப் பகுதியில் ஆலயம் ஒன்றை அமைக்க விரும்பினார். இந்த விருப்பத்தை அவர் லண்டனில் வசிக்கும் இந்தியாவைச் சேர்ந்த சரவணபவ சுவாமி தெரியப்படுத்தியுள்ளார். அதன்பின் குருஜி சிறிசுப்பிரமணியம் அவரை அழைத்துக் கொண்டு இந்த மலைப்பகுதிக்கு வருகை தந்துள்ளார்.
ஆலயம் தற்சமயம் அமைந்துள்ள பகுதியில் இருந்து வடக்கே சரவணபவ சுவாமி சென்று ஆய்வு செய்தார். ஆலயம் அமைக்க உகந்த இடம் என தெரிவித்த சுவாமி ஆலய இடத்தை அடையாளமிட்டார். அதன்பின்னர் ஆலயம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில் இருந்து கருங்கல்லால் வடிவமைக்கப்பட்ட மூலஸ்தான மூர்த்தி, பிள்ளையார், நந்தி ஆகியன 2009 ஆம் ஆண்டு எடுத்து வரப்பட்டு பிரதிஷ்டை செய்யப்பட்டன.





2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி கும்பாபிஷேகம் இடம்பெற்றது. சரவணபவ சுவாமி, தமிழகத்தில் இருந்து வந்த இந்து குருவான மொகான்ஷி ஆகியோர் ஆலயத்தில் மூன்று நாட்கள் விசேட யாகம் நடத்தி கும்பாபிஷேகத்தை சிறப்பாக செய்துள்ளனர். வேல்ஸ் முருகன் ஆலயம், சோமஸ்கந்தர் ஆலயம் ஆகியன ஒரே நிர்வாகத்தின் கீழ் இயங்குவதால், குருமார் மாறி மாறி இரு ஆலயங்களிலும் பணிபுரிவர்.
முதல் இரு கட்டங்கள் பூர்த்தியாகி ஆலயம் செயற்படுகின்றது.ஆலயத்தை முழுமையாக அமைக்க திட்டம் வகுத்துள்ளோம். அடுத்த 20 வருடத்துக்குள் அது சாத்தியமாகும் என நம்புகிறோம். “இந்தியாவில் உள்ள ஹிமாலய ஆலயம் போன்று ஒரு காலத்தில் இந்த ஆலயம் மிளிரும் என எதிர்ப்பார்க்கிறோம்” என்று சுவாமி பிரேம நடராஜ் தெரிவித்தார். ஆலயத்துக்கு பக்தர்கள் வருகிறார்களா எனக் கேட்டதற்கு அவர் பதில் அளிக்கையில், “தற்சமயம் குறைந்த அளவு பக்தர்களே வருகிறார்கள். லண்டன் வேல்ஸ் முருகன் ஆலயம் ஆரம்பிக்கப்பட்டபோது குறைவான பக்தர்களே வந்தனர். ஆனால் இப்போது பிரதி ஞாயிறு தோறும் 500க்கு மேற்பட்ட பக்தர்கள் வருகிறார்கள்.அதேபோன்ற நிலை இங்கும் ஏற்படுமென நம்புகிறோம்” என்று பதில் அளித்தார். “ஆலயம் 2000 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ளது. மேலும் திருப்பணிகள் மேற்கொள்ளும்போது தேவைப் பட்டால் காணிகளை கொள்வனவு செய்யலாம் என உத்தேசித் துள்ளோம்” என்று அவர் கூறினார். அர்ச்சனை செய்ய அனுமதியில்லை ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் அர்ச்சனை செய்வதற்கு எந்த வசதியும் செய்யவில்லையே என அவரிடம் கேட்டபோது, “அர்ச்சனை செய்வதற்கு அனுமதியில்லை. பக்தர்கள் காணிக்கை பொருள்களை வழங்கலாம். ஆலயத்தில் உள்ள உண்டியலில் காணிக்கையை செலுத்தலாம். பக்தர்கள் கடவுளின் அருளைபெறும் வகையில் பூசைகள் நடத்தபடுகின்றன. வருமான நோக்கம் இல்லை” என்று பதில் அளித்தார் சுவாமி பிரேம நடராஜ்.

எமது ஸ்தாபனத்தின் புதிய கிளை நிறுவனம்
15.10.2018 **Hagen** நகரில் (am HauptBahnof-10 /58089 Hagen) திறக்கப்படும் செய்தியை மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.






25 ம் ஆண்டில் தடம் பதிக்கும் வெற்றிமணிக்கு எங்கள் வாழ்த்துக்கள்

# மரணத்தின் நுனிவரை சென்ற வாகனம்



பலரை பலிகொடுத்த இத்தாலிப் பாலம் இதுதான்



ஐரோப்பாவில் பல பகுதிகள் மலைநாடாக இருந்தாலும் இலங்கையில் கண்டி நுவரெலியாபோல் பாதாள மலைகளைச் சுற்றி சுற்றி பயங்கரப்பணம் இங்கு தவிர்க்கப்பட உதவுவது பெரும் பாலங்களே. ஆனால் அப்பாலங் களுக்குள்ளும் பயங்கரம் பதுங்கியுள்ளது என்பதனை அண்மையில் நடந்த விபத்து பறைசாற்றுகின்றது.

இத்தாலியில் நடந்த இப்பெருவிபத்தில் அதிஷ்டவசமாக ஒரு லொறி மரணத்தின் நுனி வரை சென்று உயிர்பிழைத்து நிற்பதை நீங்களும் படத்தில் காணலாம்.

பெருந்தெருக்கள் இத்தாலி நாட்டில் உள்ள ஜெனோவா நகரத்தின் மோராண்டி பாலம் இடிந்து விழுந்த விபத்தில் பலியானார்கள் எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளது. இத்தாலி நாட்டில் மலைகள் சுழுந்த பகுதியில் அமைந்துள்ள நகரம் தான் ஜெனோவா. இந்த பகுதியில் கான்கிரீட் தூண்கள், மூலம் மலைகளுக்கு நடுவில் பாலம் அமைத்து அதில்தான் மக்கள் பயணம் மேற்கொள்கின்றனர். அந்த சாலையின் இடையே இதேபோல் பல பாலங்களும், வாய்க்கால்களும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கடந்த 13.08.2018 திங்கள் ஜெனோவா நகரின் மேற்கில் அமைந்திருக்கும் ஏ10 நெடுஞ்சாலையில் இருக்கும் மோராண்டி என்ற பாலத்தின் ஒருபகுதி திடீரென்று இடிந்து விழுந்தது. இடிந்து விழுந்த பாலம், சுமார் 200 மீட்டர் நீளம் கொண்டது. இது சுமார் 100 அடி ஆழத்தில் நொறுங்கி விழுந்தது.

அந்த சம்பவம் நடந்த போது அந்த வழியாக பயணம் செய்த பல கார்களும் லாரிகளும் பாலத்தின் அடியில் சிக்கிக் கொண்டன. அவ்வாறு சிக்கி கொண்ட வாகனங்களை மீட்கும் வேலையில் அந்நாட்டு வீரர்கள் ஈடுபட்டு வந்தனர்.

பாலம் இடிந்து விழுந்ததில் சுமார் 20 பேர் உயிரிழந்ததாக முதல்கட்ட தகவல் கூறியது. பின்னர், வாகன இடிபாடுகளுக்கு நடுவில் இருந்து அடுத்தடுத்து இறந்த உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. மீட்பு பணி முடிவுபெறும் தருவாயில் கார்களுக்கு இடையில் சிக்கி இருந்த 3 பிரேதங்கள் கண்டெடுக்கப்பட்டன. இதனையடுத்து, இந்த கொடூர விபத்தில் சிக்கி பலியானவர்களின் எண்ணிக்கை 43 ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.


மங்கல இசைக் குழு

நாதஸ்வர இன்னிசைச் செல்வன் N.K.ரகுராமன்



உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும்
நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட தவில் மேதை
அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச்செல்வன்

N.K.Raguraman
Dresdener Str.6
50126 Bergheim
Germany
0049 2271 670236



Tel: 0049 157 89 15 95 71






# நின்னைச் சரணடைந்தேன்

"மறைந்திட முடிய மாய இருளை அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி" என்று மாணிக்கவாசகரின் அடிகளை நெக்குருகி கிடந்த ஓர் சிவ கணத்தில், உத்தரவின்றி உள்ளத்து உள்ளே வந்தான் மாயை போல் அந்த அந்தமில் சித்தனும் .

பல் உயிர்கள் சூழ் உலகில், நாமும் ஓர் நல் உயிராய் பிறந்து, சக உயிர்களோடு ஒன்றி கிடக்கும் அதே சமயம் , நமக்கென உருவகித்த உலகில் தனித்தே சஞ்சரித்துக் கொண்டும் , இணைந்தும் இணையாமல், பிரிந்தும் பிரியாமல் வாழும் விளையாட்டு படைப்பின் மாயையோ ? அன்றி பிறிது உண்டோ ?

மாய விளையாட்டு என்னும் வலையில் மாட்டி கொண்டு அனுபவிக்கும் உணர்வு எவ்வாறு இன்னல் ஆகிறது ? என்பதனை எண்ணற்ற ஞானிகளும், சித்தர்களும் கண்டு உணர்ந்த மெய் ஞானத்தை , பாமரரும் உணரும் படி மிக்க எளிதாய் , ஒரு உண்மை சம்பவ கதை கூறுதல் போல கவி புனைய எத்தனை பெரும் ஞானம் வேண்டும் என்று உணர்ந்து பாரதியிடம் சரணடைந்தவளாய் " கண்ணன் என் சீடன் " என்னும் கவியை இப்பகுதியின் மூலம் முன் வைக்கிறேன்.

" யானேயாகி என்னலால் பிறவாய்
யானும் அவையுமாய் இரண்டினும் வேறாய்
(அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்)

யாதோ பொருளாம் மாய கண்ணன்
என்னிலும் அறிவினில் குறைந்தவன் போலவும்
என்னை துணை கொண்டு என்னுடை முயற்சியால்
என்னடை பழகலால் என்மொழி கேட்டலால்
மேம்பாடு எய்திட வேண்டினோன் போலவும்
யான் சொலும் கவிதை என்மதி அளவை
இவற்றினை பெருமை இலக்கின என்று
கருதுவான் போலவும் , கண்ணன் கள்வன்
சீடனா வந்தெனை சேர்ந்தனன்.

எண்ணிய பிழைகளை

தண்டனை புரிந்திட தான் உளம் கொண்டு
(பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்)
மாய கண்ணன் வலிந்து என்னை சார்ந்து
(ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே)

ஏதோ ஒரு பொருளாகிய அந்த மாய கண்ணன் , என்னை காட்டிலும் சிறியவன் போல , என் பேச்சை கேட்டு நடப்பவன் போல , என் புத்தியை மதிப்பவன் போல ஒரு சீடனாய் வந்து சேர்ந்தான். அவனாகவே வந்து போற்றுதலான வார்த்தைகள் கூறி வியந்து பாராட்டி , எனக்கு அவன் மீது பற்று ஏற்படும் படி செய்தான். என்று மிக சுவாரசியமாய் ஆரம்பிக்கும் இக்கவி கதையை உங்களிடமே விட்டு விடுகிறேன் , படித்து மகிழ, புரிய, தெளிய , பயனுற.

இவ்வாறு வந்த கதையின் திருப்பு முனைபோல,

இறுதியில் மாயையின் பெரும் உண்மையை இலகு தமிழில் முழங்க செய்கிறார். அதை மாயையை வெல்வதன் சூத்திரம் போல் சொல்ல முற்படும் கருத்தென நான் எண்ணுகிறேன்.

" மறைந்ததோர் கண்ணன் மறுகணத்து என்றன்
நெஞ்சிலே தோன்றி நிகழ்த்துவானாயினான் ,

(உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற)

மகனே, ஒன்றை ஆக்குதல் மாற்றுதல் அழித்திடலெல்லாம் நின் செயல் அன்று காண்
(அனைத்து உலகும் ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் )

தோற்றேன் என நீ உரைத்திடும் பொழுதிலே வென்றாய், உலகினில் வேண்டிய தொழிலெலாம் ஆசையும் தாபமும் அகற்றியே புரிந்து வாழ்க நீ என்றான் , வாழ்க மற்றவனே."
(நமச்சிவாய வாழ்க )
ஒன்றை ஆக்குதல்,மாற்றுதல், அழித்தல் எல்லாம் நம் செயல் அன்று . நான் தான் செய்தேன் என்று ஒரு விடையத்தை நினைப்பது தான் பெரும் மாயையாகவும், துன்பத்தின் துவக்கமாகவும் அமையும். இந்த உலகில் என்ன வேலை செய்தாலும் ஆசையும், ஏக்கமும் தோன்றாமல் செய்து முடிக்க வேண்டும். தோற்றேன் என்று சொல்லும் போதே அது நம் வெற்றி தான். ஆக படைப்பு தன் பணியை செவ்வனே நிகழ்த்துகிறது. அதன் வழியை உணர்ந்து, தெளிந்து சரணடைந்து நான் என்னும் அகந்தை நீக்கி வாழ்வதே மாயையை வெல்லும் வழியாகலாம் என்ற இனிய இன்ப வாழ்வின் மந்திரத்தை நம் மனதோடு பதித்து செல்கிறார் பாரதி.

எத்தனை ஆயிரம் மொழி கொண்டும் இயம்ப முடியாத மறை பொருள் உண்மையை ஓரிரு வரிகளுக்குள் அடக்கும் வித்தை கண்டு பல் தசாப்த தலைவன் பாரதியை போற்றி சரணடைவதா? பலகோடி ஆண்டு ஆதிமொழியாம் நம் தமிழை தலை வணங்கி சரணடைவதா ?

மாய பற்று அறுத்து யாவும் அவன் செயல் என்று வாழ்ந்தால் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ் என மணி வாசகரும் , பாரதியும் மாறி மாறி என்னுள் நிகழ்த்திய செய்தியும் ஒன்றேஎன்ற பேரானந்தம் கண்டு தமிழிற்கும் தமிழ் தந்தவனுக்கும் அடிமையாகி என் கற்பனை உலகில் மீண்டும் தொலைகிறேன்...



**மாய கண்ணன் வலிந்து என்னை சார்ந்து**






ஸ்வேதா காலையில் எழுந்து வேலைக்குப்போக மனமின்றி அங்குமிங்கும் நடந்தாள். யன்னல் திரைச்சீலையை உயர்த்தி வெளியே இரவு முழுவதும் கொட்டியிருந்த பனியைப் பார்த்தாள். முன்பென்றால் எவ்வளவுநேரமும் இக்காட்சியை இரசிப்பாள். இன்று மனம் அதில் லயிக்கவில்லை. மாறாய் மனதை என்னவோ செய்தது. சரியாக நித்திரை கொள்ளாததால் தலைகனத்தது. கணவன் சதீசைக் காணவில்லை. காலையில் மூன்று மணித்தியாலம் ஓரிடத்தில் வேலைக்குச் சேர்ந்திருக்கிறான். தனது படிப்புச்செலவில் கொஞ்சத்தைதானே கட்டிவிடுவான். ஒன்பதுமணிக்கு படிக்கப்போனால் மாலை நான்கு மணிமட்டும் படிப்பு. பிறகு வாரத்தில் மூன்றுநாட்களுக்கு ஆறுமணியிலிருந்து ஒன்பதுமணி வரை வேலை. கஷ்டப்படுகிறான்தான். அதற்காக என்னோடு அடிக்கடி சண்டை பிடிக்கவேண்டுமா என்று தன்னையே கேட்டுக் கொண்டாள். இரவு இருவருக்கும் நடந்த வாக்குவாதத்தில் ஒருவரையொருவர் காயப்படுத்தியதுதான் மிச்சம். ஸ்வேதா இந்தத் திருமணத்தால் தான் ஏமாற்றப்பட்டுவிட்டதாக மனம் நொந்தாள். அப்பா அம்மா பேச்சைக்கேட்டு தாயகத்திலிருந்து வந்து இங்கு படித்துக் கொண்டிருந்தவனை திருமணம் செய்தது எவ்வளவு பெரிய முட்டாள்த்தனம் என்று மனம் இடித்துரைத்தது. அவளால் வேலைக்குப் போகவே முடியவில்லை. வேலைக்குப் போயும் வேலையில் ஒன்றிணைய முடியாதென்பது விளங்கவே தொலைபேசியை எடுத்து அவள் வேலை செய்யும் அலுவலகத்துடன் தொடர்பேற்படுத்தி வரமுடியாமைக்கு கிறங்(சுகவீனம்) என்று காரணங்காட்டி உரையாடலைத் துண்டித்தாள்.கணவன் சதீசுடன் கதைக்கலாமோ என்று சிந்தித்தவளது தன்மானம் அவனுடன் பேசுவதைத் தரம் தாழ்ந்ததாக நினைத்து கைவிடச் செய்தது.

சதீசை நினைக்க கோபம் கோபமாய் வந்தது. இரவு நடந்த சண்டைக்கு காலையில் மன்னிப்புக் கேட்டு சமாதானப்படுத்தியிருந்தால் மனம் ஆறியிருக்கும். ஆனால் தான் ஆண் என்ற திமிருடன் நேரத்தோடேயே எழும்பி வெளியே சென்று விட்ட கணவனை அட்ஜஸ்ற் பண்ணி வாழுவது கஸ்டமான காரியம் என்றே விளங்கியது. இது முதல் முறையில்லை. திருமணமாகி இந்த ஆறு மாதத்தில் எத்தனையோ தடவை இப்படியாகிவிட்டது. ஒவ்வொரு முறையும் இவளே இறங்கி வரவேண்டி வரும். பெற்றவர்களிடம் சொன்னால் குடி,சிகரெட் இல்லை .நல்லகுடும்பம் படித்தபிள்ளை இங்கை படிச்சு கெதியில் முன்னுக்கு வரக்கூடிய கெட்டித்தனம் என்று அடுக்கிக்கொண்டு போவினம். அவைக்கு எங்கை விளங்கும் இந்தச்சண்டைகளெல்லாம். எதுக்கெடுத்தாலும் வாக்குவாதம் இரண்டு மூன்றுநாள் கதைக்காமலிருத்தல்.முகத்தை துக்கி வைத்தல் நான் இறங்கிப்போய் பேசுமட்டும் பேசாமலே இருத்தல்.எப்ப பார்த்தாலும் நானே என் ஈகோவை விட்டுக் கெஞ்சவேணும்.இதென்ன வாழ்க்கையென்றிருக்கு. கல்யாணம் என்றால் எப்பவும் சிரிச்சுக்கொண்டு ஜாலியாக ஊர் சுற்றலாம். ஒரு ஆண்துணையுடன் அதுவும் எல்லோரும் ஒப்புக்கொண்ட ஒருவனுடன் சுற்றுவது எவ்வளவு பெருமை என்று நினைத்த எனக்கு சரியான அடி.

மனமோ திரும்பத்திரும்ப அடிக்கடி தங்களுக்குள் வரும் வாக்குவாதத்தையே நினைத்தது. அப்பா அம்மாவுடன் கெதியில் இது பற்றிப்பேசி முடிவெடுக்கவேண்டும். இப்படியே காலந்தள்ள என்னால் முடியாது. ஒரு குழந்தை வரமுதல் பிரிந்திட வேணும். எப்ப பார்த்தாலும் குற்றம் கண்டு பிடிக்கிறது. பழக்கவழக்கமில்லாத காட்டுமிராண்டி. கல்யாணம் நிச்சயம் பண்ணியவுடன் நண்பிகளுக்கு சொன்னபோது “கவனம் .ஊரிலையிருந்து வந்து கொஞ்சக்காலமென்றால் கவனம் ஸ்வே. இப்ப “காடு“க்காக கல்யாணம் செய்வாங்கள். நல்லவங்கள் போலையிருப்பாங்கள். பிறகு தங்கடை அடக்குமுறையைக் காட்டுவாங்கள். அடங்கிப் போய் காட்டிடாதை. பிறகு அவ்வளவுதான். உப்பிடி எவ்வளவு பேரைப் பார்த்திட்டம்..எங்களுக்கு முதல் கனபேர் ஊரிலிருந்து கூப்பிட்டால் நல்லவங்களாயிருப்பினம் என்று நம்பி கல்யாணம் செய்து போட்டு பிறகு அவங்களோடு வாழ முடியாமல் டிவோஸ் பண்ணீற்றினம். இங்கத்தை வாழ்க்கை முறை அவங்களுக்குச் சரி வராது. எதுக்கும் நல்லாய் யோசி.எங்கடை அப்பா அம்மாக்கு இதுகள் விளங்காது.குடி சிகரட் இல்லை. வீண் செலவு செய்ய மாட்டாங்கள் என்று கனக்க சொல்லுவினம்.சிலீவ்லெஸ் உடுப்புகள் பிடிக்காது. ரீசேர்ட் டீப் நெக் பிடிக்காது. இப்படி ஆயிரம் குறை சொல்லுவாங்கள். எதற்கும் நல்லாய் யோசி“ என்றார்கள்.
தாயகத்தில் பல்கலைக்கழகத்தில் படித்தவர் என்றபடியால் பரந்த அறிவுடன் இருப்பாரென்று நினைத்தது தப்பாய் போயிட்டுது. கோபம் வந்தவுடன் கீழ்த்தரமான கெட்ட வார்த்தைகள் பேசுவதும் எடி போட்டுப் பேசுவதும் அவளைக் கோபத்தின் உச்சிக்கு கொண்டு செல்லும். அவளும் டொய்ச்சில் கூடாத வார்த்தைகளில் பேசிவிட்டு பிறகு அது பிழையென்று உணர்ந்து மன்னிப்பும் கேட்டு விடுவாள். ஆனால் சதீஸ் என்றைக்குமே மன்னிப்பு கேட்டதில்லை.மன்னிப்புக் கேட்கவே தெரியாத குறுகின மனம். ஆண் என்ற அகம்பாவம். அது என்ன ஆம்பிளை என்றால் பெரிசா என்ன? தான் சொல்றதைச் சொல்லிப் போட்டு அது என்னை எவ்வளவு துரம் பாதித்திருக்கும் என்று நினைக்க கூடி தெரியாது. வாயில் வாறதெல்லாம் பேசுறது. அதுவும் சம்பந்தமே இல்லாமல் எதையெதையோ சொல்றது. இங்கு வளர்ந்த பிள்ளைகளெல்லாம் ஒழுக்கமில்லாதவர்கள் என்ற நினைப்பு. ஏதோ சாறி கட்டினவர்களெல்லாம் ஒழுங்கானவர்கள் என்றும் ஹோசே(காற்சட்டை) போட்டவர்களெல்லாம் ஒழுக்கமில்லாதவர்கள் என்றும் அவன் சொல்றது அவளைக் கோபப்பட வைக்கும். ஏதோ சாறிக்குள்தான் பெண்களின் கற்பு இருக்கிறமாதிரிப் பேசுறது.சாறி உடுத்திக் கொண்டு ஒழுக்கமில்லாமல் கண்டபாட்டுக்கு வாழுற பெண்கள் எவ்வளவு பேர் இருக்கினம்.அப்படியிருக்க எங்களைக் குறைவாக எப்படிப் பேசலாம். யார் அவர்களுக்கு அந்த உரிமை கொடுத்தது. நான் ஆம்பிளையடி. அப்படித்தான் சொல்லுவன். நீ பொம்பிளை அடங்கிப் போய்த்தான் ஆகணும். இப்படிச் சொல்லும்போது ஸ்வேதாவுக்கு அடக்க முடியாத ஆத்திரம் வரும். இதையே வீட்டில் யாரும் சொல்லியிருந்தால் கொதித்து எழும்பியிருப்பாள். தம்பி கூறியிருந்தால் அவனை உண்டு இல்லையென்று ஆக்கியிருப்பாள்.சதீசுடன் சண்டை பிடித்து ஒரு பயனுமில்லை. அவன் அதைப் புரிந்து கொள்ளவே மாட்டான் என்று தெரிந்து கொஞ்சம் கோபத்துடன் முறைப்பாக நின்றால் “என்னடி சிலுப்பீற்று நிற்கிறாய்“ என்பான். ஸ்வேதாவுக்கு அதன் அர்த்தம் விளங்குவதேயில்லை. ஏதோ தன்னைத் தரக்குறைவாகப் பேசுறான் என்பது மட்டும் விளங்கும். கோபம் சுள்ளென்று தலைக்கேற ஒன்றும் செய்ய முடியாமல் பெற்றவர்களை மனதுக்குள் பேசியபடி நிற்பாள். கொஞ்ச நேரத்திலேயே தான் சொன்ன மோசமான வார்த்தைகள் ஸ்வேதாவை எந்தளவுக்கு காயப்படுத்தியிருக்கும் என்று யோசிக்காமல் சாதாரணமாகப் பேசுவான். தன்னுடைய ரென்ஷனை அவள்மேல் கொட்டிவிட்டு தான் கூலாக இருப்பதாக அவளுக்குத் தோன்றும். அவன் அன்பும் காதலும் இல்லாதவன் என்று சொல்வதற்கில்லை. அன்பாயிருப்பான். கோபம் வந்தால் வாயில் நல்ல வார்த்தைகளே வராது. ஸ்வேதா தன்னுடன் படித்த ஆண் நண்பர்களைக் கண்டவுடன் கட்டியணைத்துப் பேசுவது தொட்டுத் தொட்டுப் பேசுவது அவனுக்குப் பிடிக்கவே பிடிக்காது. அதைப்பற்றிப் பேசினாலே கோபம் தலைக்கேறி விடும் ஸ்வேதாவுக்கு. “பழக்கவழக்கமில்லாத பட்டிக்காடு நாட்டான்“ சட்டெனச் சொல்லி விடுவாள். “ஓம் நான் பட்டிக்காட்டான் தான். நீங்களெல்லாம் உரிஞ்சு போட்டு திரியிறனீங்க தானேடி. எவனோடையெல்லாம் திரிஞ்சியளோ? இப்ப பத்தினி வேஷம் போடுறியா?என்பான்.

தொடர்ச்சி 32 பக்கம்.





31 ம் பக்கத் தொடர்ச்சி....

# எது அடையாளம்

அவனிடமிருந்தே கற்றுக் கொண்ட தரக்குறைவான பேச்சையெல்லாம் அவளும் இப்ப அவனைப் பார்த்துக் கேட்கப் பழகிவிட்டாள். இப்ப யோசிக்கும்போது "எங்களுக்குப் பிள்ளை ஒன்று பிறந்தால் ஐயோ நினைக்கவே பயமாயிருக்கு. இவ்வளவு நாளும் இவற்றை அப்பா அம்மாவிடம் பேசக் கூச்சப்பட்டது போதும்.. இனி எல்லாவற்றையும் சொல்லிவிடவேண்டும். இந்தப் பேச்சுக்களெல்லாம் இனித்தாங்க ஏலாது. வேலைத்தலத்தில் கூட அந்த வார்த்தைகள் தன்னைத் துரத்தியடிப்பதை அவள் பல தடவை உணர்ந்திருக்கின்றாள். வலி சுமந்த மனதுடன் தனியாகப் பெற்றோரிடம் சென்றாள்.அவனையும் கூட்டிச் சென்று அவன் குறைகளைப் பேச அவள் விரும்பவில்லை. "ஏதோ குடியில்லை, சிகரட் இல்லை, தங்கமான பெடியன் என்று பெரிசாய் அளந்தீங்க. இப்ப சொல்றன் கேட்டுக் கொள்ளுங்கோ. நான் இவ்வளவு நாளும் சொல்லாமல் இருந்ததுக்காக உங்கடை மருமகனுடைய குணங்கள் உங்களுக்குத் தெரியேல்லை. இனி என்னாலை பொறுக்க முடியாது. "ஏன் என்ன ஸ்வே சொல்றீர்" பதறினார் அம்மா. "நீங்களே என்னை ஒருநாளும் எங்கை போறீர் என்றுகேட்டதில்லை. அதுவும் நீ என்று ஒருநாளும் சொன்னதில்லை. சதீஸ் கோபம் வந்தவுடன் நீ என்கிறதும் எடி என்கிறதும் வெளிக்கிட்டுக் கொண்டு இருக்கும்போதே "எங்கை போகிறாய்" என்ற கேள்வி.

எனக்குப் பத்திக்கொண்டு வரும். என்னில் நம்பிக்கையில்லை. சந்தேகம் என்றபடியால்தானே இந்தக் கேள்வி" சொல்லவும் அம்மா சொன்னா "நாங்க கேட்காதது தான் பிழை போல இருக்கு. அநேகமாய் நீர் சொல்லீற்றுத்தானே போறனீர். நீர் சொல்லாமல் இருந்தால் அவர் கேட்கிறதில் என்ன பிழை?இரண்டு பேரும் சேர்ந்தே போகவேண்டிய இடங்களுக்கு போங்களேன். தனியப் போறதென்றால் முதல் நாளே அதைப்பற்றி சொல்லலாம் தானே" கூறி முடிக்கு முன்னே பட்டேன வெடித்தாள் ஸ்வேதா. "பெமிஷன் எடுக்கச் சொல்றீங்களா?நான் என்ன சின்னப் பிள்ளையா?"இவ்வளவு நேரமும் பேசாதிருந்த அப்பா சொன்னார் "நீர் வளர்ந்த சூழல் வேறு. அவர் வளர்ந்த சூழல் எப்படியோ. அவர் கேட்கிறதிலை ஒரு தப்புமில்லை. நீரே சொல்லிவிட்டால் எப்படிக் கேட்கலாம் என்ற கோபம் வராதில்லையா?""ஓம் தான்.நான் போகும்போது சொல்வன்தானே.அதற்கு முதல் இப்படிக் கேட்டால் கோபந்தானே வரும். இப்ப எங்கை யாரோடை என்று கேட்டால் கோபம் வராதா?"முதலே இதுகளைக் கதைத்து வைக்கலாந்தானே" எனக்கு அப்படிப் பழக்கமில்லையே"" யாரும் எல்லாமே பழகீற்றுப் பிறக்கிறதில்லை. பழகிக் கொள்ள வேண்டியதுதானே. கொஞ்சம் புருசனுக்காக விட்டுக் கொடுத்தால் ஒன்றும் குறைந்து போகாது." அப்பா கூறவும் "ஏனப்பா நான் மட்டுந்தான் விட்டுக் கொடுக்க வேணுமோ? அவர் விட்டுக் கொடுக் கக்கூடாதோ?என்றாள்."ஏன் ஸ்வே முதல் நீர் விட்டுக் கொடும். பிறகு பாரும் அவர் எப்படி மாறுகிறாரென்று" அப்பா புத்தி சொன்னார். "நான் அவருடைய உடுப்பு விஷயத்தில் தலையிடுகிறேனா? அவர் சும்மா ரீசேர்ட் ரைற்றாய் போடுறாய். ஸ்லீவ்லெஸ் போட்டால் ஆபாசமாயிருக்கென்கிறார்.ரீசேர்ட கழுத்து டீப்பாயிருக்கிறது. எப்படி அவர் ஆபாசம் என்ற சொல்லைப் பாவிக்கலாம். சினிமாவில் அரைகுறை உடுப்பென்றால் தானே இந்தச் சொல் பாவிக்கிறவை. எனக்கு அவமானமாயிருக்கம்மா. இப்படிப் பேச்சைக் கேட்க. எனக்கு அழகாயிருக்கு. என்னுடைய விருப்பம் போடுறன். அவர் அப்படியேன் சொல்லுவான்?அவள் சொல்லட்டுமென்று கேட்டுக் கொண்டிருந்த அப்பா" இப்படிப் பேசுறதெல்லாம் சரியென்று நான் சொல்லேலையம்மா. தப்புத்தான். தப்பைக் கண்டு விட்டிட்டு ஓடிக் கொண்டிருந்தால் ஓடிக் கொண்டு தானிருக்கவேண்டும். அவர் உம்மடை கணவன். திருத்த வேண்டியது உம்மடை கடமையில்லையா?"என்றார்.

"அப்பா எப்படி எப்படியோ வளர்ந்தவர்களைத் திருத்துறது என்னுடைய வேலையில்லையப்பா. எனக்கு பிடிக்கேல்லை. விட்டிட்டுப் போயிட்டே இருக்கிறன். அவ்வளவுதான். "என்றவளுக்கு "சரியம்மா. அவரை விட்டிட்டு தனியவே வாழப் போறீரா? அல்லது இன்னொருத்தரைத் தேடிப் பிடித்து அந்த இன்னொருத்தருடன் வாழப்போறீரா?"அது பிறகு பார்க்கலாம். இப்ப நடக்கிறதைப் பார்ப்பம். எனக்கு சரியில்லாதவருடன் அட்ஜஸ்ற் பண்ணி வாழ வேண்டுமென்கிறீர்களா? இதை விட்டு விலகி எனக்கு ஏற்ற பொருத்தமானவர் ஒருவர் வந்தால் திருமணம் செய்கிறது தப்பா அப்பா?"தப்பே இல்லை ஸ்வே. ஆனால் உங்கடை தேடல்கள் தொடர்ந்து கொண்டேயிருக்கும். உங்களோடு நுறு வீத ஒன்று பட்ட குணம் கிடைக்காது. இருப்பது போல நினைத்து கல்யாணம் செய்வீங்க. பிறகு கொஞ்ச நாளில் ஒத்துவரேல்லையென்று சொல்லி திரும்ப விலகுவீங்க. அதுதான் வேண்டாமென்கிறன். சரியில்லை சரியில்லையென்று எத்தனை தரந்தான் கல்யாணம் செய்வீங்க. பிள்ளைகள் பாடு என்னாகும். எத்தனை பேரை அப்பா என்று அவர்கள் ஏற்க முடியும்?அதை விட்டு கல்யாணம் செய்தவனோடு கொஞ்சம் அட்ஜஸ்ற் பண்ணுங்க. பிறகு பாருங்கோ. எப்படி வாழுறீங்க என்று. ஒரு ஆறு மாதத்தில் என்ன புரிஞ்சு கொள்ள முடியும். உம்மடை அம்மாவையே எடுத்துக் கொள்ளும். நான் கல்யாணத்துக்கு முதல் குடிப்பன், புகைப்பன், சைற்அடிப்பன். எல்லாக் கெட்ட பழக்கமும் இருந்திச்சு. ஆனால் உங்கடை அம்மா என்னை விட்டிட்டா போனா? திருத்தி உங்களுக்கொரு நல்ல அப்பாவைத் தரேல்லையா? திருந்தினதில் என்னுடைய கெட்டித்தனம் எதுவுமேயில்லை. எல்லாம் உங்கடை அம்மாவின் கெட்டித்தனம். அவ எனக்குத் தேவதை மாதிரி வந்து என்னை எல்லோரும் மதிக்கிற மனுசனாக்கேலையா? அம்மாவும் படிச்சவ. என்னுடைய பழக்கங்கள் பிடிக்காமல் என்னை விட்டிட்டு வேறு யாரையும் கல்யாணம் செய்திருந்தால் நீங்க யாரோ ஒருத்தனை அப்பா என்றிருப்பீங்களா?"பதில் கூற முடியாமல் திணறினாள் ஸ்வேதா.

பிறகு சொன்னாள்" நீங்க நல்லவரப்பா. அம்மாவை எங்களை நேசிச்சீங்க" என்று சொல்லவும் "ஓம் சதீசும் மோசமானவர் இல்லை. என்னை விட எவ்வளவோ நல்லவர். என்ன அவர் வாழ்ந்த ஊரின் சில பழக்கங்கள் ஒட்டியிருக்கு. அவ்வளவுதான். இது ஒரு பிரச்சனையா? இது ஒரு சின்னப் பிரச்சனை. நீர் சொன்ன மாதிரி அவர் சொல்ற அந்த வார்த்தைகள் சரியில்லை. எனக்கும் கேட்க கோபம் தான் வருகுது. என்ரை பிள்ளையை இப்படிச் சொன்னால் வெட்டிப் போடுற கோபம் வருகுது. அந்தப் பேச்சு வராமலே பார்த்துக் கொள்றது தான் கெட்டித்தனம். கொஞ்சக் காலம் அந்த வார்த்தைகள் பேசாவிட்டால் அவர் அதை மறந்திடுவார். ஆனபடியால் அப்படி ஒரு பேச்சு சொல்ல வேண்டிய சூழல் வராமல் பார்த்தால் போதும். எல்லாமே சரியாயிடும். அதோடு இன்னொரு ஆணோடு பேசுறது பிடிக்காமல் போவது பொஸஸ்ஸிவ்னெஸ். அதொன்றும் பிழையில்லை" "ஏனப்பா எனக்கு அது விளங்கேல்லை.அதென்ன பொஸஸ்ஸிவ்னெஸ்"."ஓ அதுவா எனக்கு அதன் டொய்ச் சொல் தெரியேல்லை. அதிகமான அன்பு ஒருவரிடமிருந்தால் மற்றவர்களுடன் பேசினால் அன்பாயிருந்தால் பொறாமை வரும். அது ஒரு அன்பின் வெளிப்பாடுதான். கொஞ்சம் உளவியல் தெரிந்தால் போதும். இப்ப சாப்பிடும்." என்றார் அப்பா."விட்டுக்கொடுக்கிறதில் கெட்டுப்போவது எதுவுமேயில்லை.
விட்டுக் கொடுப்பவர் தான் வாழ்க்கை விளையாட்டில் வெற்றியாளர்" கூறிய அம்மாவை வியப்புடன் பார்த்தாள் ஸ்வேதா. இவ்வளவு காலமும் பார்த்த அம்மாவாயில்லாமல் வாழ்க்கை இரகசியம் தெரிந்த வாழ்வில் சாதித்த அம்மா வாழ்க்கை என்ற ஏணியின் உச்சத்தில் நிற்பது புரிந்தது.தானும் தங்கையும் அம்மாவுக்கு நல்ல டொய்ச் தெரியாது.ஏதோ கொஞ்சம் தெரிந்து வைத்துக் கொண்டு சமாளிக்கிறா தங்களை விட அறிவு குறைந்தவ என்று நினைத்திருந்தது எவ்வளவு மடத்தனம் என்று புரிந்தது. டொய்ச் திறமையை விட அவவின் வாழ்க்கையைக் கொண்டு செலுத்துகிற திறன் அப்பாவைப் புரிந்து அவருக்கேற்ற மனைவியாக வாழ்ந்து எங்களுக்கு வழிகாட்டியாக இருப்பது எல்லாமே வியக்கத் தக்கதாக இருந்தது.அம்மாவைப் புதிதாகப் பார்ப்பவள் போலப் பார்த்தாள். தங்கடை அடையாளம் (ஐடென்ரிற்றி) என்று எதையோ நினைத்து வெறும் ஈகோவுடன் வாழ்ந்தது புரிந்தது. விட்டுக்கொடுப்பதால் தங்கள் அடையாளம் துலைந்து விடாது என்பதைப் புரிந்து கொண்டார்கள்..

RKL IMMO .de IMMOBILIEN & BAUFINANZIERUNG
UMFINANZIERUNG / KAPITALANLAGE / RATENKREDIT / SONDERFINANZIERUNG

நம்பிக்கை
உத்தரவாதம்
17 வருட அனுபவம்



RKLIMMO / S.KIRTHARAN

Baufinanzierung /வீடு வாங்குவற்கான கடன்கள். 100%இலவசசேவை
Umfinanzierung / வீட்டுக் கடனை எம்மிடம் மாற்றுதல்.100%இலவசசேவை
Kapitalanlage /வீடு வாங்கி வாடகைக்குக் கொடுத்தல். 100% இலவசசேவை
Ratenkredit /தனிநபர்கடன்.100% இலவசசேவை
Sonder finanzierung / பலவிதமான கடன்வசதிகள்
Full Service /முழுமையான சேவை **A to Z**
Immobilien /வீடு விற்க இல்லையேல் வாங்குவதற்கான ஒழுங்குகள்
Tel: 0511 5307 4208 INTERNET:WWW.RKLIMMO.DE
Mobil: 0172-5214530 Vahrenwalder Str.167 30165 Hannover






யோகன், யோகி:
02823/6838
Mobil:
152 138 22 350

Yogan Deko

சிவகாமி மணவறைச் சோடினை







# திருமந்திரமும் வாழ்வியலும் 30

(சைவசித்தாந்த ரத்தினம் நாகேந்திரம் கருணாநிதி)

**இந்நூலில் சிவம் எனவரும் சொல்லுக்கு இறைவன் என்னும் கருத்தைக் கொள்வோமானால் இந்நூல் எல்லா மதத்திற்கும் பொது நூலாக அமைவதைக் காணலாம்.**

## திருமந்திரம் கூறும் சைவசித்தாந்தம்

ஆன்மா தன்னுள் இருக்கும் சிவத்தை அறிந்து, மல நீக்கம் பெற்றுச் சிவனடியைச் சேரும் வழியைக் காட்டுவதே சைவ சித்தாந்தத் தத்துவத்தின் நோக்கமாகும். சைவ சித்தாந்தம் பதி (இறைவன்), பசு (ஆன்மா), பாசம் (ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள்) இவை மூன்றும் அனாதியானவை. அதாவது என்றும் நிரந்தரமானவை. இவை தோன்றுவதுமில்லை அழிவதுமில்லை என்பதை உறுதிபடக் கூறுகின்றது.

பதி (இறைவன்) ஒருவரே. அவர் எங்கும் நிறைந்திருக்கின்றார். அவர் அருவமும் உருவமும் அல்லாத, குணமும் குறிகளும் இல்லாத, விருப்பு வெறுப்பு இல்லாதவர். அவர் சிவம் என அழைக்கப்படுகிறார். சிவம் ஆன்மாவின் மேல் உள்ள கருணையினால் ஆன்மாவை ஈடேற்றும் பொருட்டுச் சக்தியாக மாறி சக்திக்கூடாக சிவன், சக்தி, நாதம், விந்து (அருவத்திருமேனி), சதாசிவம் (இலிங்கத்திருமேனி) (அருவுருவத்திருமேனி), இருபத்திஐந்து மகேஸ்வர வடிவங்கள் ஆகவும், பிரம்மா, விஸ்ணு, உருத்திரன், சதாசிவன், மகேஸ்வரன் ஆக முறையே படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகிய தொழில்களைச் செய்வதற்கும், அவர்களின் சத்திகளாக இயங்கச் சரஸ்வதி, இலட்சுமி, உமையவள், மனோன்மணி, மகேஸ்வரி ஆகவும், வைரவர் (மகேஸ்வர வடிவங்களில் ஒன்று), வீரபத்திரர், கணபதி, முருகன், ஐயப்பன் போன்ற பல திருமேனிகளைத் தாங்கி நிற்கின்றார்.

பசு (ஆன்மா) ஒரு பொழுதும் தனித்து நிற்காமல் ஒன்றைச் சார்ந்து (மலத்தை அல்லது இறைவனை) நிற்கும். தானாக ஒன்றும் அறியாது. அறிவித்தால் அறியும் தன்மையுள்ளது. ஆன்மா தான் சேர்த்து வைத்த வினையின் (சஞ்சிதம்) ஒரு பகுதியை (பிராரப்தம்) இறைவன் ஆணைப்படி இப்பிறவியில் அனுபவிப்பதற்காக இறைவனால் தேர்ந்தெடுத்த உடலுக்கு அனுப்பப் படுகிறது. ஆன்மா வினையை அனுபவித்து முடிப்பதுடன், இப்பிறவியில் செய்த வினையின் ஒரு பகுதியை இறைவன் ஆணைப்படி இப்பிறவியில் அனுபவிப்பதுடன் மறு பகுதியை (ஆகாமியம்) சஞ்சித வினையுடன் சேர்ப்பதற்காக எடுத்துக்கொண்டு இவ்வுலக வாழ்வை விட்டு நீங்குகின்றது. இறைவன் ஆன்மாவுடன் சேர்ந்து இருந்தாலும் ஆன்மா ஆணவ மலத்தால் கட்டுண்டு இருப்பதால் இதை அறியாது. அத்துடன் இப்பிறவியில் ஆன்மா செய்யும் நல்வினை, தீவினைகளுக்கு இறைவன் பொறுப்பாகமாட்டான். ஆன்மா இப்பிறவி எடுத்த நோக்கமான பிராரர்த்தவினையை அனுபவிக்கும் செயலை இப்பிறவியிலேயே முடிக்கவேண்டும். இதிலிருந்து ஆன்மாவால் விடுபடமுடியாது. ஆனால் ஆன்மா இறைவனை நாடி இவ்வினையைச் சுலபமாகக் கழிக்கமுடியும்.

பாசம் (மும்மலங்கள்). 1. ஆணவம். ஆன்மாவிற்கு அறியாமையைச் செய்யும். இது தன்னையும் காட்டாது, பிறபொருளையும் காட்டாது. ஆன்மாவுடன் பிறப்பிற்கு முன்பும், பின்பும் சேர்ந்திருக்கும். 2. கன்மம். இது இரு வகைப்படும். 1. மூலகன்மம் (காரணகன்மம்) (சஞ்சிதவினை) (தொல்வினை) ஆன்மா உடல் எடுக்குமுன் ஆன்மாவுடன் இருப்பது. ஆன்மா உடல் எடுக்கும் போது இறைவனால் இதில் ஒரு பகுதியை ஆன்மாவிற்கு வழங்கும் போது பிராரப்தவினை (ஊழ்வினை) (விதி) எனக்கூறப்படும். 2. காரியகன்மம் (ஆகாமியம்). ஆன்மா இப்பிறவியில் செய்யும் வினை. இது நல்வினை, தீவினை என இருவகைப்படும். 3. மாயை. இது சடப்பொருள் அனைத்தின் ஆற்றல்களும் ஒன்றாகத் திரண்டு நிற்பது. இவ்வுலகம், மற்றும் இங்குள்ள அனைத்துப் பொருட்களும் மாயையாகும். இது சுத்தமாயை, அசுத்தமாயை என இரு வகைப்படும். இறைவன் ஆன்மாவின் மலத்தை நீக்குவதற்காக மாயையை உபயோகிக்கின்றான்.

சைவசித்தாந்தத்தை ஞானாமிர்தம், மற்றும் பதின்னான்கு சைவசித்தாந்த சாத்திரங்கள் ஆகிய நூல்கள் மூலம் விரிவாக அறிந்துகொள்ளலாம்

மேற்கூறிய சைவசித்தாந்தக் கொள்கையான பதி பசு, பாசம் ஆகிய மூன்றும் நிரந்தனமானவை என்பதை உறுதிப்படுத்தும் திருமந்திரத்தில் வரும் பாடல் எண் 2405 இல்

“அறிவுஅறிவு என்ற அறிவும் அனாதி
அறிவுக்கு அறிவாம் பதியும் அனாதி
அறிவினைக் கட்டிய பாசம் அனாதி
அறிவு பதியின் பிறப்பு அறுந்தானே”

அறிவு அறிவு என்று சொல்லப்படும் ஆன்மா அனாதியானது. அதாவது தொன்மையானது, தோற்றம் இல்லாதது. அறிவுக்கு அறிவான, ஆருயிர்க்குத் தலைவனான பரம்பொருளும் அனாதியானது. ஆன்மாக்களைப் பற்றி வரும் பாசமும் அனாதியானது. தொன்மையான சிவமும், சீவனும் பதிந்தால் ஆன்மாக்களின் பாசப்பயனான பிறவித் துயர் அறுந்துவிடும். அதாவது பசு விடுதலை பெற்றுவிடும்.

பாசம் அகலப் பசு பதியை அடையும் எனக் கூறும் பாடல் எண் 2406 இல்

“பசுப்பல கோடி பிரமன் முதலாய்ப்
பசுக்களைக் கட்டிய பாசம் மூன்றுண்டு
பசுத்தன்மை நீங்கி அப்பாசம் அறுத்தால்
பசுக்கள் தலைவனைப் பற்றி விடவே”

பிரமன், திருமால், உருத்திரன் முதலான தேவர்கள் உட்பட உயிரினங்கள் கோடி கோடியாகும். இந்த உயிர்களை இறுகப் பிணித்திருக்கும் பாச மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என மூன்றாகும். குளம், குட்டைகளில் நீரை மறைத்திருக்கும் பாசியை விலக்கினால் தெளிந்த நீர் தெரிவது போல உயிர்களின் அறிவை மறைத்திருக்கும் மலங்களை அகற்றினால் இறைகாட்சி தெரியும். அப்போ உயிர்கள் இறைவனைப் பற்றி நிற்கும்.

பதி, பசு, பாச அமைப்பு சிவன்கோவில் எனக் கூறும் பாடல் எண் 2411 இல்

“ஆய பதிதான் அருட் சிவலிங்கமாம்
ஆய பசுவும் அடலேறு எனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகும் நற்பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார் கட்கே”

கோயிலுக்குள் இருக்கும் சிவலிங்கம் பதி. எதிராக உள்ள வலிமை மிக்க காளைமாடு (நந்தி) பசு. அதற்குப் பின்னால் உள்ள பலிபீடம் நல்லபாசமாகும். இந்த உண்மை சிவாலயம் அமைந்துள்ள முறையை ஆராய்வோருக்குப் புரியும். ஆன்மாவாகிய பசு, பதியாகிய சிவனை நோக்கப் பாசமாகிய பலிபீடம் பின்னடையும் என்பது பொருள். பாசங்கள் பலியிடப்படும் இடம் என்பதால் அது பலிபீடம் எனப்பட்டது.

பதியை அறியப் பாசம் அகலும் எனக் கூறும் பாடல் 2412

“பதிபசு பாசம் பயில்வியா நித்தம்
பதிபசு பாசம் பயில்வோர்க்கு ஆறாக்கி
பதிபசு பாசத்தைப் பற்றுஅற நீக்கும்
பதிபசு பாசம் பயில நிலாவே”

பதி, பசு, பாசம் என்னும் மூன்றினையும் உணர்த்தும் திருமுறைகளைத் தினம் கற்று, பதி, பசு, பாச நிலைகளைக் கற்போருக்கு உணர்த்தி, அவற்றைப் போக்கிக் கொள்ளும் வழியைக் காட்டி, பதியை நாடிப் பசு செல்லாது தடுத்துக் கட்டிப் போட்டிருக்கும் பாச, பந்த கட்டுக்களை அடியே அழித்து, பதியாகிய பரம்பொருளின் நமசிவாய என்னும் ஐந்தெழுத்து மந்திரத்தைத் தினம் தியானிப்பவர்களுக்கு பாசம் பற்றாது,


ஓம் பூரணம் ஓம்

**மானுடம் முழுமை பெறும் பூரணம்**

**பூரண ஆச்சிரமம்**

சுவிற்சர்லாந்து

0041 79 839 27 73

**உடலினையும் மனதினையும் உறுதி செய்து**
**வாழ்வினை வெற்றி கொள்வோம்**

யோகா, தியானம், மன ஒருங்குவிப்பு, உடல் உள நல பயில்வு, ஐபதப சாதனைகள்

Purna Ashram Gotthelfstrasse 44, 3400 Burgdorf Switzerland Tel: 0041 34 413 02 65




# கண்ணாலும் காணாத நாணயம்! இணைய நாணயம் பிட்காயின்

# Bitcoin

## டிஜிட்டல் நாணயம்.



ஜனார்த்தனி சுபசபாநாதக்குருக்கள்

பிட்காயினைப் பற்றி தொழில்நுட்ப சமூகத்திற்கு வெளியே யாரும் பெரிதாக அறிந்திருக்கவில்லை.
பிட்காயின் ஒரு Cryptocurrency, அதாவது ஒரு மின்னணு (digital) நாணயம்.

Cryptocurrency இணையத்தில் மட்டும் இருக்கக்கூடிய ஒரு வித நாணயம். அதில் ஒன்று தான் Bitcoin. பிட்காய்யினை கண்ணால் பார்க்க முடியாது. அது எலக்ட்ரானிக் (electronic) வடிவத்தில் மட்டும் இருக்கும்.

ஐரோப்பாவில் பெரும்பாலும் எப்படி யூரோவோ (€), இந்தியாவில் எப்படி ரூபாயோ, ஒவ்வொரு நாட்டிற்கும் ஒவ்வொரு நாணயம் இருக்கின்ற மாதிரி இணையத்திற்கு இருக்கின்ற ஒரு நாணயத்தின் பெயர் தான் Bitcoin.
இன்றைய தேதி கணக்குப்படி ஒரு பிட்காயினின் மதிப்பு கிட்டத்தட்ட 6.800 €.

பிட்காயின் எந்த ஒரு அரசாங்கம் அல்லது மத்திய வங்கியால் வெளியிடப்படாமல் அதன் பயனாளிகளால் நிர்வகிகப்படும் பணம் (decen tralized network). பிட்காயினை இஷ்டம் போல அச்சிட முடியாது என்பதும், நிர்ணயிக்கப்பட்ட அளவு நாணயங்கள் மட்டுமே மொத்தமாக உருவாக்கப்பட முடியும் என்பது போன்ற பல அம்சங்கள் அதில் இருக்கின்றன. இதன் பரிவர்த்தனை பிளாக்செயின் (blockchain) தொழில்நுட்பம் மூலம் நிகழ்கிறது. Blockchain தொழில்நுட்பம் மூலம் தான் அனைத்து cryptocurrency களும் இயங்குகின்றன. ஒரு தகவல் blockchain தொழில்நுட்பம் மூலம் சேமித்துவைக்கப்படும் போது அந்த தகவலை யாராலும் அழிக்கவோ அல்லது மாற்றவோ இயலாது.

இந்த நவீன தொழில்நுட்பத்தினால் விளைந்த பிட்காய்யினை 2009ம் ஆண்டு மூலவடிவத்தில் கண்டுபிடித்தவர் முகம் அறியப்படாத சதோஷி நாகமோடோ (Satoshi Nakamoto) ஆவர்.
பிட்காயின் ஒரு பண செலுத்துகை முறை யாகும். இதைக் கொண்டு இணையதளங்களில் பொருட்கள் வாங்கலாம். வாங்கும் பிட்காயின்களை இணையத்தில் உள்ள பணப்பைகளில் (wallet) சேமிக்கலாம். இதை ஒரு முதலீடாகவும் பார்க்கலாம்.

எல்லா முதலீடுகள் போலவே பிட்காயின் முதலீடும் ரிஸ்கானவை. முதலீட்டாளர்கள் எப்போதும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். பிட்காயின்களின் மதிப்பு எவ்வளவு வேகமாக உயர்ந்ததோ அதே வேகத்தில் வீழ்ச்சியடையும் என்பது குறிப்பிடத்தக்கது.
பொதுமக்கள் மத்தியில் பிட்காயினை வாங்கும் பழக்கம் குறைவாக இருந்தாலும், நாணயத்தில் பணத்தை போட்டால் அது பலன் தரும் முதலீடாக இருக்கும் எனும் எண்ணம் வலுப்பெறத் துவங்கியிருக்கிறது.
பங்குச்சந்தை முதலீடு போல வருங்காலத்தில் பலரும் பிட்காயினில் முதலீட்டில் ஆர்வம் காட்டலாம்.
பாக்கிஸ்தான், ரஷ்யா, ஈரான் என்று ஒரு சில நாடுகளை தவிர்த்து பெரும்பாலான நாடுகளில் பிட்காயின் சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இவ்வளவு காலமாக பிட்காயின் வணிகம் இந்தியாவில் ஊக்குவிக்கப்ப டவில்லை.

இந்திய ரிசர்வ் வங்கி அனைத்து நிதி நிறுவனங்களையும் பிட்காயின் பரிவர்த்தனையிலிருந்து தடை செய்தது,பிட்காயினிக்கு எதிராக இந்திய அரசாங்கத்தின் போராட்டம் சித்திரை 2018 ல் ஆரம்பித்தது.
ஆடி 26, இந்திய கமிஷன் (Commission) பிட்காயினை பணம் செலுத்துவதற்கான வழிமுறையாக சிபாரிசு செய்கிறது. கொள்கை அளவிலும், தொழில்நுட்ப நோக்கிலும் அறிந்து கொள்ள பிட்காயினில் அநேக விஷயங்கள் இருந்தாலும், அதன் சட்டப்பூர்வமான அங்கீகாரம் இன்னும் கேள்விக்குறியாக உள்ளது.


### 9வது ஆண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 19.09.1957 — உதிர்வு: 07.09.2009

**அமரர் உயர்திரு. கணபதிப்பிள்ளை செந்தில்குமார்.**

யாழ் இணுவில் மேற்கில் பிறந்து யேர்மனி சுவேற்றா நகரில் வாழ்ந்து 07.09.2009 இல் எம்மைவிட்டுப்பிரிந்த எம் அன்புத் தெய்வமே!
உன் அழகுத் திருமுகம் மறைந்து ஆண்டுகள் ஒன்பது ஆனாலும் உன் ஆத்மா என்றும் எங்களுக்குத் துணைதான் ஐயா உங்கள் ஆத்மசாந்திக்காப் பிராத்திக்கும்.
மனைவி,மக்கள்
தகவல்: றஜீவி.செந்தில்குமார்.(யேர்மனி-சுவேற்றா)



இலங்கைக்கு பார்சல் அனுப்ப விரும்புகிறீர்களா?

**TAMIL-PARCEL.de**

ஒரு பாசல் அனுப்பும் கட்டணம் 55€ மட்டுமே!

PARCELS TO COLOMBO ONLY 50 €

Our partners near you
Arnsberg. Bochum. Bonn. Brüggen.Dortmund.Duisburg. Essen.Frankfurt.Heideelberg. Heilbronn.Hornberg.Herne. Hückelhoven.Krefel. Mannheim.Mönchengladbach. Neuss.Mörfelden-Walldorf.Mühlacker. Mühlheim. Solingen.Stuttgart.Wuppertal

- 60 x 40 x 40 cm அளவு பெட்டிகள்
- பெட்டியின் உள்ளடக்கம் 40Kg
- பெட்டி மற்றும் டேப் றோல் இலவசம்
- நீங்கள் வெளிநாடுகளில் இருந்து அனுப்பும் பார்சல்கள் தாயகத்தில் உள்ள உங்கள் இல்லங்கள் தேடி நேரடியாக கொடுக்கப்படும் (Door-to-Door Delivery)

**Best Price Promiser**




ஒவ்வொரு பார்சலும் 300€ காப்புறுதியுடன் அனுப்பப்படும்

மக்கள் தொடர்பு:
www.tamil-parcel.de
0176 56841676
0176 24889539



# கருணாநிதி பற்றி கருணாநிதி!



கருணாநிதி பற்றி எழுதப்பட்ட எழுத்துகளும் பேசப்பட்ட உரைகளும் ஏராளம். ஆனாலும் கருணாநிதியைப் பற்றி அவரே சொல்வது, வரலாற்றின் ஆவணம் அல்லவா? விகடனில் வெளியான நேர்காணல்களிலும், கேள்வி - பதில்களிலும் தன்னைப் பற்றி அவர் சொன்னவை இதோ...

“ஒரு மகனாக, கணவனாக, தந்தையாக, சினிமா வசனகர்த்தாவாக, பத்திரிகை ஆசிரியராக, கட்சித் தலைவராக, முதல்வராக... இப்படி ஒவ்வொரு பரிமாணத்திலும் உங்களை நீங்களே விமரிசியுங்களேன்...”

“மகனாக அல்ல் தாய்க்கும் தந்தைக்கும் பக்தனாக, கணவனாக அல்ல் என்றும் காதலனாக - தந்தையாக அல்ல் கட்சித் தலைவனாக - சினிமா வசனகர்த்தாவாக அல்ல் சீர்திருத்த சிற்பியாக - பத்திரிகை யாசிரியராக அல்ல் பகுத்தறிவு பிரசாரகனாக - கட்சித் தலைவனாக அல்ல் உடன்பிறப்பாக - முதல்வராக அல்ல - மக்களின் ஊழியனாக.”

"அண்ணா, பெரியாருக்கு அடுத்தபடியாக உங்களை பாதித்த தலைவர் யார்?”

“தன் இன மக்களின் அடிமைத்தளை அறுப்பதற்காக 27 ஆண்டுகள் சிறையில் இருந்த நெல்சன் மண்டேலா.” “அரசியலுக்கு அப்பாற்பட்டு உங்களை பாதித்த மனிதர் யார்?” “கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்.”“நண்பர் எம்.ஜி.ஆர். - எதிரணியில் எம்.ஜி.ஆர்., - எம்.ஜி.ஆர். இல்லாத உங்கள் அரசியல் - இந்த மூன்று கட்டங்களையும் வகை பிரித்துச் சொல்லுங்களேன்?” “முறையே கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்று மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம்.”

“தி.மு.க. கழகப் போர்வாள் வைகோ! ம.தி.மு.க. தலைவர் வைகோ! நெருங்கி வந்து பேசும்போது என்ன வித்தியாசம் காண்கிறீர்கள்?” “இரு நிலைகளுக்குமிடையே வித்தியாசம் காணாமல்தான் பழகுகிறேன்.”

“முரசொலியில் நீங்கள் எழுதிய உடன்பிறப்புக் கடிதங்களிலேயே உங்கள் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்திருப்பது எது? “நெருக்கடி காலத்தில் வள்ளுவர் கோட்டத் திறப்புவிழாவின்போது எழுதப்பட்ட கடிதம்.”“உங்களிடம் தலைசிறந்தது என்று நீங்கள் கருதும் அரிய பொக்கிஷம் ஒன்றை, உங்களைத் தூக்கி நிறுத்திய விஷயம் ஒன்றை ஸ்டாலினுக்குத் தரச் சொன்னால் எதைத் தருவீர்கள்?” “உழைப்பு.”

“நீங்கள் அம்மா பிள்ளையா? அப்பா பிள்ளையா?” “அம்மா பிள்ளைதான்.”



## எம்.ஜி.ஆர். இல்லாத உங்கள் அரசியல்

“முதன்முதலாகப் பார்த்த நாடகம், சினிமா நினைவிருக்கிறதா?”

“முதன்முதலாக, திருக்குவளையிலிருந்து திருவாரூருக்கு வண்டி கட்டிக்கொண்டு சென்று பார்த்தது 'பகவக்கீதை' நாடகம்தான். அதில், பிரமாண்ட மேடை அமைப்பைக் கொண்டு வருவார்கள். ஒரு காட்சிகூட நினைவிருக்கிறது... அரசனும் அரசியும் ஆரஞ்சுப் பழம் சாப்பிட்டுவிட்டுத் தோலைக் கீழே போடுவார்கள். அதை ஒரு பிச்சைக்காரன் எடுத்துச் சாப்பிடுவான். உடனே அரசி, 'பாருங்கள், நாம் போட்ட தோலை எடுத்து அவன் சாப்பிடுகிறான்' என்பாள். உடனே அரசன் அவனைச் சவுக்கால் அடிப்பான். அடி விழ விழ பிச்சைக்காரன் சிரித்துக்கொண்டே இருப்பான்.

தொடர்ச்சி 36ம் பக்கம்...






35 ம் பக்கத் தொடர்ச்சி ....

## கருணாநிதி பற்றி கருணாநிதி!



அரசன், 'எதற்காகச் சிரிக்கிறாய்?' என்று கேட்பான். உடனே, 'ஹதோலைத் தின்ற எனக்கே இத்தனை அடி என்றால் பழத்தைத் தின்ற உங்களுக்கு?' என்பான் பிச்சைக்காரன், இன்னும் என் நினைவில் நிற்கிற காட்சி இது. அதேபோல் நான் பார்த்த முதல் படம் சரஸ்வதி பாய், ரத்னாபாய் நடித்த 'நல்லதங்காள்.' அடுத்த நாள் படம் மாறிவிட்டது! பாகவதர், எஸ்.டி.சுப்புலட்சுமி நடித்த 'நவீன சாரங்கதாரா' பேசாப்படம் பார்த்தது இன்னும் நினைவில் நிற்கிறது.

"பிடித்த புராணக் கதை எது?"

"மகாபாரதம்தான். என் தந்தை சமஸ்கிருதத்தில் புலமைபெற்றவர். தேவாரம், திருவாசகம் எல்லாம் அவருக்கு அத்துப்படி. கவிதைகள் எழுதுவார். நல்ல வித்வான். அவர் பல முறை பாரதக் கதை சொல்லியிருக்கிறார். பாரதக் கதை பல முறை படித்துமிருக்கிறேன். மேலும் கிராமப்புறங்களில் பாரதக் கதைகள் அதிகமாக நடத்துவார்கள். விரும்பிக் கேட்பேன்.

" 'அடேங்கப்பா..!' என்று வாய்விட்டுப் பாராட்டிய விஷயம் ஏதும் உண்டா?"

"இந்தக் கேள்விக்குப் பதிலளிக்கு முன் ஒரு சம்பவம் நினைவுக்கு வருகிறது.' எங்கள் ஊரில் பெரியவர் ஒருவர். அவரை 'அடேயப்பா...' என்று அழைத்தால், நம்மைத் துரத்திக்கொண்டு ஓடி வருவார். குறும்புக்காரச் சிறுவர்களுக்கு இது ஒரு வாடிக்கை...

உண்மையில் நான் 'அடேங்கப்பா..!' என்று வியந்த ஒரு சம்பவம் உண்டு. பேரறிஞர் அண்ணா மறைந்தபோது, வானொலியில் நான் கவிதை படித்தேன். அதில், 'இதயத்தை இரவலாகத் தந்திடண்ணா! நான் வரும்போது கொண்டு வந்து சேர்ப்பேன்...' என்று எழுதியிருந்தேன். அதைக் கேட்ட அமரர் எஸ்.எஸ்.வாசன் போனில் என்னைப் பாராட்டினார். பிறகு எனக்கொரு கடிதமெழுதினார். 'இதயத்தை இரவலாகக் கேட்டிருக்கிறீர்கள். இது எந்தக் கவிஞருக்கும் தோன்றாத கற்பனை' என்று பாராட்டியிருந்தார்.

அந்தக் காலத்தில் வாசன், ஒருவரை மனந்திறந்து பாராட்டுகிறார் என்றால் அது மிகவும் மகிழத்தக்க விஷயம். அவருடைய பாராட்டில் அப்படி வியந்ததுண்டு."

"ஜோதிடத்தில் நம்பிக்கை உண்டா?"

"எப்போதுமே நம்பிக்கை இருந்ததில்லை. அவர்களாகவே வந்து ஆர்வமாகச் சொல்லும்போது அவர்களைப் புண்படுத்துவதில்லை."

"உங்கள் வீட்டு விருந்துக்கு அழைக்க விரும்பும், விரும்பிய ஐந்து நபர்..? (இறந்தவர்களாகக்கூட இருக்கலாம்)"

"பெரியார், ராஜாஜி, அண்ணா, காமராஜ், காயிதே மில்லத்."

"ஒரு வாரம் ஓய்வு கிடைத்தால் எங்கு சென்று எப்படிக் கழிக்க விரும்புவீர்கள்?"

"மைசூர். முன்பெல்லாம் அங்குள்ள பிருந்தாவன் ஓட்டலில் தங்கிதான் நிறைய படங்களுக்குக் கதை, வசனம் எழுதியிருக்கிறேன். ஓய்வெடுக்கவும், காலை நேரங்களில் வாக்கிங் போகவும் உகந்த இடம்."

"இன்றும் தங்கள் நினைவில் இருக்கும், சட்டசபையில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றைச் சொல்லுங்களேன்..."

"நான் முதல்வராக இருந்த நேரம்... எதிர்க்கட்சி வரிசையிலிருந்த ஹண்டே அடிக்கடி எழுந்து உரக்கப் பேசிக் காரசாரமாக விவாதிப்பார்.

அவரை, 'உட்கார்ந்திருந்தால் ஹண்டே... எழுந்தால் சண்டே' என்றேன்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்து திருச்செந்தூர் நடைப்பயணம் சென்றேன். ஆளுங்கட்சி அ.தி.மு.க. உறுப்பினர், 'கருணாநிதி திருச்செந்தூர் போனார். முருகனே அவரைப் பார்க்கப் பிடிக்காமல் கிளம்பிவிட்டார். இப்போது முருகன் சிலை அங்கில்லை' என்றார்.

நான் எழுந்து, 'திருச்செந்தூரில் முருகனின் வேல்தான் களவாடப்பட்டது என்று நினைத்தேன். சிலையும் களவாடப்பட்ட விஷயம் இப்போதுதான் தெரிகிறது' என்றேன்.

- இவையெல்லாம் இன்றும் நன்றாக நினைவிருக்கிறது.

"தங்களுக்கு மிகவும் எரிச்சலூட்டக் கூடிய சம்பவம் எது?"

"நிலைமைகளையெல்லாம் உணர்ந்த மிக வேண்டியவர்கள் சிலர், சில பதவிகளுக்கு ஆசைப்பட்டு வற்புறுத்தும்போது, நாம் இந்தப் பதவியில் இருப்பதால்தானே அவர்களுக்கு இப்படிக் கேட்கத் தோன்றுகிறது என்கிற வேதனை ஏற்பட்டு, நான் வகிக்கும் பதவிமீதே சலிப்பும் எரிச்சலும் ஏற்படுவதுண்டு." நன்றி ஆனந்தவிகடன்








# யேர்மனி
## மணிச் செய்திகள்!

வ.சிவராஜா

1
ஐரோப்பாவில் மட்டுமல்ல உலகில் இன்று பல மனிதர்கள் நிறைகூடியவர்களாகக் காணப்படுவதால் பல் வேறுபட்ட நோய்களுக்கு ஆளாகிறார்கள்.நாட்டு அரசுக்கும் வீண் பணச்செலவு ஏற்படுவதாகவும் அறிவிக்கப்படுகின்றது. யேர்மனியைப் பொறுத்த அளவில் சுமார் 82 மில்லியன் சனத்தொகையில் சுமார் 1.5 மில்லியன் பேர் அளவுக்கு அதிகமான உடற்பருமன் உடையவர்களாகக் காணப்படுகின்றார்கள். சுமார் 10.000 பேர் வருடாவருடம் உடற்பருமனைக் குறைப்பதற்காக சத்திர சிகிச்சை செய்துகொள்கிறார்கள் எனவும் யேர்மனிய சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2.
யேர்மனியிலுள்ள சுமார் 82 மில்லியன் சனத் தொகையில் சுமார் 25 மில்லியன் மக்கள் ஒவ்வாமை (அலர்ஜி) என்னும் நோயாளிகளாகக் காணப்படுகிறார்கள். இத்தொகையில் 36 வீதம்பேர் பெண்களும் 26 வீதம்பேர் சிறுவர்களும் எனவும் சுகாதார அமைச்சின் அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

3.
யேர்மனியில் வாழும் மக்களில் 62 வீதம் பேர் தேவையில்லாமல் சத்திர சிகிச்சை செய்துகொள்கிறார்கள் என சுகாதாரத்துறையினர் அறிவித் துள்ளனர். அதாவது முகத்தை, முன்னழகு, பின்னழகு, மற்றும் உடற்பாகங்களை அழகுபடுத்துதலும் கூட்டிக் குறைப்பதற்காகவும் இப்படியாகச் சந்திர சிகிச்சை செய்துகொள்வதால் சுகாதாரப் பகுதியி னருக்கும் வருடாவருடம் பெருந்தொகையான பணச் செலவுகள் ஏற்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

4. முகம் அழகுபடுத்துதல் இன்று உலகில் ஒரு நவ நாகரீகமான விடையமாக மாற்றமடைந்துள்ளது. எவ்வளவுக்கு எவ்வளவு வசதி வாய்ப்புக்கள் கூடுகின்றதோ அந்த அளவுக்குத் தமது முகத்தை அழகுபடுத்தும் விடையம் ஒரு பாசனாகவும் மாறிவிட்டது. யேர்மனியில் முகத்தை அழகு படுத்தியவர்களின் ஒரு கணிப்பீட்டைப் பார்த்தால் 2007ல் அழகுபடுத்தியவர்கள் ஆண்கள் 10 வீதம்பேர் பெண்கள் 78 வீதம்பேர் 2017ல் அழகுபடுத்தியவர்கள் ஆண்கள 22 வீதம்பேர் பெண்கள் 90 வீதம்பேர் ஆண்களில் 76 வீதம்பேரும் பெண்களில் 63 வீதம்பேரும் திட்டமிட்டு தமது உடல் அழகைமாற்றிக் கொள்கிறார்களாம்.

5.
100 00 00 000 இது என்ன இலக்கம் என ஆச்சரியப்பட வேண்டாம். அதாவது எங்களுடைய கணக்கில் 100 கோடி யூரோ. ஆம் கடந்தவருடம் யேர்மனி நாட்டிற்கு ஏற்பட்ட சுகாதாரப்பகுதியின் வருடாந்த மொத்தச் செலவாகும். இங்கு முறைப்படி பதிவுசெய்து வேலை செய்பவர்களின் மாதச் சம்பளத்தில் ஒரு தொகை மருத்துவச் செலவுகளுக்கென கழிக்கப்படுவது வழக்கமாகும். ஏனையோருக்கு அரசுதான் செலவு செய்துவருகின்றது. இப்படியாக வேலைசெய்வோரிடம் மாதாந்தம் சம்பளத்தில் கழிக்கும் தொகை கூடிவிட்டதாக 44 வீதம் பேர் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளதாக அரச புள்ளிவிபரத்திணைக்களத்தின் கணிப்பீடு ஒன்று தெரிவித்துள்ளது.

6.
சிறுவர் முதல் பெரியவர்கள்வரை இன்று சீனி வருத்த நோயாளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டு செல்கின்றது. இது உலகம் முழுவதும் ஒரு அச்சுறுத்தலாகக் காணப்படுகின்றது. இதனால் சீனி, மற்றும் சீனி உற்பத்தி உணவுப் பொருட்களின் உற்பத்தியைக் குறைக்கும்படியும் இனிப்புப் பண்டங்களின் விலைகளை அதிகரிக்கச் செய்யும்படியும் 52 வீதமான மக்கள் விருப்பம் கொண்டிருப்பதாகவும் மற்றுமொரு அரச புள்ளிவிபரம் தெரிவிக்கின்றது.

7.
யேர்மனியக் குழந்தைகள் பற்றிய ஆய்வை சிறுவர் நலப்பகுதியினர் மேற்கொண்ட போது குழந்தைகள் நடைபயில ஆரம்பிக்கும் வயதைக் கணிப்பீடு செய்துள்ளது. அதன்படி பார்த்தால்..

11 மாதத்தில் நடப்பவர்கள் - 24 வீதம்பேர்
1 வயதில் நடப்பவர்கள் - 39 “
தாமதித்து நடப்பவர்கள் - 37 “

8.
மனிதர் பிறந்து இறக்கும்வரை நோய்களும் இருந்துகொண்டுதான் இருக்கும். புதுப்புது நோய்களும் புதுப்புது மருந்துவகைகளும் அன்றாடம் அறிமுகமாகிக்கொண்டுதான் இருக்கின்றன. யேர்மனி நாடு வைத்தியத் துறைக்குப் பெயர்போன நாடக விளங்குகின்றது. இந்த நாட்டில் தற்போது சுமார் 7.600 மருந்தகங்கள் இயங்கிக் கொண்டிருப்பதாக சுகாதாரப் பகுதியினர் அறிவித்துள்ளனர்.

9.
தேனி என்னும் பூச்சியினங்கள் ஒரு சிலருக்குப் பல தீமைகள் ஏற்பட்டாலும் பல பேருக்கு நன்மையும் ஏற்படுகின்றது. அதாவது தேனிவளர்ப்பையும் பலர் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள். யேர்மனிய ஆய்வின்படி பார்த்தால்..590 வகையான தேனீக்கள் உலகில் உலாவருகின்றனவாம். மகரந்தச் செயர்க்கை மற்றும் பல தேவைகளுக்கு 71 வீதமான தேனீக்கள் பயனுள்ளதாக இருக்கின்றனவாம். யேர்மனியர் ஒருவர் ஒரு வருடத்தில் சராசரியாக 1.1 கிலோக்கிராம் தேன் உணவுகளை உண்கிறார்களாம். யேர்மனியில் தற்போது சுமார் 1.30.000 மக்கள் காட்டுப்பிரதேசங்களில் குடிவாழ்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

10.
உலகில் நடைபெறும் போர், மற்றும் உள்நாட்டுப்போர், வறுமை , பசிபட்டினியால் பல நாடுகளிலிருந்து ஐரோப்பாவிற்கு வரும் அகதிகளின் எண்ணிகை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றதாம். 2017ம் ஆண்டில் மட்டும் 1.98.255 பேர் யேர்மனிக்குள் அகதிகளாகத் தஞ்சம் கோரியிருக்கிறார்கள். ஐரோப்பாவில் அகதிகளை ஏற்றுக்கொண்ட நாடுகளில் யேர்மனிதான் முதல் நாடாக விளங்க, இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடிகளும் அரசியல் வாழ்வியல் நெருக்கடிகளும் அதிகரித்து வருவதாக மக்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். ஒஸ்திரியா, கிறீஸ்லாந்து மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் ஊடாகவே பெருமளவு அகதிகள் வந்திருப்பதாகவும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அகதிகள் பிரிவு அறிவித்துள்ளது.






# தமிழகத்தை ஆண்டவர்

**கலைஞர் அவர்களே,**

**ஜூட் பிரகாஷ்**

எண்பதாண்டுகளிற்கு மேலாக அயராது உழைத்த நீங்கள், மெரீனா கடற்கரையில், உங்கள் அண்ணாவிற்கு பக்கத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில், உங்களுக்கு கடிதம் எழுதி அலுப்பு தாறது பிழையா என்று ஒருக்கா யோசித்தேன்.
இப்ப எழுதாவிட்டால் எப்ப எழுதுவது என்று யோசித்து விட்டு, உங்களை, உங்களது தமிழை, உங்களது அரசியல் பயணத்தை தூர நின்று, தொலைக்காட்சியில் பார்த்தும், வானொலியில் கேட்டும், பத்திரிகைகளிலும் புத்தகங்களிலும் வாசித்தும், அறிந்த ஒரு சாதாரண புலம்பெயர் தமிழனாக இந்தக் கடிதம் எழுதத் தொடங்கினேன்.
கடிதம் எழுதுவது உங்களுக்கு கை வந்த கலை. நாள் தோறும் முரசொலியில் உங்களது கட்சியினருக்கு நீங்கள் எழுதிய "என் உயிரினும் மேலான உடன் பிறப்புகளே" என்று விளித்து எழுதிய கடிதங்கள் பொக்கிஷங்கள், எண்ணிக்கையடிப்படையில் அது ஒரு உலக சாதனையாகக் கூட இருக்கலாமாம்.

எந்தப் பிரச்சினை வந்தாலும் நீங்கள் முதலில் தூக்கும் ஆயுதம் கடிதம் தான். தமிழீழத்தில் இறுதி யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த போது, அந்த யுத்தத்தை இந்திய மத்திய அரசு தலையிட்டு நிறுத்தச் சொல்லி, நீங்கள் கடிதம் கடிதமாக எழுதிக் கொண்டேயிருந்தீர்கள்.
ஏப்ரல் 22, 2009 அன்று உங்கள் உடன்பிறப்புக்களிற்கு எழுதிய விரிவான கடிதத்தில் "எனக்கு வழி தெரியவில்லை- பொறுப்பான இடத்தில் இருக்கிறோமே- கையறு நிலையில் நம் இனத்தைக் காப்பாற்ற இயலாத வகையில் இருக்கிறோமே" என்று உங்களது இயலாமையை வெளிப் படையாக அறிவித்துவிட்டு, ஈழத்தில் நடைபெறும் கொடூரத்தை தாங்க முடியாமல் இருக்கும் உங்கள் மனவேதனையை கொட்டித் தீர்த்தீர்கள்.

உங்களது நிலைமையை உணர்வோடு பதிவுசெய்த இந்தக் கடிதம் எழுதி ஐந்தாவது நாள், ஏனோ நீங்கள் திடீரென முடிவெடுத்து, காலை உணவுக்கும் மதிய உணவுக்கும் இடையில், மரீனாவில், மனைவியாரும் துணைவியாரும் புடைசூழ, உண்ணாவிரதம் இருந்த அந்தக் காட்சிகள் தான் இன்றுவரை எங்களோடு பயணிக்கின்றன.
உங்களது இயலாமையை அறிவித்த தன்னிலை விளக்கம் மட்டுமல்ல, ஆண்டாண்டுகளாக நீங்கள் எங்களுக்காக செய்த போராட்டங்களும், இழந்த ஆட்சியும், கண்டும் காணாமலும் செய்த உதவிகளும், எங்கள் உயிரினும் மேலான தமிழ் மொழிக்கு நீங்கள் ஆற்றிய பங்களிப்பும், தமிழுக்கு செம்மொழி அந்தஸ்து பெற்றுத் தந்ததும், என்று அனைத்தையுமே அந்த உண்ணாவிரத நாடகக் காட்சியால், எங்களது நினைவலைகளிலிருந்து அழிந்து விட்டது.
தொண்ணூறுகளின் இறுதியில் இருந்து இந்திய மத்திய அரசில் செல்வாக்கு செலுத்த வல்ல ஒரு பிராந்திய தலைவராக உலாவந்த நீங்கள், எங்கள் இனம் யுத்தத்தில் அழிந்து கொண்டிருந்த போது கொடுத்த அழுத்தம் போதாது என்பதே இன்றும் எங்களது ஆறாத கவலையாக இருக்கிறது. உங்களது குடும்ப உறுப்பினர்கள் மீது சுமத்தப்படக்கூடிய ஊழல் வழக்குகளைக் காட்டி, பயமுறுத்தி உங்களை இந்திய மத்திய அரசு அடக்கி விட்டதாக எங்களில் பலர் இன்றும் நம்புகிறோம். "அடைந்தால் திராவிட நாடு இன்றேல் சுடுகாடு" என்று முழங்கிய நீங்கள், மாநில ஆட்சியை தேர்தலில் வென்றது தொட்டு, மாநிலங்களின் உரிமைகளை வெல்வதற்கான ஒரு போராளியாகவே மாறினீர்கள். பஞ்சாபைப் போல் இயற்கை வளங்களும், கேரளாவைப் போல் மூளை வளமும், உத்தர பிரதேசத்தைப் போல அரசியல் பலமும் அற்று பின்தங்கியிருந்த தமிழகத்தை, இந்தியாவின் முன்னனி மாநிலங்களில் ஒன்றாக மாற்றிய பெருமை உங்களையே சாரும் என்று பலரும் புகழும் போது, தனிநாடு கேட்டுப் போராடி, ஒரு மிகச்சிறந்த நிழல் அரசாங்கத்தையே நடாத்திக்காட்டிய எங்களின் இன்றைய கையறு நிலைமையை நினைத்து வேதனைப்படத் தான் முடிகிறது.

1976ம் ஆண்டில், உங்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டு வழக்கில், இந்திரா காந்திக்கு பயந்து இந்தியாவின் பிரபல வக்கீல்கள் உங்களிற்காக வாதாட முன்வராத போது, உங்களிற்காக கட்டணம் எதுவும் வாங்காமல், பிரயாணச் செலவைக் கூட தானே ஏற்றுக் கொண்டு வாதாட வந்த வக்கீல், எங்கள் ஜீஜீ பொன்னம்பலம் என்பதையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

1977 ஓகஸ்ட் மாதம் ஈழத் தமிழ்மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவாக தமிழ்நாட்டில் முதன் முதலாக பேரணி நடாத்தியதும் நீங்கள் தான். அந்தப் பேரணியை தொடர்ந்தே, தமிழீழத்தில் இயங்கிக் கொண்டிருந்த இயக்கங்களிற்கு தி.மு.க தலைவர்களும் தொண்டர்களும் அடைக்கலமும் ஆதரவும் தரத் தொடங்கினார்களாம்.
எண்பதுகளின் ஆரம்பத்தில் எங்களது விடுதலைப் போராட்டம் வீரியம் பெறத் தொடங்கிய காலங்களில், ஆகாஷவாணி செய்திகளிலும் மாநிலச் செய்திகளிலும், எங்களுக்காக ஓங்கிக் குரல் கொடுத்தவர்களில் நீக்கமற நிறைந்திருந்த பலரில் நீங்களும் முக்கியமானவர். அன்றிலிருந்து யுத்தத்தின் இறுதிக் காலங்கள் வரை உங்களை எங்களின் தீவிர ஆதரவாளனகாவே பார்த்து வந்தோம், அதனால் தான் என்னவோ உங்களில் அளவுக்கதிகமான நம்பிக்கையும் வைத்து விட்டோம்.

1990ம் ஆண்டு மார்ச் மாதம், இலங்கையிலிருந்து திரும்பிய இந்திய இராணுவத்தின் கடைசிப் படையணிக்கு, சென்னை துறைமுகத்தில் நடந்த வரவேற்பை புறக்கணித்து உங்களது இனப்பற்றை வெளிக்காட்டிய போது நாங்கள் மெய்யாகவே புளங்காகிதம் அடைந்தோம். அதற்கு முந்தைய மாதம் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்தையும் அரசியல்துறைப் பொறுப்பாளர் யோகியையும் நீங்கள் சந்தித்தது எம்மத் தியில் நம்பிக்கை கலந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது.
ஐம்பதுக்கிலும் அறுபதுகளிலும் ஹிந்தி எதிர்ப்பு மொழிப் போருக்கு தி.மு.க அளித்த தலைமையால் ஆட்சிக் கட்டிலேறிய உங்களிற்கு, ஈழத் தமிழர் பிரச்சினையை நீங்கள் கையில் எடுத்த நாள் தொட்டு, ஆட்சியிழப்பும் அவப்பெயரும் தொடரத் தொடங்கின. எங்களது பிரச்சினையை நியாயமாக கையாண்ட இந்திரா காந்தியும் ஆயுசும் பொறுத்த நேரத்தில் இறந்து விட்டது எங்களது துர்ப்பாக்கியம் மட்டுமல்ல, உங்களது துர் அதிர்ஷ்டமும் தான்.

இந்தியா கன்னியாகுமரியில் முடியவில்லை, அங்கிருந்து தான் ஆரம்பிக்கிறது என்பதைக் காட்ட கன்னியாகுமரி கடற்கரையிலிருந்து இமய மலையை நோக்கிய வண்ணம், 133 அடி உயரத்தில் நிமிர்ந்து நிற்கும் வள்ளுவர் சிலையை நிறுவ உத்தரவிட்டீர்களாம். கன்னியாகுமரி வள்ளுவர் சிலையும் சென்னையில் இருக்கும் வள்ளுவர் கோட்டமும், இன்னும் பல தமிழ் மொழியினதும் இனத்தினதும் வரலாற்றை எடுத்தியம்பும் கட்டிடங்களும் நிகழ்வுகளும் உங்கள் எண்ணத்தில் உதித்த தமிழ் அடையாளங்கள்.

எங்களை நம்பி, எங்களால் எங்களுக்காக நாங்கள் நடாத்திய விடுதலைப் போர், எங்களை மீறிய சர்வதேச சக்திகளாலும், எங்களுக்குள் நிகழ்ந்த சதிகளாலும், மௌனிக்கப்பட்டு, நாங்கள் எதிரியிடம் சிறைபடவும் சரணா கதியடையவும் காலம் (அவ)கோலம் போட்டது. காலம் போட்ட அந்தக் கோலத்தில், நீங்களும் நன்றாகவே அடி வாங்கினீர்கள்.

**"மரணத்தினால் சில கோபங்கள் தீரும்,**
**மரணத்தினால் சில சாபங்கள் தீரும்"**

என்று எழுதினார் கவிஞர் வைரமுத்து. உங்களுக்கும் இது பொருந்தும் என்று நம்புவோம். நீங்கள் உங்கள் கடிதங்களை முடிக்கும் அதே சொற்களுடன் இந்தக் கடிதத்தையும் நிறைவு செய்வதே உங்களுக்கு செலுத்தும் இறுதி மரியாதையாகவும் இதய அஞ்சலியாகவும் இருக்கும்.
"விடைபெறுகிறேன்..."


Milin Impex GmbH

JM

எமது விலைகளை அறிய
எமது இணையத்தளத்தை
பார்வையிடவும்

Web :www.milinimpex.de



எமது நிறுவனம் Mo-Sa 10.00 இருந்து 18.00 வரை உங்களுக்காகத் திறந்திருக்கும்

Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17/ 28 Fax: 0231 18 15 288



## அப்பப்ப ஒரு பேச்சுக்குச் சொன்னால் அதைப்போய் பெருசு படுத்தாதீங்க!

சென்னை: கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் ரஜினி நடித்து வரும் படத்தில் அவருக்கு ஜோடியாக மாளவிகா மோகனன் நடிக்க உள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன. கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் ரஜினி நடிக்கும் படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு டார்ஜிலிங்கில் நடந்தது. இந்நிலையில் படத்தில் சிம்ரன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். இனிமேல் தன் மகள் வயது பெண்களுடன் டூயட் பாடப் போவது இல்லை என்று ரஜினி காலா இசை வெளியீட்டு விழாவில் தெரிவித்தார். இதையடுத்து சீனியரான சிம்ரன் ஹீரோயினாக ஒப்பந்த மானார். இந்நிலையில் ரஜினிக்கு ஜோடியாக நடிக்க மாளவிகா மோகனனை ஒப்பந்தம் செய்துள்ளார்களாம். மலையாள படங்களில் நடித்து வந்த மாளவிகா மஜித் மஜிதியின் பியான்ட் தி கிளவுட்ஸ் படத்தில் நடித்துள்ளார். பியான்ட் தி கிளவுட்ஸ் ஆங்கிலம் மற்றும் இந்தியில் வெளியானது. மாளவிகா ரஜினியின் மகள்களை விட வயதில் மிகவும் சிறியவர். அப்படி என்றால் ரஜினி காலா இசை வெளியீட்டு விழாவில் சொன்னதை செய்யவில்லையா என்ற கேள்வி எழுந்துள்ளது. ரஜினி படத்தில் த்ரிஷாவும் இருக்கிறார் என்று கூறப்பட்டது. மாளவிகா ரஜினிக்கு ஜோடி என்றால் அப்போ த்ரிஷா? அதில் என்ன மூன்றாவதாக இருந்துவிட்டுபோகட்டுமே!

Me Rata Mage Rata/ FTT




"இந்த நாடு எந்தன் நாடு" எனும் சிங்கள மொழி இசையல்பம் ஒன்றில் தமிழ் நடிகை நவயுகா குவேனியாக நடித்துள்ளார்.இந்த இசை அல்பத்தை நீங்கள் U tube இல்பார்க்கலாம். சிங்கள மக்களின் மனதை காட்டும் சிறந்த அல்பம் இது.






## ஆர்யாக்கு ஞாபக மறதி காதலிபாடு திட்டாட்டம்தான்!

ஞாபகமறதி குறைபாடோடு இருக்கும் நாயகன், அதனால் ஏற்படும் பிரச்சினைகளை எப்படி சமாளிக்கிறார் என்பதை நகைச்சுவையாகச் சொல்லும் படம் "கஜினிகாந்த்". கதை இது தான் தீவிர ரஜினி ரசிகரான நரேன் தனது மகனுக்கு (ஆர்யா) ரஜினிகாந்த் என பெயர் வைத்து பில்லா, ரங்கா, பாட்ஷா ரேஞ்சுக்கு மகன் மாசாக வரணும்னு ஆசைப்படுறார்.

ஆனால் மகனோ தர்மத்தின் தலைவன் ரஜினிகாந்த்தின் மறுபிறவியாக வளர்கிறார். படத்தில் ஆர்யாவுக்கு ஞாபகமறதி குறைபாடு. ஆதனால அவர எல்லாரும் கஜினிகாந்துனு கலாய்க்கிறாங்க. ஏதாவது ஒரு விஷயத்த செய்யும் போது, நடுவில் ஏதாவது நடந்துவிட்டால், முன்னால் செய்த வேலையை சுத்தமாக மறந்துவிடும் ஆர்யாவுக்கு யாருமே பொண்ணு தர மாட்டேன் என்கிறார்கள். அதில் ஒருவர் ஹீரோயின் சாயிஷாவோட அப்பா சம்பத். ஆனா ஆர்யாவுக்கு சாயிஷா மேல காதல் மலர, அவர் துரத்தி துரத்தி காதிலக்கிறார். வழக்கம் போல ஒரு கட்டத்தில் சாயிஷாவும் ஓ.கே. சொல்ல, "நான் நோ சென்னா பையன நீ எப்படி காதலிக்காமென்று" வில்லனா மாறுகிறார் சம்பத். இதை எப்படி சமாளிச்சு நம்மாளு காதலியை கரம் பிடித்தார் என்பது நகைச்சுவை சரவெடியான மீதிக்கதை.

ஹர மகாதேவகி, இருட்டு அறையில் முரட்டுகுத்துனு தன்னோட முந்தைய இரண்டு படங்களையும் வயதுவந்தவர்களுக்கான படமா கொடுத்து கெட்ட பேர சம்பாதிச்ச சந்தோஷ், தன்னாலயும் குடும்ப படங்களை பொழுதுபோக்குப்படமாக எடுக்க முடியும் என நிரூபிக்கவே இந்த படத்த இயக்கி இருக்கிறார். அவரோட முயற்சி வீண் போகவில்லை. கஜினிகாந்த் ஒரு முழுமையான குடும்பப்படம்தான்.

Nimal
Video & Photo
சிறந்த ஒளிப்பதிவு!
0049 152 33 83 29 55
namilvideo@gmail.com



ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
தரமும் மலிவும் நிரந்தரம்!
ஆசிய ஆபிரிக்க மற்றும், இலங்கை, இந்திய பலசரக்குப் பொருட்கள்,மரக்கறி வகைகள், கடல் உணவுவகைகள், அனத்திற்கும், எம்மை நாடுங்கள்.

Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281
Handy:01520 900 90 30

R.Ragunathan
Deutschebank
IBAN: DE55 3907 0024 0474 1153 00
Bic:DEUTDEDB390
Email: mediajara@gmail.com

Mönchengladbach
Asiatischer super markt
Sittard str-21
41061-Mönchengladbach
Tel: 02161- 9028388
Fax:02161- 9028399
T.Anpalagan

துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven




உலகு எங்கும் வலம்வர
தரமான விமானப் பயணத்தற்கு
EurAsian - Tours
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
துரித பண
மாற்றுச் சேவை!
VALUTRANS
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
Further Str. 156
41462 Neuss
info@eurasian-tours.com
Emirates
LITTLE INDIA வின் மற்றுமொரு சேவை...
Tel: 02131 273 692
இந்தியா– இலங்கை– விசா பெற்றுத்தரப்படும்!


Jasmine Silk House
புத்தம் புது வரவுகள் என்றும் எமக்கு பண்டிகை நாட்களே!!!
என்றும் மலிவாக தரமாக திருமணப் பட்டுப்புடவைகள் மற்றும்
பாட்டிசாறிகள், சிறுவர்களுக்கான ஆடைகள், பஞ்சாபிகள்,
அனைத்தும் புத்தம், புது டிசைன்களில், எம்மிடம் உண்டு.
நம்மை நாடிவரக் காரணம், அதுவே!
HP:0173 1937 325
Tel:02102 844744 'Jasmin Silk House" Fester Str.50- 40882 Ratingen


ASIA BAZAR
துரித பண மாற்றுச் சேவை!
Ria Money Transfer
MoneyGram
VALUTRANS
ஆசிய,ஆபிரிக்கஉணவுவகைகள்
வியாழன் சனிக்கிழமை தோறும்
இலங்கை,இந்திய உடன் மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.இன்னும் பல...
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


Stuttgart நகரில்...
Pirruntha Silks
தரம்மிக்க தங்க நகைகள் நங்கையர் விரும்பும்
நவீன டிசைன்களில் அமைந்த
சேலைகள் மற்றும் இமிற்ரேசன் நகைகள்
அனைத்திற்கும் நீண்டகாலநம்பிக்கை
மிக்க ஸ்தாபனம்
பிருந்தாஸ்
0170 334 4059
Ludwig str.87a - 70197 Stuttgart
Tel: 0711 615 8976


Photography
Video Filming
Album Making
Graphic Desiging
Your Dreams Comes True
AKR Visualizers
BOOK A SESSION NOW AT
professional photography & cinematography
0049 231 5897 7140
0049 162 803 1647
Rheinische Str. 56
44137 Dortmund
akrvisualizers
akrvisualizers
akrvisualizer@gmail.com


HSB
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
069-97 693 374
info@saravanaabhavan.de
Kaiserstraße 66, 60329 Frankfurt am Main
India Singapore Malaysia Thailand Hong Kong U.A.E. K.S.A. Oman Qatar Bahrain Kuwait U.K. France Germany Australia South Africa Canada U.S.A.


Dortmund மாநகரில்
தாயக மரக்கறிகள்
பழவகைகள் மற்றும்
உணவுப் பொருட்களை
மொத்தமாக
பெற்றுக்கொள்ள
நாடுங்கள்
Snacks
Getreide
Gewürze
Getränke
Tiefkühlkost
Obst &Gemüse
Hülsenfrüchte
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Star - Impex
Asiatische & Afrikanische
Lebensmittel Grosshandel
Lebensmittel Grosshandel e.K.
Franziusstrasse.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231/8602696 Fax : 0231/8602698
E-mail : Info@star-impex.de Web : www.star-impex.de
Tel:0231 860 26 96
StaR Impex :
Inh :K.Sivasubramaniam